janasakthi.in | janasakthieditor@gmail.com info.janasakthi@gmail.com | janasakthitholaikatchi | www.facebook.com/Newsjanasakthi janasakthitholaikatchi



புதியதோர் உலகம் செய்வோம்

# ஜனசக்தி

மக்கள் வாரஇதழ்

மலர் 85 | 2022 ஜூன் 26 - ஜூலை 02 | விலை: ரூ.15 | 16 பக்கங்கள் | இதழ் 12




**செங்கடலை காண வேண்டாமா?**
நடைபெற்றுவரும் இடைநிலை அமைப்புகளின் மாநாடுகள், மாவட்ட, மாநில மாநாட்டைப் போன்று வெகு >>> ப 02



**அரசியலுக்கு அப்பால்**
கடந்த 2014ல் பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தால் ஆண்டுக்கு இரண்டு கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்ற முழக்கத்தோடுதா >>> ப 03



**பௌத்தம்**
இந்தியாவில் மிக முக்கியமான மதங்களில் ஒன்று பௌத்தம். சமணம் தோன்றிய அதே காலத்தில் உருவானது பௌத்தம் ஆகும். ஒரு காலத்தில் நமது நாட்டில் செல்வாக்கு மிகுந்த மதமாக பௌத்தம் ஃ>>> ப 05



## உள்ளாட்சி தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற

# துணை நிற்போம்

### மாநிலம் தழுவிய ஆர்ப்பாட்டத்தில் இரா.முத்தரசன் பேச்சு

**உள்ளாட்சித் தொழிலாளர் குறைதீர் ஆணையம் அமைக்க வேண்டும். புதிதாக பொறுப்பேற்றுள்ள உள்ளாட்சித் தலைமைகளின் தொழிலாளர் விரோத நடவடிக்கைகளை (Unfare Labour practice) தடுத்து நிறுத்திட வேண்டும்.**

மாநகராட்சி, நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊராட்சிகளில் ஒப்பந்த தொழிலாளர் முறையைக் கைவிட வேண்டும். உள்ளாட்சி அமைப்புகளில் சுய உதவிக்குழு, காண்ட்ராக்ட், அவுட் சோர்சிங் முறைகளில் பணியாற்றி வரும் தூய்மைப் பணியாளர்கள் உள்ளிட்ட அனைவரையும் நேரடிப்பணியாளர்களாக்க வேண்டும். 1982 ஆம் ஆண்டின் தொழிலாளர்களை நிரந்தரப் படுத்துதல் சட்டப்படி 480 நாட்கள் பணி புரிந்தவர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்க வேண்டும்.

மாநகராட்சி மற்றும் நகராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மை, கழிவுநீர் அகற்றுதல், குடிநீர் வழங்குதல், தெருவிளக்கு பராமரித்தல் உள்ளிட்ட பணிகளை அவுட் சோர்சிங் முறையில் தனியாரிடம் ஒப்படைக்கவும், வேலைப்பளுவை அதீதமான அளவுக்கு உயர்த்தியும், ஊதியத்தை கணிசமாக குறைத்தும் வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநரின் 2.10.2021 தேதிய சட்ட விரோத உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டும். உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு உள்ளாட்சித் துறை ஏஐடியூசி பணியாளர் சம்மேளனம் சார்பாக தமிழகம் தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அது குறித்த விவரங்கள் வருமாறு:

அரியலூர் மாவட்டத்தில் ஜெயங்கொண்டம் நகராட்சி அலுவலகம் முன்பு 21.06.2022 அன்று ஏஐடியூசி மா. தம்பிசிவம் தலைமையில் துப்புரவு தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலச் செயலாளர் இரா. முத்தரசன் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்று பேசிய போது, ‘‘துப்புரவு பணியாளர் பல ஆண்டுகாலம் குறைந்த சம்பளத்தை பெற்றுக் கொண்டு பணிசெய்து வருகிறார்கள். இவர்களை நிரந்தரப்படுத்த அரசு முன்வர வேண்டும். இவர்களது கோரிக்கைகளை தீர்வு கண்டிடும் பொருட்டு அதிகாரம் பெற்ற ‘‘உள்ளாட்சி தொழிலாளர் குறைதீர் ஆணையம்‘‘ அரசு அமைத்திட வேண்டும். ஜெயங்கொண்டம் நகராட்சியில் பணி செய்து வரும் ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மாவட்ட ஆட்சியர் உத்தரவிட்ட தினக்கூலி ஊதியத்தை கூட 52 மாத காலம் அமுலாக்காமல் இருப்பது என்ன நியாயம் ? உடனடியாக அமுலாக்கி அதற்கான நிலுவைத் தொகையை உடனே தொழிலாளர்களுக்கு வழங்கப்பட வேண்டும். சட்டபூர்வமான வருங்கால வைப்பு நிதி இருப்பு கணக்கு கொடுத்தல், இ.எஸ்.ஐ. மருத்துவ குடும்ப அட்டை வழங்குதல்,சீருடை பாதுகாப்பு சாதனங்கள் முதலியன முறையாக வழங்கப்பட வேண்டும். தொழிலாளர்கள் தங்களுக்கு உரிய கோரிக்கைகளை சொன்னால் வேலையை விட்டு நீக்குவோம், சஸ்பென்ட் செய்வோம் என்று தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்களெல்லாம் மிரட்டுவது சரியாக இருக்காது. தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கைகளை அமைச்சர் கே. என்.நேரு அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்று தீர்க்க முயலுவோம். இத்தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி துணை நிற்கும்.’’ என்று சிறப்புரையாற்றினார்.

ஆர்ப்பாட்டத்தில் உள்ளாட்சித் துறை பணியாளர் சம்மேளன மாநில செயலாளர் டி.தண்டபாணி, சிபிஐ மாவட்ட செயலாளர் இரா. உலகநாதன்,மாவட்ட ஏஐடியூசி தலைவர் ஆர். தனசிங் ஆகியோர் பேசினர். தூய்மைப் பணியாளர் சங்க நிர்வாகிகள் ச.கொளஞ்சி, சிவக்குமார், சுரேஷ், துரை,சௌரியப்பன், மா.சிலம்புசெல்வி, பி.ஜெயா, பு.லெட்சுமி, என்.ராணி, எஸ்.சீதா, ரேவதி உட்பட நிரந்தர மற்றும் ஒப்பந்த தூய்மை பணியாளர்கள் திரளாக கலந்து கொண்டனர். கட்சியின் மாவட்ட மாநாட்டு செலவிற்காக ரூ.5 ஆயிரம் நிதியாக பொதுகூட்ட மேடையில் ஜெயங்கொண்டம் நகராட்சி ஏஐடியூசி சார்பாக மாநில செயலாளர் இரா. முத்தரசன் அவர்களிடம் மா. தம்பிசிவம் மற்றும் தூய்மைப் பணியாளர்கள் வழங்கினார்.

திருவாரூரில் சங்க தலைவர் ஆர்.சாந்தகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் க.மாரிமுத்து எம்எல்ஏ. மாவட்ட செயலாளர் ஆர்.சந்திரசேகர ஆசாத், தலைவர் ஜெ.குணசேகரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு என்.மனோகரன் தலைமையில் ஆர்பாட்டம் நடைபெற்றது.சம்மேளனப்பொதுச் செயலாளர் எம்.இராதாகிருஷ்ணன், ஏஐடியூசி மாவட்ட பொது செயலாளர் கே.மணி ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினர். ஏஐடியூசி மாவட்டத் தலைவர் எம்.மாதேஸ்வரன், மாவட்ட துணை தலைவர் சுதர்சனன்,துணை செயலாளர் ஆர்.நடராஜன், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் ஆர்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஈரோடு மாவட்ட உள்ளாட்சித்துறை பணியாளர் சங்கம் சார்பில் ஈரோடு சூரம்பட்டி நால்ரோட்டில் சங்கத் தலைவரும், ஏஐடியுசி மாநிலச் செயலாளருமான எஸ்.சின்னசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்ட பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன், ஏஐடியுசி மாவட்டச் செயலாளர்கள் வி.செல்வராஜன், எம்.குணசேகரன், ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் டி.ஏ.செல்வம், சங்கச் செயலாளர் ஆர்.மணியன், பொருளாளர் பி.ரவி, துணைத் தலைவர் எஸ்.மூர்த்தி, துணைச் செயலாளர் ஆர்.ஞானசேகரன் ஆகியோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். கே.எம். ஜெயபாரதி கோரிக்கை முழக்கம் எழுப்பினார். இதில் 15 பெண்கள் உள்ளிட்ட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகரில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகில் ஆர்ப்பாட்டம் மாநகர கூட்டமைப்பு ஒருங்கிணைப்பாளர் என் செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. தமிழ்நாடு அண்ணல் அம்பேத்கர் சுகாதாரம் துப்புறவு பொதுப் பணியாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் செல்வம், தலைவர் செல்வராஜ், துணைச் செயலாளர், மருதாசலம் ஏஐடியுசி ஜீவா சுகாதாரத்துறை செயலாளர் கோயம்புத்தூர் லேபர் யூனியன் பொதுச்செயலாளர் பாலகிருஷ்ணன், கட்டிட தொழிலாளர் சங்கத்தின் தலைவர் எஸ் பி தியாகராஜன் துணை தலைவர் சோமசுந்தரம் மண்டல செயலாளர்கள் உள்ளிட்ட 400க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்

தேவகோட்டை நகராட்சி பணியாளர்கள் ஆர்பாட்டம் நடத்தினர். நகர்மன்ற உருப்பினர் தொழிலாளியை தாக்கியதை கண்டித்தும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

சத்தியமங்கலத்தில் ஏஐடியுசி மாவட்டத் துணைத் தலைவர் இரா.ஸ்டாலின் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பவானி சாகர் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் பி.எல்.சுந்தரம் எக்ஸ்.எம்.எல்.ஏ. கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். ஏஐடியுசி நிர்வாகிகள் தா.சந்திரன், செ.செயராசு, கே.சக்திவேல், எம்.மோகன், ஆர்.அருள்சாமி, கே.ராமசாமி, எம்.சுரேந்தர், எஸ்.சி.நடராஜ், எஸ்.மகேந்திரன், பி.ஏ.வேலுமணி மற்றும் 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

காரைக்குடியில் நகராட்சி ஏஐடியூசி துப்புரவு தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சம்மேளன நிர்வாக்குழு உறுப்பினர் எல்.ராமச்சந்திரன் உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர்.

தேனி பெரியகுளம் நகராட்சி முன்பு தேனி மாவட்ட அனைத்து துப்பரவு தொழிலாளர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க கௌரவத்தலைவர் கே.பிட்சிமுத்து உள்ளிட்டோர் பேசினர்.

அந்தியூரில் ஊராட்சி தூய்மைக் காவலர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி ஏஐடியுசி உள்ளாட்சித்துறை பணியாளர் சங்கம் சார்பில் எஸ்.தேவராஜன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில கட்டுப்பாட்டுக்குழு உறுப்பினர் வி.பி.குணசேகரன் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரை ஆற்றினார். திரளான தொழிலாளர்கள் கலந்து கொண்டனர்.

பவானியில் தோழர்கள் ஆர்.செல்லப்பன், கே.பி.நடராஜன் ஆகியோர் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சிபிஐ மற்றும் ஏஐடியூசி நிர்வாகிகள் டி.ஏ.மாதேஸ்வரன், பி.எம். பாலமுருகன், விபிஜி.அருள், பி.எல்.சிவராமன், கே.சந்திரசேகர், எஸ்.கந்தசாமி உள்ளிடோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். திரளான தோழர்கள் கலந்து கொண்டனர்.

அம்மாபேட்டையில் டி.கண்ணன்

தொடர்ச்சி 16ம் பக்கம் >>

ஆயுள் சந்தா - ரூ.7500.00
ஆண்டு சந்தா - ரூ.750.00
தனிப்பிரதி - ரூ.15.00

ஜனசக்தி
பாவை பிரிண்டர்ஸ் மாடி,
142/16 ஜானி ஜான்கான் ரோடு,
இராயப்பேட்டை,
சென்னை - 600014 ✆: 9444331138




# செங்கடலை காண வேண்டாமா?



**பேரன்புமிக்க தோழர்களே!**

மாநாடு தயாரிப்புகளில் தீவிரமாக பணியாற்றி வருகிறீர்கள்.

நடைபெற்றறுவரும் இடைநிலை அமைப்புகளின் மாநாடுகள், மாவட்ட, மாநில மாநாட்டைப் போன்று வெகு சிறப்பான முறையில் விளம்பரங்கள் செய்து சிறப்பாக நடைபெற்று வருகின்றது.

குறிப்பாக மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு சென்றிட யாரிடமும் வழி கேட்க வேண்டிய அவசியம் இல்லாதபடி வழியெங்கும் செங்கொடிகள் பட்டொளி வீசிப் பறக்கின்றன.

எங்கெங்கு காணினும் செந்தோரணங்களும், செங்கொடிகளும், விளம்பர தட்டிகளும் நிரம்பி நம்மை வியப்படையச் செய்கின்றது.

எவருக்கும் நாங்கள் சளைத்தவர்கள் அல்ல; எங்களாலும் எதனையும் செய்து காட்ட இயலும் என்கிற பெருமிதத்தோடு நமது தோழர்கள் பணியாற்றி வருகின்றார்கள்.

மாநாடுகள் நடைபெறும் அனைத்து இடங்களும் சிறு, சிறு செங்கடலாக காட்சி அளிக்கின்றன.

நமது நாட்டின் எல்லை பகுதியாக கிழக்கே, மேற்கே, தெற்கே என்று மூன்று பகுதிகளும் கடல், வடக்கே விண்ணைத் தொட்டு நிற்கும் இமயமலை.

கிழக்கு நோக்கினால் வங்காள விரிகுடா, மேற்கு நோக்கினால் அரபிப் பெருங்கடல், தெற்கு நோக்கினால் இந்தியப் பெருங்கடல் என விரிந்து பரந்து கிடக்கும் எல்லையில்லா கடல் பகுதியைக் காண்கின்றோம்.

அமைதியாய் அசைந்தாடி வரும் அலையை பெண் அலை என்றும், ஆவேசமாய், பெரும் இரைச்சலிட்டு, ஆளை அடிப்பது போன்று உயர்ந்து வரும் அலையை ஆண் அலை என்றும் கூறுவார்கள்.

அலை ஓய்வது எப்போது? தலை மூழ்குவது எப்போது? என்று கூறுவார்கள்.

ஓய்வின்றி, உறக்கமின்றி அலைகள் வந்து கொண்டே இருக்கின்றன.

எத்தனை அலைகள் வந்து சென்றன என எண்ணி கணக்கிட எவரும் முயன்றதாகத் தெரியவில்லை. அப்படி ஒரு முயற்சியை மேற்கொண்டால் வெற்றி பெற முடியாது என்பதனை உணர்ந்தே அம் முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை.

கடலில் வெறும் தண்ணீர்தான் இருக்கின்றதா? பல்வேறு கனிம வளங்களை வாரி, வாரி வழங்கிக் கொண்டிருப்பது போன்று, கடலில் ஏராளமான வளங்களை வாரி வழங்கிக் கொண்டே உள்ளது.

உப்பில்லா பண்டம் குப்பையிலே என்று கூறுவார்கள். நாம் அன்றாடம் பயன்படுத்தும், சுவை கூட்டும் உப்பை வழங்கிக்கொண்டே இருக்கின்றது.

நாம் சுவைத்து உண்ணும் மீனுக்கு பஞ்சமே இல்லை, இதனை உற்பத்தி செய்ய, அவைகளுக்கு உணவளிக்க, பாதுகாக்க நாம் ஒன்றும் செய்தது இல்லை.

ஆனால், நமக்கான உணவை அளித்துக் கொண்டே இருக்கின்றது. எத்தனை ஆயிரம் படகுகளில், எத்தனை லட்சம் மீனவர்கள் வலைவீசி நாள்தோறும் மீன்களை டன் கணக்கில் பிடித்துக் கொண்டு இருந்தாலும், மீண்டும் மீண்டும் பட்டாளம், பட்டாளமாக மீன் உற்பத்தி நடைபெற்று வருகின்றது.

மீன் மட்டுமா? சங்கு, சிப்பி என எத்தனை எத்தனையோ கொடைகளை நமக்கு கடல் வழங்கிய வண்ணம் உள்ளது.

வங்காள விரிகுடாவும், அரபிக் கடலும், இந்தியப் பெருங்கடலும் நமது குமரிமுனையில் சங்கமிக்கின்றன.

முக்கடலும் சங்கமிக்கும் குமரி முனையில் இருந்து பார்த்தால் அதிகாலை நேரத்தில் சுடர்விட்டு, பள பளக்கும் தனது அழகிய உருவத்தை வெளிப்படுத்தியவாறு கடலிலிருந்து உதிக்கும் சூரிய உதயத்தையும்–

மாலையில் தனது பணிகள் முடித்து, இரவுக்கு வழிவிட தான் தோன்றிய அதே கடலில் மேற்காக சென்று சூரியன் மறைவதையும், நீ மறைந்த பின் சந்திரன் உதயமாவதையும் நாம் கண்டுகளித்து வருகின்றோம்.

இயற்கை நமக்கு விதவிதமான வித்தைகளை காட்டி வருகின்றது.

மனிதன் இயற்கையோடு இணைந்து வாழ்ந்தால், இயற்கை நம்மை சீண்டாது.

இயற்கைக்கு புறம்பாக எதிராக மனிதன் தன் சுயநலத் திற்காக செயல்பட்டால், இயற்கை பழிவாங்கிவிடும். அதன் பழிவாங்களை எவராலும் தடுத்து நிறுத்திட இயலாது; முடியாது.

இயற்கை வளங்களை எல்லாம் சுரண்டி கொழுக்கின்ற கூட்டம்தான் முதலாளித்துவம்.

இயற்கையை மட்டுமா சுரண்டுகின்றது? மனித உழைப் பையும் சுரண்டித் தின்று கொழுக்கின்றது.

முதலாளித்துவ சுரண்டலுக்கு அளவு உண்டா? இல்லை, விரிந்து பரந்து கிடக்கும் கடலுக்கு எல்லை இல்லை.

எல்லையில்லா கடலைப் போன்று, முதலாளித்துவ சுரண்டலுக்கும் எல்லை இல்லை.

ஆசைக்கு அளவில்லை, சிறிய ஆசையாக தொடங்கி சிறிது, சிறிதாக மெல்ல, மெல்ல வளர்ந்து பேராசையாக பெருக்கெடுத்து, அது மேலும் மேலும் பெருத்துக் கொண்டே முடிவற்ற பெருக்கமாக பெருத்துக் கொண்டே செல்லும்.

முடிவில்லா பெருக்கம் மனிதகுல வாழ்க்கையை சீர்குலைத்து சின்னா பின்னமாக்குகின்றது.

வளமான, மகிழ்ச்சியான வாழ்க்கைக்காக ஏங்கி பரிதவித்து, பரிதாபகரமான நிலைக்கு தள்ளிய இரக்கமற்ற, கொடிய முதலாளித்துவத்திற்கு முடிவே இல்லையா?

முற்றாக முடிவு கட்டிட, அதன் சல்லி வேரை மட்டுமல்ல, அதன் ஆணிவேரையே அகற்றப் பிறந்ததுதான் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி என்கிற மகத்தான பேரியக்கம்.

அத்தகைய அமைப்பின் மாநில மாநாடு ஆகஸ்ட் திங்கள் 6, 7, 8, 9 ஆகிய நான்கு தினங்கள் தொழிலாளி வர்க்கம் நிறைந்திட்ட திருப்பூர் மாநகரில் நடைபெறுகின்றது.

மாநாட்டு நிறைவு நாளான ஆகஸ்ட் 9ஆம் நாள் திருப்பூர் மாநகரம் இந்நாள் வரை காணாத பெரும் பேரணி நடைபெற இருக்கின்றது.

**ஆம் தோழர்களே! வங்காள விரிகுடாவை கண்ட நாம், அரபிப் பெருங்கடலை கண்ட நாம், இந்தியப் பெருங்கடலை கண்ட நாம் முக்கடலும் சங்கமிப்பதைக் கண்டு களித்திட்ட நாம் தற்போது இன்னொரு புத்தம்புதிய கடலை காணவிருக்கின்றோம்.**

ஆம், புதியதோர் கடலை செங்கடலை திருப்பூரில் காணவிருக்கிறோம்.

இச் செங்கடலை காண கண் கோடி வேண்டும்.

செங்கடலில் சங்கமிக்க ஜெகஜோதியாய் திரளும் பெரும் படையில் சங்கமிக்க.

மோடி அரசை அகற்ற குரலெழுப்ப, போர் முரசு கொட்டி, போர் முழக்கமிட்டு, செங்கொடி உயர்த்தி, செஞ்சட்டை அணிந்து வர ஆயத்தமாகி விட்டீர்களா?

நீங்கள் மட்டுமல்ல தோழரே, குடும்பத்தோடு, மனைவி மக்களோடு, பேரப் பிள்ளைகளோடு செங்கடல் காண வாரீர்! வாரீர்!

**மீண்டும் சந்திப்போம்.**

**தோழமைமிக்க**

**இரா.முத்தரசன்**

# அக்னி பத் திட்டத்தை கை விடுக

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

நாட்டின் பாதுகாப்பு முக்கியத்துவம் வாய்ந்த ராணுவத்திற்கு வீரர்களை சேர்ப்பதில் “அக்னி பத்” என்ற புதிய திட்டத்தை ஒன்றிய அரசு கடந்த 14.06.2022 ஆம் தேதி அறிவித்தது. அறிவிப்பு வெளியானதும் நாடு முழுவதும் இளைஞர்கள் அக்னி பத் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து போராடி வருகின்றனர். வடமாநிலங்களில் போராட்டம் தீவிரமடைந்துள்ளது.

அக்னி பத் திட்டம் நாட்டின் பாதுகாப்புக்கு ஏற்றதல்ல என்பதை துறை சார்ந்த வல்லுனர்களும், முப்படைகளிலும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள உயர்நிலை அலுவலர்கள் அக்னி பத் திட்டம் நாட்டின் பாதுகாப்பை ஊனப்படுத்தும் என்று ஆதாரங்களை மேற்கோள் காட்டி வலியுறுத்தி வருகின்றனர். ராணுவ அமைப்பில் மாநிலங்கள் வகித்து வரும் சமநிலையை கடுமையாக பாதிக்கும். குறுகிய கண்ணோட்டம் கொண்டவர்கள் ஊடுருவ வாய்ப்பளிக்கும் என புகார் தெரிவித்து வருகின்றனர்

இந்த நிலையில் ஒன்றிய அரசின் பாதுகாப்புத்துறை அமைச்சர் ராணுவ தளபதிகளுடன் திரும்ப, திரும்ப ஆலோசித்து வருகிறார். முன்னர் வெளியிட்ட அறிவிப்பில் தளர்வு செய்து அக்னி பத் திட்டத்தை செயல்படுத்துவதாக மீண்டும், மீண்டும் அறிவிப்பது போராடுபவர்களை ஆத்திரமூட்டி வருகிறது.

ஓய்வு பெற்ற ராணுவத்தினர் “ஒரு நிலை, ஒரே ஓய்வூதியம்” (0ஸீமீ ஸிணீஸீளீ; ளிஸீமீ றிமீஸீஷீவீஷீஸீ) என்ற கோரிக்கையை வலியுறுத்தி போராடி வந்தபோது, நரேந்திர மோடி அதனை



ஆதரித்து பேசியதை நாடு மறந்துவிடவில்லை. இப்போது அக்னி பத் திட்டத்தில் சேர்க்கப்படும் “அக்னி வீர்” களுக்கு ஓய்வூதியம் என்ற அறிவிப்புக்கு மௌன சாட்சியாக இருந்து வருகிறார். நாட்டின் பாதுகாப்பில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கும் அக்னி பத் திட்டத்தை முற்றாக திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.


இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.



ஆர்.கிருஷ்ணமூர்த்தி

# நாடு காத்திட.. அரசியலுக்கு அப்பால்

**இந்தியாவில் வெள்ளை ஆட்சி விரட்டி விடுதலை பெற, அன்று அனைத்து தேசபக்த சக்திகளும் விடுதலை முழக்கத்தை மட்டுமே முன் வைத்து ஒருங்கிணைந்து போராடின. ஏராளமானோர் உயிரையும் துச்சமென மதித்துப் போராடி உயிர்த்தியாகம் செய்தனர்.**



குதிராம் போஸ் முதல் பகத்சிங், சுகதேவ், ராஜகுரு, சந்திரசேகர் ஆசாத், அஷ்மகுல்லா, உத்தம் சிங் என தூக்கிலிடப்பட்ட, சுட்டுக் கொல்லப் பட்ட இளைஞர்கள் ஏராளம், ஏராளம். தமிழகத்தில் திருப்பூர் குமரன், வாஞ் சிநாதன், வ.உ.சி.சுப்பிரமணிய சிவா, நீலகண்ட பிரம்மச்சாரி என மிக நீண்டது தியாகிகள் பட்டியல்.

பம்பாய் கடற்படையில் மூவர்ணக்கொடி, கம்யூனிஸ்ட் செங்கொடி, முஸ்லிம் லீக் பச்சைக் கொடி என முக்கொடி தாங்கி நடந்த போராட்டம் வெள்ளையர்களை மிரண்டு நடுங்கச் செய்த போராட்டம். இதெல்லாம் அன்று சாத்தியப் பட்டதால் தான் வெள்ளை ஆட்சி விரட்ட முடிந்தது. விடுதலை இந்தியாவைப் பெற முடிந்தது.

காந்தி, நேரு, நேதாஜி, மற்றும் தோழர்கள் எம்.என்.ராய், சஞ்சீவி ரெட்டி என ஏராளமான கம்யூனிஸ்ட் தலைவர்கள் வேற்றுமையில் ஒற்றுமை என விடுதலை ஒன்றே நமது நோக்கம் என போராடினர்.

இன்று நாட்டையே கார்ப்பரேட்களிடம் விலை பேசும் மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, தேச விரோத பாசிச அரசை, அரசுத்துறை பொதுத்துறைகளை சீரழிக்கும் தனியார் மோகம் கொண்ட மோடி அரசை எதிர்த்து போராடி பாசிச ஆர்.எஸ்.எஸ். சனாதன மதவெறிக் கும்பலிடமிருந்து நாட்டையும், மக்களையும் காத்திட தேசப்பற்று மிக்க நாம் செப்பு மொழி பதினெட்டு எனினும் பாசிசம் விரட்டும் சிந்தனை ஒன்றே என ஒருங்கிணைந்து போராட மாட்டோமா! இல்லை கண்டிப்பாக இணைந்து போராடி இந்தியா காத்திட வேண்டும்... இனி பொறுப்பதில்லை என இணைந்து களமிறங்குவோம்! காவிமய பாசிசம் வேரோடு மண்ணாக வீழ்த்துவோம்! இதுவே நமது தேச பக்த கடமை!

**எட்டு ஆண்டுகளில்...:** எட்டு ஆண்டுகள் ஆட்சியில் மோடியின் சாதனை ஏமாற்றும் வாய் வீச்சு பேச்சுக்கள் மட்டுமே! செயலில் பூஜ்யமே மிச்சம்.

**மேக் இன் இந்தியா (ஸ்விச்பாரத்):** அக்டோபர் 2ம்நாள் 2014ல் முழங்கினார். வெளிநாட்டு தொழில்நிறுவனங்கள் இந்தியாவில் நுழைந்து பெரும் முதலீடு செய்யும்; இதன் மூலம் இளைஞர்களின் வேலைவாய்ப்பு ஓஹோ என்று பெருகும் என்றார். அந்நிய முதலீடு நுழைந்தது. வேலைவாய்ப்பு இல்லை.. இருந்ததும் போயிற்று.

**இரண்டு கோடி வீடு:** வாய் வீச்சு வீரரான மோடி 2015 ஜூன் மாதம் ஒரு திட்டத்தை அறிவித்தார். அதன் பெயர் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா. இத்திட்டத்தின் படி 2022 க்குள் 2 கோடி வீடுகள் இலவசமாக கட்டித் தரப்படும் என்று கூறப் பட்டது. ஆனால் இது முழுவதுமாக அல்லது எதுவரை செய்து முடிக்கப்பட்டது என்ற விவரம் இதுவரை கிடையாது.

மாறாக இரண்டாண்டுகளுக்கு முன் வாரணாசியில் ஒரு பெண்மணி தனது சொந்த செலவில் கட்டிய வீட்டை, இத்திட்டத்தின் கீழ கட்டப்பட்ட வீடு என மோடி படத்துடன் ஒரு பத்திரிகை விளம்பரம். அது போலியானது, முழுதும் பொய் விளம்பரம் என்பதை ஒரு பெண் பத்திரிகையாளர் அந்த வீட்டிற்கே சென்று அந்த வீட்டு சொந்தக்கார அம்மையாரை நேரில் பேட்டி கண்டு வெளிக்கொணர்ந்தார். முகத்திரை கிழிக்கப்பட்ட மோடி அரசால் அதை மறுக்க முடிவில்லை.

இதுதான் பிரதான் மந்திரி ஆவாஸ் யோஜனா லட்சணம்.

**பண மதிப்பிழப்பு:** 2016 நவம்பர் 8 இரவு அறிவித்தார் மோடி. அடுத்த 4 மணி நேரத்தில் 500/1000 ரூபாய் நோட்டுகள் செல்லாது என்றார். இதன் மூலம் கருப்பு பணம் / ஹவாலா பரிவர்த்தனை ஒழிப்போம் எனக் கூவினார். நடந்தது என்ன? அடுத்து பல மாதங்கள் வங்கி, அஞ்சலகம், ஏ.டி.எம் முன் ரூ.2000 பணம் எடுக்க மணிக் கணக்கில் மக்கள் கால் கடுக்க வெய்யிலில் காத்திருந்து தெருப்பிச்சைக்காரர்களாக அலைந்தனர். வியாபாரம் முற்றிலுமாய் சரிந்தது. சிறு குரு நடுத்தர தொழில்கள் ஒட்டுமொத்தமாக மூடப் பட்டன. தெருவோர வியாபாரிகள் காணாமல் போயினர். மக் கள் பலர் மாண்டனர். கருப்புப் பணம் ஒழிந்தா? இதுவரை எந்த பதிலும் இல்லை.

**ஜி.எஸ்.டி.:** நாடு முழுவதற்கும் ஒரே வரி அமைப்பு என்றார். வரித் திட்டமிடலை ஒழுங்கு படுத்தப் போவதற்காக இத்திட்டம் என சொல்லப் பட்டது. விளைவு என்ன? இன்று வரை ஏராள குளறுபடிகள்! இல்லாத பொருளுக்கெல்லாம் வரி போட்டு திடீர் விலை ஏற்றம். உணவு விடுதி முதல் முடி திருத்தும் நிலையம் வரை எங்கும் ஜி.எஸ்.டி. 100 க்கு 18 சதம் முதல் 32 சதம் வரை விலை ஏற்றம். மாநில அரசுகளின் உரிமை பறித்து பங்கு தருவோம் என்று சொல்லி இன்று வரை இழுபறி.

**முத்தலாக் சட்டம்:** பல நூற்றாண்டுகளாக இஸ்லாம் மதத்தில் இருந்து வரும் முத்தலாக் ஒழித்து இஸ்லாமிய பெண்களைப் பாதுகாக்க முத்தலாக் ஒழிப்பு என சொல்லப் பட்டது. ஆனால் தீர்வு ஏதும் சொல்லப் படவில்லை. காரணம் முத்தலாக் ஒழிப்பு சட்ட நோக்கம் /இலக்கு முஸ்லிம்கள். ஆனால் இன்று அதே இஸ்லாமியப் பெண்கள் பாதுகாப்பு/ அடக்கம் கருதி ஹிஜாப் உடை அணிய தடை.. அடி உதை. எந்த உடை என்பது இஸ்லாமிய பெண்கள் விருப்பம். இஸ்லாமிய பெண்களைப் பாதுகாப்பதற்காக முத்தலாக் ஒழிப்பு என்ற சங்கிகள் தான் இன்று அவர்களின் உடல் மறைக்கும் கருப்பு ஆடையை அணியக் கூடாது என கூத்தடிக்கின்றனர்.

சட்டப் பிரிவு 370 ரத்து ஜம்மு – காஷ்மீர் ஜனநாயக முறை ஆட்சியை அந்த மாநிலத்திற்கான சிறப்புரிமை வழங்கும் சட்டப்பிரிவு 370 மற்றும் 35 ஏ இவைகளை ரத்து செய்து கவர்னர் ஆட்சி கொண்டு வந்து பாழாக்கினர்.

**2019 அக்டோபர் 5 அன்று:** சிறப்பு சட்டப்பிரிவு 3 7 0 ஐ ரத்து செய்து ஒன்றாக இருந்த ஜம்மு காஷ்மீர் மாநிலத்தை இரண்டாக அதாவது இரு யூனியன் பிரதேசங்களாக உடைத்தனர். பாதுகாப்பு நடவடிக்கை என சொல்லி ஜனநாயகம் பறித்தனர். ஆனால் கொல்லப்படுவது வெளிநாட்டினர் அல்ல உள்ளூர் வாசிகளே!. சிஏஏ என்.ஆர்.சி. குடியுரிமை திருத்தச் சட்டம் என்ற பெயரில் இஸ்லாமிய மக்களை குறி வைத்தனர். இதன்படி பாகிஸ்தான், வங்கதேசம், ஆப்கானிஸ்தான் நாடுகளில் உள்ள இந்துக்கள் வந்தால் குடியுரிமை என்று சொல்லி முஸ்லிம்களை சேர்க்காமல் விட்டு பிரிவினை வாதத்தைத் தூண்டினர்.

**கொரோனா ஊரடங்கு:** எந்த முன்னேற்பாடும் இன்றி மார்ச் 2020ல் பொதுமுடக்கம் அறிவித்த மோடி தடுப்பூசி பற்றி அன்று அக்கறை ஏதும் எடுக்கவில்லை. தடுமாற்ற நிலையில் மோடி அரசு. நிர்வாகத் தயாரிப்பு ஏதும் அறவே இல்லை. மாறாக அத்துறை அறிவு சார்ந்தவர்களைக் கலந்தாலோசிக்காமல் விளக்கு ஏற்றுங்கள் என்றார். மணி அடிக்கச் சொன்னார். பூ தூவுங்கள் என்றார். இதெல்லாம் கேளிக்கூத்துகளாகின.

**நிதி ஆயோக்/ சென்ட்ரல் விஸ்டா:** பொருளாதார ரீதியிலான திட்டமிட மற்றும் முடிவுகள் எடுக்க திட்டக்குழு என்ற அமைப்பை அது முழு சுதந்திரமாக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் ஜவஹர்லால் நேரு அமைத்தார். அதனாலேயே அதனை ஒழித்து 2015 நவம்பர் 1 அன்று நிதி ஆயோக் என ஒன்றை அமைத்தது மோடி அரசு. இந்த திட்த்தின் மூலம் இதனை அரசின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்து அதன் தன்னிச்சை செயல்பாட்டுக்கு முடிவு கட்டினார்.

சென்ட்ரல் விஸ்டா என ஒன்றை அறிவித்தது மோடி அரசு. இதன் மூலம் கொரோனா கால நிதி நெருக்கடி பற்றி சிறிதும் கவலைப்படாமல் 20 ஆயிரம் கோடி மதிப்பில் புதிய நாடாளுமன்றம் கட்ட சென்ட்ரல் விஸ்டா கொண்டுவரப்பட்டது.

இதனால் பல கட்டிடங்கள் இடிப்பு. ஆயிரக்கணக்கான மரங்கள் அழிப்பு. எனவே இது சுற்றுச்சூழல் மீறல் என சொல்லப்பட்டும் பிரதமருக்கான சொகுசு பங்களாவுடன் சென்ட்ரல் விஸ்டா திட்டத்தின் கீழ் அனுமதி வழங்கப்பட்டது.

**விஷ வேளாண் சட்டம்:** விவசாயிகள் வாழ்வாதாரம் அழித்து அத்தொழிலில் கார்ப்பரேட் நுழைவுக்கு வகை செய்யும் சட்டமே புதிய வேளாண் சட்டம். இதனை வாபஸ் பெறக்கோரி டெல்லி புறவா யிலில் ஓராண்டுக்கு மேலாக உலகமே மெச்சும் கட்டுப்பாட்டுடன் பஞ்சாப் விவசாயிகள் தலைமை ஏற்று மற்ற பகுதி விவசா யிகளுடன் இணைந்து வெயில், மழை, குளிர் , பனி என எதையும் பொருட்படுத்தாமல் மிகக் கடுமையாகப் போராடினர். 15 முறை பேச்சுவார்த்தை தோல்வி. அடக்குமுறை களை மோடி அரசு ஏவியது. அபாண்டமான பொய் வழக்குகள் போடப்பட்டது. தேசத்துரோகிகள் என பட்டம் சூட்டப்பட்டது. 700 பேர் உயிரிழந்துள்ளனர். ஒரு இரங்கல் கூட கிடையாது. மோடி மனித நேயம் புதைந்து போனது. உ.பி.யில் போராடிய விவசாயிகள் மீது கார் ஏற்றி கொலை செய்தனர். இதுதான் மூன்று வேளை சோறு தரும் விவசாயிகளுக்கு நன்றி சிறிதும் இன்றி பாசிச மோடி அரசு செய்த அராஜகம்.

**வன்கொடுமை:**

**நாடு முழுவதும் தலித் மக்கள் மீது வன் கொடுமை. தேசிய குற்ற ஆவண மையம் (என்.சி.ஆர்.பி) அறிக்கை படி 2013ல் 39000 குற்ற சம்பவங்கள். 2014 மோடி பதவி ஏற்றவுடன அது 47000 ஆகக் கூடியது. தலித் பெண்கள் மீதான பாலியல் வல்லுறவு அதிகரித்தது. இதைச் செய்தவர்கள் பெரும்பாலோர் பாஜக வினர். பாஜக எம்.எல்.ஏ. க்களும் கூட. தலித் மக்கள் மேம்பாட்டு நிதி அளவு குறைக்கப்பட்டது.**

**இட ஒதுக்கீடு:** சிறுபான்மையினர், பழங்குடியினர், பட்டியலினத்தவர் இவர்களுக்கான இட ஒதுக்கீடு குறைக்கப்பட்டது. சமூக நீதி நீர்த்துப் போக திட்டமிடப்பட்டது. எதிர்ப்போரை தேசத்துரோகிகள், தீவிர வாதிகள் என்ற பெயரில் பொய் வழக்கு போட்டு தேசிய பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டனர்.இது இன்னமும் தொடர்கிறது.

**வங்கித் திருடர்கள்:** பல லட்சம் கோடி ரூபாய் வங்கிகளில் கடன் பெற்று கட்டாது ஏமாற்றும் மோடிக்கு நெருக்கமான நிரவ் மோடி, மெகுல் ஜோஷி, விஜய் மல்லையா உள்ளிட்ட 23 தொழிலதிபர்கள் ஒன்றிய அரசின் உதவியுடன் வெளிநாடுகளில் பாதுகாப்பாக உள்ளனர். இந்த கொள்ளையை மறைத்து வங்கிகள் நஷ்டம் என வாய்க்கூசாது கூறி வருகிறார் நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன்.

**வேலை இழப்பு:** 45 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு வேலையில்லாத் திண்டாட்டம் பன்மடங்கு அதிகம். ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை வாய்ப்பு என்ற மோடியின் அறிவிப்பு புஸ்வாணம் ஆயிற்று. மாறாக 12.5 கோடி பேர்களின் வேலை பறிக்கப்பட்டதாக நாம் மட்டும் கூறவில்லை இந்தியா பொருளாதார கண்காணிப்பு மையம் கூறுகிறது. கார்ப்பரேட் வரி 40 சதம் 22 சதமாகக் குறைப்பு.

142 தொழிலதிபர்கள் (பெரும்பாலும் குஜராத்) சொத்து 23 லட்சம் கோடியிலிருந்து 53 லட்சம் கோடியாக பாசிச மோடி அரசின் உதவியுடன் உயர்வு. இதில் ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் சொத்து உயர்வு மட்டுமே 2,87,500 கோடி.

பெட்ரோல், டீசல், எரிவாயு விலை நாளும் ஏற்றம். இவை யாவும் கார்ப்பரேட் கையில்.

பன்னெடுங்காலமாக போராடிப் பெற்ற தொழிலாளர் நலச் சட்டங்கள் 44ஐ 4 ஆகச் சுருக்கி பல உரிமைகளை பறித்து விட்டது மோடி அரசு.பாராளுமன்றத்தில் விவாதம் கூட கிடையாது. இதன் மூலம் கார்ப்பரேட்டுகள் எந்த கட்டுப்பாடுகளும் இன்றி புதிய தொழில் தொடங்கலாம். தொழிலாளர்களுக்கு எந்த உரிமையும் இல்லை. மீண் டும் கொத்தடிமை முறையைக் கொண்டு வந்து கார்ப்ப ரேட்டுகளுடனான விசுவாசத்தை நிருபித்திருக்கிறார் தொழிலாளர் விரோதி மோடி அவர்கள்.



**பொதுத்துறை சீரழிப்பு- தனியார் மயம் ஊக்குவிப்பு;** அரசுத் துறைகளான நாட்டின் பாதுகாப்பிற்கு முதுகெலும்பு போன்ற பாதுகாப்பு துறை தனியார் நோக்கி. இ ர யில்வேயில் தனியார் நுழைவு. இ ர யி ல் வே இலாக்கா கட்டமைப்பில் தனியார் இரயில் கள் விட அனுமதி. பொதுத்துறை பி.எஸ். என்.எல். அநேகமாக அழிப்பு. 4ஜி, 5ஜி அம்பானிக்கும் ஏர் டெல்லுக்கும். கற்பகதரு போன்ற எல்.ஐ.சி. யில் பங்கு விற்பனை பெயரில் தனியார் நுழைவு. பொது இன்ஸ்யூரன்சில் நேரிடையாக தனியாருக்கு. வங்கித் துறையிலா கிளைகள் இணைப்பு என்ற பெயரில் பல கிளைகள் தனியாருக்குச் சாதகமாக மூடல். சில பொதுத்துறை வங்கிகளையே தனியாரிடம் ஒப்படைக்கும் முயற்சி. . இதனை எதிர்த்து தேசத் தின் மக்களின் சொத்தாக இருக் கும் வங்கிகளைக் காப்பாற்ற வங்கி ஊழியர்களின் ஒன்று பட்ட தொடர்ந்த போராட்டம். சாமானிய மக்களுக்கு நல்ல சேவை தரும் வங்கிகளை பெருமளவு மக்கள் பணத்துடன் தனியார் வசமாக்குவது என்பதே மோடி அரசு செய்யும் தேசத்துரோகம்.

**புதிய கொள்கை:** புதிய கல்விக்கொள்கை திட்டத்தின் மூலம் கல்வியில் காவிமயம். மொழித் திணிப்பு. அக்னி பாத் திட்டத்தின் மூலம் ராணுவத்தின் மாண்பை அடியோடு சீர் குலைத்தல். நான்காண்டுகள் தற்காலிகப் பயிற்சியுடன் வேலை என்ற பெயரில் இளைஞர்களின் எதிர்காலத்தை சீர்குலைக்கும் திட்டமே இது. அதே சமயம் ஸிஷிஷி க்கு மறைமுக ஆள் சேர்ப்பு .

**ஒரே..... எல்லாவற்றிலும் ஒரே:** ஒரே அரசு, ஒரே மொழி, ஒரே கல்வி, ஒரே நாடு, ஒரே தேர்தல் என்றாக்கி தனித்துவம் அழித்து பாரம்பரிய கலாச்சாரம், ஜனநாயக மரபுகள், இந்திய அரசியல் அமைப்பு, அரசியல் அமைப்புச் சட்டம், பாராளுமன்ற ஜனநாயகம் என எல்லாவற்றையும் சீர்குலைக்கும் முயற்சி.

**அரசியல் அநாகரீகம்:** தேர்தலில் தில்லு முல்லுகள் செய்து பெரும்பான்மை. இல்லையேல் கூச்ச நாச்சமின்றி எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களை விலை பேசி வாங்கி ஆட்சி அமைப்பு என்ற கீழ்த்தரமான அரசியல். மதவெறி மூலம் மக்களை மயக்கி ஏமாற்றி வாக்கு பெறும் மாயாஜாலம். தேர்தல் கமிஷன், புலனாய்வுத்துறை, நீதித்துறை என அனைத்தின் சுதந்திரமான செயல்பாடு பறிக்கப்பட்டு அவை யாவும் அரசின் கட்டுப்பாட்டில்.

**வரலாற்று அழிப்பு:** நேரு, காந்தி, நேதாஜி என மாபெரும் தியாகத்தலைவர்களின் வரலாற்றை அழித்து மாற்றும் முயற்சியில் மோடி அரசு. வெள்ளையனிடம் மண்டியிட்டு அடிமை சாசனம் எழுதிக் கொடுத்த வீர் சாவர்க்கர் மற்றும் காந்தியை சுட்டுக் கொன்ற நாதுராம் கோட்சே போன்றவர்களை தியாகத்தலைவர்களாக சித்தரிக்கும் முயற்சி. இதனை மோடி அரசு வெளிப்படையாகவே செய்கிறது என்பது மாபெரும் வெட்கக்கேடு.. ஒரு உதாரணம் வடமாநில பள்ளி புத்தகமொன்றில் காந்தி இறந்தார் என்று சொல்லப் படுகிறது. சுடப்பட்டார் கோட்சேவால் என்பது மறைக்கப்படுகிறது.

ஆயிரம் ஆண்டுகளுக்கும் முன்னதான இஸ்லாமிய ஆட்சியைக் காட்டி, உண்மைக்கு மாறான பொய்த் தகவல்களைப் பரப்பி மசூதிகள் இடிப்பு, இஸ்லாமிய எதிர்ப்பு இவற்றை மிக சாமர்த்தியமாக செய்து வருகிறது பாசிச சனாதன மோடி அரசு. அதாவது ஆர்.எஸ்.எஸ். திட்டங்களை பாராளுமன்றத்தில் பெரும்பான்மை மூலம் அப்படியே அமல் படுத்தும் வேலையை கச்சிதமாக செய்து வருகிறது மோடி அரசு.

**என்ன செய்யப் போகிறோம்!:** உலக சர்வாதிகாரிகள் முசோலினி, முஷாரப், மார்கோஸ், மிலோஸ்விக், மோபுட்டா, மைகாம்பிகோ போன்றவர்களின் வரிசையில் இன்று இந்தியாவில் மோடி.

மதச் சார்பின்மை, இந்திய நாடாளுமன்ற ஜனநாயகம், இந்தியாவின் பன்முகத்தன்மை, பன்மொழிக் கலாச்சாரம், தேச நலன், மக்கள் நலன் என யாவும் காக்கப்பட வேண்டும்; சனாதன தர்மம் நுழைவு தடுக்கப்பட வேண்டும்; காவி மயம் ஒழிக்கப் பட வேண்டும்; பாசிசம் வேரறுக்கப்பட வேண்டும்

இனி பொறுப்பதில்லை ஆவேசம் கொண்டு எரிதழல் ஏந்துவோம்!

மீண்டும் ஒரு விடுதலைப் போராட்டம் நடத்துவதன் மூலமே நாட்டை காத்திட முடியும்; நாட்டு மக்களைக் காத்திட முடியும். மக்களைத் தட்டி எழுப்புவோம்! ஒன்று திரட்டிப் போராடுவோம்!

வீறுகொண்டே எழுவோம் ! பாசிசம் வீழ்த்துவோம்!

தொடர்புக்கு: **94449 56694**

தொட்டுப் பார்த்தால் காகிதம்
தொடர்ந்து படித்தால் ஆயுதம்

# ஜனசக்தி

மலர் 85 இதழ் 12

# அக்கினியில் இறக்கப்படுவது யார்?

“அக்னிபாத் ராணுவ பயிற்சி எதிர்காலத்தில் ஒழுக்கக் கட்டுப்பாடும் பயிற்சியும் கொண்ட நல்ல தொழிலாளர்களை தொழிற்சாலைகளுக்கு உருவாக்கித்தரும்“ என்று டாட்டா குழுமத்தின் தலைவரான சந்திரசேகரன் கூறுகிறார்.

வேலைக்கு சேர்க்கத் தக்கவர்களாக ஒழுக்கமும் பணித்திறன் கொண்டவர்களை அக்னிபாத் உருவாக்கித்தரும் என்று மகேந்திரா குரூப் தலைவர் ஆனந்த் மகேந்திரா சொல்கிறார்.

“அக்னிவீர்கள் எங்களைப் போன்ற கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான ஒரு ஆயத்தப்படையாக விளங்குவார்கள். அத்தகைய பயிற்சி பெற்ற உயிர்த்துடிப்புள்ள ஒழுக்கம் நிறைந்த திறன்வாய்ந்த மனிதர்களை வேலைக்கு சேர்ப்பதில் நான் முன்னுரிமை வழங்குவேன்’ என்று கூறுகிறார் குதூகலிக்கிறார், ஃபிக்கி என்ற முதலாளிகள் அமைப்பின் தலைவரான சஞ்சீவ் மேத்தா.

“அக்னிபாத் பயிற்சி பெற்று வருபவர்களை, பாரதிய ஜனதா கட்சியின் அலுவலகங்களில் வாயில் காப்பாளர்களாக நியமிப்போம்“ என்று சொல்கிறார் அந்தக் கட்சியின் தேசிய செயலாளரான கைலாஷ் விஜய்வர்கியா

“அக்னிபாத் வீரர்களுக்கு எலக்ட்ரிக்கல், டிரைவிங், முடிதிருத்துதல், துணி துவைத்தல் உள்ளிட்ட பயிற்சிகள் வழங்கப்படும். அவர்கள் 4 வருட சேவையை முடித்த பிறகு இந்த திறன்கள் அவர்களின் வாழ்க்கைக்கு பயனுள்ளதாக இருக்கும்“ என்று விளக்கம் அளித்திருக்கிறார் ஒன்றிய அமைச்சர் கிஷன் ரெட்டி !

இந்த அக்கினி வீரர்களுக்கு இவர்கள் என்னதான் பயிற்சி கொடுக்கப் போகிறார்கள்?

ஓய்வு பெற்ற ராணுவ அதிகாரிகள், இந்தச் சிதறடிக்கும் திட்டத்தைப் பார்த்து திகைத்துப் போய் இருக்கிறார்கள்.

இந்த திட்டம் ஒரு புறத்தில் ராணுவத்தை பலவீனமடையச் செய்யும் மறுபுறத்தில் நான்காண்டு முடிவில் வேலையும், ஓய்வூதியமும் இல்லாமல் ராணுவப் பயிற்சி பெற்ற ‘அக்னி வீர்’களை தெருவில் அலைய விடுவது சமூகத்திற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என அவர்கள் அரசை எச்சரித்திருக்கிறார்கள்.

தமிழ்நாட்டுப் பஞ்சாலைகளில், சுமங்கலித் திட்டம் என்றபேரில், திருமணமாகாத இளம் பெண்களை வேலைக்கு அமர்த்தி மூன்று ஆண்டுகள் கழித்து, கையில் திருமணத்திற்கு பணம் தந்து அனுப்பி வைத்தார்களே, ஒரு நவீன கொத்தடிமை திட்டம் ! அதன் பிரதிபலிப்புதான் இந்த அக்னிபாத்.

நாடெங்கும் ராணுவத்தில் சேர்வதற்காக பயிற்சி எடுத்து, நிரந்தர பணிக்காக தம்மை ஆயத்தப்படுத்திக் கொண்டு,தேர்வை முடித்து, பணி நியமன ஆணை இன்றோ நாளையோ

வந்துவிடும் என காத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் நான்கு ஆண்டுகளில் பணி முடிந்துவிடும், ஓய்வு ஊதியம் கிடையாது என்ற அறிவிப்பு அவர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

போராட தெருவுக்கு வந்தவர்களை, காவல்துறை தன் வழக்கமான ஆணவத்தோடு எதிர்த்தது, வன்முறைக் கலவரங்களுக்கு வித்திட்டுவிட்டது. ஆக்ராவில் காவல்துறையின் அணிவகுப்பு ஒன்று நடைபெற்று இருக்கிறது. அதில் புல்டோசர் எந்திரங்களும் அணிவகுத்து வந்தன. ஒரு கொள்ளைக்காரன் எவ்வாறு கத்தியைக் காட்டி அச்சுறுத்துவானோ, அதே வேலையை வெட்கமில்லாமல் ஒரு அரசாங்கம் செய்து கொண்டிருக்கிறது.

நரேந்திர மோடி பெங்களூருவில் பேசியிருக்கிறார் “நீண்டகாலமாக அரசின் கைகளிலேயே இருந்த ராணுவத் துறையையும் விண்வெளி ஆய்வுத் துறையின் இப்போது திறந்து விட்டிருக்கிறோம். கடந்த 8 ஆண்டுகளாக நாங்கள் தந்துள்ள உழைப்பு சாதாரணமானதல்ல. தற்போது இந்த சீர்திருத்தங்கள் கசப்பை அளிப்பதாக கூட இருக்கலாம்; ஆனால் அவை தற்காலிகமானவை. எதிர்காலத்தில் இவை பெரும் பலன்களை தரப் போகின்றன.”

இதைத்தானே மன்மோகன் சிங்கும் கூட 1991ல் சொன்னார். பொதுத்துறை நிறுவனங்களை தனியார் மயமாக்கினார். 30 ஆண்டுகளில் பெரும் பணக்காரர்கள் உருவாக்கி இருக்கிறார்கள். ஆனால், சாதாரண மக்களின் வாழ்க்கையும் இந்தியாவின் பொருளாதாரமும் கீழிறங்கி இருக்கின்றன.

போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அக்கினிபாத்தில், இராணுவத்தில் சேர்த்துக் கொள்ள மாட்டோம் என்று அரசு கூறியிருப்பது, தனக்கான ஆட்களை மட்டும் வடிகட்டிச் சேர்த்துக் கொள்வதற்கான முன்னோட்டம்.

வறுமையும், வேலைவாய்ப்பின்மையும், மத சாதி துவேஷமும் நிறைந்த ஒரு நாட்டில், ஆயுதப் பயிற்சி பெற்ற வேலையற்றவர்களை தெருவில் இறக்கி விட்டால் என்னவாகும்? இப்போது ரவுடிகளை தன் கட்சியில் சேர்த்துக்கொண்டு தசை பலம் காட்டும் பாஜக, தனக்கு நெருக்கமான இளைஞர்களுக்கு நான்காண்டு இராணுவப் பயிற்சியை அளித்து வீதியில் இறக்கினால் என்னவாகும்? சிதம்பரத்தில் நந்தனுக்கு நிகழ்ந்தது போல, தனக்கு எதிர்க் கருத்துச் சொல்பவர்களை அக்கினியில் இறக்கித் தீர்ப்பது தான் ஆர்எஸ்எஸ்ஸின் நிலைபாடு. அதற்கான பாதையை இந்த அக்னிபாத் வகுக்கிறது.

நாட்டிற்கும், நாட்டுப் பாதுகாப்புக்கும், இளைஞர்களுக்கும், கேடுவிளைவிக்கும் திட்டம் இந்த அக்னிபாத். எந்த நிபந்தனையும் இன்றி அரசு இதைத் திரும்ப பெற வேண்டும்.

NEWAGE WEEKLY
Central Organ of the Communist Party of India

தலையங்கம்
(19-25)

# பயங்கரத்திற்கான ஒரு திட்ட வரைபடம்




**அரசுக்குத் தன் குடிமக்களின் ஒரு பகுதியினரை நசுக்குவதற்கான தேவை என்ன வந்தது? ஒருக்கால் அதிகாரத்தை மீறுவது அல்லது மீறுவதற்குக் கற்பனை செய்ய நினைத்தாலும், எல்லையற்ற அரசதிகாரம் பாயாமல் சும்மா விட்டுவிட முடியாது என அதிகாரத்தை மீண்டும் நிலைநாட்டவும், அவர்களிடையே அச்ச உணர்வை ஏற்படுத்துவதற்காகவும் இருக்கலாம்.**

முகமற்ற அரக்கத்தனமான பிரம்மாண்டமான புல்டோசர் இயந்திரம், தடையின்றி தறிகெட்டு ஓடும்; அப்பாவி மக்கள் குடியிருப்புக்களை நேற்றுவரை ரத்தமும் சதையுமாக நம்மைப் போன்ற மனிதர்களின் உயிர்ப்பான வாழ்விடங்களை தரைமட்டமாக்கி இடிபாடுகளின் கற்குவியலாக்குமென்றால், தொடரும் நிகழ்வுகள் அதற்கேயுரிய முக்கியத்துவம் பெறுவதுடன் பிற அனைத்தையும் முக்கியத்துவம் இல்லாததாக்கிவிடுகிறது.

இந்திய நலவாழ்வு கட்சி உள்ளூர் தலைவர் ஜாவேத் முகமது சிறையில் தள்ளப்பட்டார். அப்படி வேட்டையாடப்பட எளிய இலக்காகும் எல்லாத் தகுதிகளும் அவரிடம் இருந்தன. பாபர் மசூதி ராம ஜன்ம பூமி பிரச்சனை காரணமாக நிலவிய கலகச் சூழல் பின்னணியில் 1991ல் இந்திய நாடாளுமன்றம், வழிபாட்டுத் தலங்களின் சமயத் தன்மையை மாற்ற எவரும் தலையிட முடியாதபடி, நிறைவேற்றிய வழிபாட்டுத் தலங்கள் சட்டத்தைச் சமூகங்களுக்கிடையில் அன்பு மற்றும் சமத்தன்மை ஒத்திசைவை உண்டாக்கும் திருத்தூதராகக் கண்டார்.

ஆனால் 1992ல் டிசம்பர் 6ம் நாள் வந்தது, பாபர் மசூதி இடிபாடுகளின் கற்குவியல் ஆக்கப்பட்டது; ஆனால் புல்டோசரின் அழிவு சக்தி கண்டுபிடிக்கப்படாத நிலையில் அப்போது அதிகார போதையின் கொடூர பலம் கொண்ட மனிதர்களின் வெறும் கைகள் பழமையான அழகிய பாபர்மசூதி குவிமாடத்தைச் சில மணித்துளிக்குள் மண்ணில் வீழச் செய்தது. குரு கோல்வால்கரின் கனவுத் திட்டம் அவரது சீடர்களால் நிறைவேற்றி முடிக்கப்பட்டது.

**சிறுபான்மையின மக்களின் குடியுரிமை பறிக்கப்பட வேண்டும் என குருஜி விரும்பினார். அதுதான் அவர் எழுதிய “நாம் அல்லது நமது தேசியத்தை வரையறுத்தல்” என்ற நூலின் மையமான கருத்தாகும்; அந்நூலில் கோல்வால்கர் எந்த ஊசலாட்டமும் சந்தேகத்திற்கும் இடமின்றித் தெளிவாகத் தமது சங்க அமைப்பின் இந்து ராஷ்ட்டிரா திடடத்தை ஜெர்மனி சர்வாதிகாரி அடால்ஃப் ஹிட்லரின் --பேரினவாதத்துடன் முற்றாக ஒன்றுகலந்திடச் செய்தல் அல்லது சிறுபான்மையினரை இரண்டாம் தரமாக இனரீதியாக ஒடுக்குதல் என்பதை உள்ளடக்கிய-- யூத இன எதிர்ப்புக் கோட்பாடுடன் ஒப்பிட்டுள்ளார்.**

“இனத் தூய்மை மற்றும் அதன் கலாச்சாரத்தைப் பாதுகாக்க, ஜெர்மனி தனது நாட்டின் யூத இனங்களை, யூதர்களை அழித்தொழித்து உலகை அதிர்ச்சி அடையச் செய்தது” என்று கோல்வால்கர் தனது 1939 நூலில் எழுதினார். “அடிவேர் வரை வேறுபாடுகள் உள்ள இனங்கள் மற்றும் கலாச்சாரங்களுக்கு ஒருபடித்தான ஒத்த தன்மையுள்ள ஒருபொருளாய் ஒன்று கலத்தல் ஏறத்தாழ முற்றாக இயலாத ஒன்று என்பதை ஜெர்மனி காட்டியுள்ளது; அது இந்துஸ்தானத்தில் (இந்தியா) நமக்குக் கற்பதற்கும் அதிலிருந்து பயன்பெறவும் நல்லதொரு பாடம்” என்று மேலும் அவர் எழுதினார்.

யூதர்களை அழிக்கும் நாஜிகளின் சோதனையை மனதில் வைத்தே கோல்வால்கர், ‘இந்துகள் அல்லாதவர்கள் அந்நிய இனங்கள்’ என்று அறிவித்து, ஜெர்மனி போன்ற அதே தீர்வை இந்தியாவின் சிறுபான்மையினப் பிரச்சனைக்கும் பரிந்துரைத்தார். ”இந்த நிலைபாட்டிலிருந்தே, புத்திசாலித்தனமான பழைய தேசங்கள் நடத்திய சோதனை ஒப்புதல் அளித்தபடி, இந்துஸ்தானத்தில் உள்ள அந்நிய இனத்தவர்கள் ஒன்று, இந்து கலாச்சாரம் மற்றும் மொழியைத் தழுவவும், இந்து மதத்தைப் புனிதமாக மரியாதை செலுத்தவும் கற்ற வேண்டும்; இந்து இனம் மற்றும் கலாச்சாரத்தை, அதாவது இந்து தேசத்தைப் புகழ்ந்து போற்றிடல் தவிர வேறு எந்தக் கருத்தையும் எண்ணத் துணியாது இருக்க வேண்டும்; தங்கள் தனித்துவத்தை இழந்து இந்து இனத்துடன் இணைய வேண்டும் அல்லது எந்த உரிமையும் கோராது, சலுகைகளுக்கு ஆசைப்படாமல் முன்னுரிமையாக நடத்தப்படுவதிலிருந்து விலகியும், அவ்வளவு ஏன் குடியுரிமைகளையும்கூட இல்லாமல் (இந்து) தேசத்தில் அவர்கள் இருந்து கொள்ளலாம்” என்று அவர் எழுதினார்.

பிற்பட்ட ஆண்டுகளில் கோல்வால்கரும் அவரது அமைப்பும் இந்தப் புத்தகத்திலிருந்து விலகியே இருந்தனர். அப்படி விலகி இருந்தது போன்ற பிரிவு செயற்கையானது; ராஷ்ட்டிரிய சுயம் சேவக் சங்கம் அந்நூலின் சமூக அரசியல் திட்டத்திற்காகத் தொடர்ந்து அமைதியாக இவ்வளவு ஆண்டுகாலம் பணியாற்றிக்கொண்டே வந்துள்ளது என்பதே உண்மையாகும்.

பிரயாக்ராஜில் நடந்துள்ள நிகழ்வுகள் ஓர் உதாரணம். இறைத்தூதர் முகமது நபி குறித்துப் பாஜக முன்னாள் செய்தித் தொடர்பாளர் நுபுர் சர்மா கூறிய அவதூறான கருத்துக்களை எதிர்த்து ஜூன் 10 அன்று தொழுகை முடிந்த பிறகு பிரயாக்ராஜிலும், மாநிலத்தின் பிற இடங்களிலும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தப்பட்டன.

ஜூன் 12 அன்று ஜாவேதின் மனைவி பர்வீன் ஃபாத்திமாவின் இரண்டு மாடி வீடு புல்டோசர் கொண்டு இடிக்கப்பட்டது; பிரயாக்ராஜ் மேம்பாட்டு அதிகாரிக்கு எதிராக ஃபாத்திமா அலகாபாத் உயர்நீதி மன்றத்தில் மனு செய்தார். தறிகெட்டு இடிக்கும் புல்டோசரின் நீண்ட இரும்புக் கரம் தங்களை நோக்கியும் பாயும் என்று அஞ்சி அப்பகுதியின் சிறுகடைகளின் உரிமையாளர்கள் தங்கள் கடைகளைத் தள்ளி இடமாற்றம் செய்யத் துவங்கினர். ஆனால் புல்டோசர் இத்தோடு நிற்கவில்லை. திரை விலகினால் தெரிகிறது, அனைத்தும் பயங்கரத்தை நிகழ்த்தும் திட்டவரைபடத்தின்படியே நடந்தப்பட்டது.

விலைவாசி உயர்கிறது. ஏழைகளுக்கு எட்டாத விலையில் அத்தியாவசியப் பொருட்கள். வேலையின்மை, பட்டினியைத் தொடரும் மற்றொரு பெருந்துன்பம். புலம்பெயர்ந்து செல்ல வேண்டிய கட்டாயம், கூடவே வருகிறது பற்றாக்குறையும். இத்தகைய ஏழ்மையான நிலையில் வேட்டையாடப்படும் மக்கள் எண்ணிக்கை நாளும் கூடுகிறது. அனைத்துச் சமூகங்களையும் வெருட்டும் ஏழ்மை, வேற்றுமையில் அனைவரையும் புதிதாக ஒற்றுமைப்படுத்துகிறது, அதுவே காவி ஆட்சி மக்களுக்கு வழங்கிய கொடை. அந்தக் கொடையின் மறுபுறம் ஒன்று உள்ளது:

நூறு கோடிகளுக்கும் மேல் சொத்துள்ள அதிபணக்காரர்கள் முன்பு எப்போதும் இல்லாத வகையில் தங்கள் செல்வத்தைப் பெருக்கினர், இப்போக்கு உலகப் பொருளாதாரத்திலேயே காண்பது அரிது. பொருளாதார வீழ்ச்சி மிக மோசமாக மைய இடத்தைப் பிடித்திருக்கும்போது, கரோனா பெருந்தொற்று ஊரடங்கு காலத்திலும் அதிபணக்காரர்கள் மேலும் பணக்காரர் ஆனார்கள். ஒன்றிய அரசின் உதவியுடன் தேசியச் செல்வாதாரங்கள் அனைத்தையும் நிதிமூலதனம் கைப்பற்றுகின்றன. அதிகாரத்தை கட்டுப்படுத்தும் அரசியலமைப்புச் சட்டத்தை மாற்றி எழுத முயற்சிகள் நடக்கின்றன. நாடாளுமன்றத்தில் எந்த விவாதமும் நடப்பதில்லை. ஜனநாயக விழுமியங்கள் ஆபத்தில் உள்ளன. ஆள்வோர்களுக்கு எதிராக எவரும் கருத்து வேறுபடுவதற்கான இடமே இல்லை.

கிராமப்புறப் பிரச்சனைகள் ஒரு பொருட்டாக அங்கீகரிக்கப்படுவதில்லை. கரோனா தொற்றைக் காரணம் காட்டி மழைக்காலக் கூட்டத் தொடர் நடப்படவில்லை. விவசாயத்திற்கு என வேளாண் கொள்கை இல்லை, முன்வைத்த சீர்திருத்தங்களோ விவசாயிகள் ஜீரணித்து ஏற்கத்தக்கதாக இல்லை. உணவுப் பாதுகாப்பு அழிந்து கிடக்கிறது. அழிவின் விளிம்பில் கிராமப்புற மக்கள் கூட்டம் நிற்கிறது. சிறிய மற்றும் விளிம்புநிலை விவசாயிகள் மெல்ல அழிந்து வருகிறார்கள். ஆனால் ஆளும் அரசோ விவசாயத்தைக் கார்ப்பரேட் மயமாக்கும் தங்கள் சந்தை கொள்கையை வகுப்பதில் மும்முரமாக இருக்கிறது. விவசாயப் பிரிவை விழுங்குவதற்குப் பெரும் கார்ப்பரேட் முதலைகள் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன.

அதிகாரப் பரவலாக்கும் நிகழ்முறை எதுவும் திட்டமிடப்படாதது அல்ல; ஒவ்வொரு கட்ட நடவடிக்கையிலும் கோலோச்சுவது பிற்போக்குக் கொள்கைகளே. அரசின் கைகளிலிருந்து அதிகாரம் பறிக்கப்படுகிறது. இதற்கான முன்னெடுப்பு நடவடிக்கைகளும்கூட திட்டமிடப்படாதது அல்ல. அவர்களுடைய இலக்கு பிராமணிய மேலாதிக்க ஆட்சியை நிறுவுவது, அனைத்து வாய்ப்புக்களையும் உயர்சாதியினருக்குத் திறந்துவிட்டு அதனை ஒருங்கு திரட்டுவதே இலக்கு. உண்மையில் இந்துத்துவா என்பது ஏகாதிபத்தியங்களுக்குத் தொண்டூழியம் செய்வதற்காகப் பயன்படுத்தப்படும் சொல்லாடல்; அதுதான், இந்துத்துவாவின் பொருளாதாரத் திட்டம், இந்தியாவைத் தவறாக வழிநடத்தி அழிவுத் திசையில் செலுத்துவது.

தமிழில் : **நீலகண்டன்**

தத்துவார்த்தம் 34



எஸ். தோதாத்ரி



# பௌத்தம்

**இந்தியாவில் மிக முக்கியமான மதங்களில் ஒன்று பௌத்தம். சமணம் தோன்றிய அதே காலத்தில் உருவானது பௌத்தம் ஆகும். ஒரு காலத்தில் நமது நாட்டில் செல்வாக்கு மிகுந்த மதமாக பௌத்தம் இருந்தது. இதற்கு அரசர்களது ஆதரவு உண்டு. அசோகர், கனிஷ்கர், ஹர்ஷர், சாளுக்கியர்கள், களப்பிரர்கள் ஆகியோர் இதனை ஆதரித்தனர்.**

புத்தர் காலத்தில் மௌரியப் பேரரசானது பல இனக்குழு சமுதாயங்களை அழித்து அடிமைப்படுத்தியது. அடிமைச் சமுதாயம் வேகமாக வளர்ந்து கொண்டிருந்த காலம் புத்தரது காலம். இதனால் மக்கள் படும் துன்பங்களைக் கண்டு இதனை நீக்குவதற்கு ஒரு வழி வேண்டும் என்று புத்தர் கருதினார். இதற்கு வேத, உபநிடதங்கள் சரியான பதிலை அளிக்கவில்லை.

எனவே, புத்தர் வேதங்களை மறுத்தார். அவர்கள் கூறும் கடவுளையும் மறுத்தார். இதற்கு மாற்றாக அவர் இந்த துன்பங்களுக்குக் காரணம் ஆசை என்று கூறினார். ஆசையை நீக்கிவிட்டால் இந்தத் துன்பங்கள் மறைந்துவிடும் என்பது அவரது வாதம்.

இன்றைக்கு சில மார்க்சியவாதிகள் இந்த ஆசைதான் வர்க்க முரண்பாடு என்று மார்க்ஸ் கூறியதாகவும், இதற்கும் ஒரு படி மேலே சென்று மார்க்ஸ் கூறிய எல்லாவற்றையும் புத்தர் ஏற்கனவே கூறி விட்டார் என்றும் சொல்லி, மார்க்சியத்தை ஒரு பெட்டிக்குள் அடைத்து பௌத்தம் என்ற பூட்டை போட்டு பூட்டி விடுகிறார்கள்.

மற்ற மதத் தத்துவங்களைப் போன்று பௌத்தத்தை விளக்குவது சற்று கடினமான காரியமாகும். ஏனென்றால் புத்தர் எதையும் விவரமாக கூறவில்லை. அவரிடம் கேட்கப்பட்ட பல கேள்விகளுக்கு அவர் மவுனம் சாதித்தார்.

புத்தர் மறைந்து சுமார் 200 ஆண்டுகளுக்கு பின்னர் அவரது சீடர்கள் புத்த மதத்தை முறைப்படுத்தத் தொடங்கினர். இதன் விளைவாக புத்த மதத்தில் 18 பிரிவுகள் தோன்றின. ஒவ்வொரு பிரிவிலும் தங்களது கொள்கைதான் சரியானது என்று வாதாடினர். இதன் விளைவாக பௌத்தம் என்ற தத்துவத்தில் முன்னுக்குப்பின் முரணாக கருத்துக்கள் தோன்றின. எவ்வாறு இருப்பினும் பௌத்த தத்துவம் ஒரு கருத்து முதல்வாத தத்துவம் என்று நாம் உறுதியாகக் கூறலாம். பௌத்தம் என்னும் சிறப்பான அம்சம் அது இயங்கியல் பற்றி அதிகம் பேசுகிறது. ஆனால் இந்த இயங்கியல் மதம் சார்ந்த ஒன்று; பொருள் சார்ந்தது அல்ல.

எல்லா தத்துவங்களையும் போல பௌத்தமும் பிராமணங்களைப் பற்றி பேசுகிறது. பௌத்தம் மேல் ஆட்சி, அனுமானம் என்று இரண்டு பிரமாணங்களை ஏற்றுக்கொள்கிறது. முன்னோர் உரை என்ற வேதங்களை அவை ஏற்றுக் கொள்ளவில்லை. பௌத்த தத்துவத்தில் மூன்று முக்கியமான கருத்துக்கள் உள்ளன. ஒன்று கடவுள் இல்லை என்பது. இரண்டு பொருள்கள் மாறுகின்றன என்று கூறுவது. மூன்று கன்மம் பற்றிய விரிவான விளக்கங்கள். புத்த மதத்தில் மாறுதல் பற்றி அதிகம் பேசப்படுகிறது.

நமது கண்ணுக்கு நேரே தெரியும் பொருள்கள் மாறிக்கொண்டே இருக்கின்றன. இலை சருகாகி மண்ணில் விழுந்து மண்ணோடு மண்ணாகி விடுகிறது. இந்த மாறுதல் இயங்கியலின் ஒரு பகுதியாகும். ஆனால், இது முழு இயங்கியல் அல்ல. எதிர் சக்திகளின் போராட்டம். பின்னர் அவை ஒன்றை ஒன்று மறுத்து ஒரு உயர் கட்டத்தை நோக்கி பொருள்கள் செல்கின்றன என்ற இயங்கியல் முதல்வாத கருத்து இங்கு இல்லை. இதனை நாம் எதிர்பார்க்கவும் கூடாது; எதிர்பார்க்கவும் முடியாது.

பௌத்தத் தத்துவத்தில் மிக முக்கியமான ஒன்று மாறுதலை பற்றி அவர்கள் பேசுவது. பௌத்தர்கள் பிரத்தியட்சம், அனுமானம் ஆகியவற்றை ஏற்றுக்கொள்கிறார்கள். எனவே இவர்கள் பொருளையும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பொருளை விட அதில் ஏற்படும் மாறுதல்களைப் பற்றித்தான் அவர்கள் அதிகம் பேசுகிறார்கள். பொருள்களுக்கு நிலைபெற்றிருத்தல், மாறுதல் ஆகிய இரண்டு அம்சங்கள் உண்டு. பௌத்தர்கள் மாறுதலை அதன் எல்லைக்கே கொண்டு செல்வதால் பொருளின் இருப்பை மறுக்கும் நிலைக்கு வந்துவிடுகிறார்கள். இது அத்வைதத்திற்கு நெருக்கமாக வரும் நிலையாகும். பௌத்தர்கள் கருத்துப்படி நாம் ஒரு கணத்தில் பார்க்கும் பொருள் மறு கணத்தில் இல்லை என்றாகிறது. உதாரணமாக தண்ணீரில் கால் வைக்கும்போது இருந்த கால் ஒன்று. தண்ணீரை விட்டு எடுத்தவுடன் இருக்கும் கால் வேறொன்று. முன்பிருந்த காலிலிருந்து அது மாறிவிட்டது. ஆகையினால் பௌத்தர்களுக்கு கணபங்கவாதிகள் என்ற பெயரும் உண்டு. இங்கு மாறுதல் இருக்கிறது, பொருள் இல்லை என்ற நிலை ஏற்படுகிறது. பௌத்த அறிஞர்களில் சிறந்தவரான நாகார்ஜுனர் என்பவர் மாறுதல் மட்டுமே உண்டு என்று கூறி சூனியவாதம் பேசினார். இந்தக் கருத்தை சங்கரர் ஏற்றுக்கொண்டார் என்று அறிஞர்கள் கூறுவர். ஆகையினால் சங்கரருக்கு மறைந்து உறையும் பௌத்தர் என்ற ஒரு பெயரும் உண்டு.

பௌத்தர்கள் மிக அதிகமாகப் பேசுவது கன்மம் என்பது பற்றி. இதுபற்றி சமணர்களும் பேசுகிறார்கள். ஆனால், சமணர்கள் ஆன்மாவை ஏற்றுக் கொள்பவர்கள். கன்மமானது ஆன்மாவைப் பற்றிக் கொள்கிறது என்று அவர்கள் கூறுவார்கள். ஆனால், பௌத்தர்கள் ஆன்மாவை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால், உயிர்களை கன்மம் பற்றிக் கொள்கிறது. எனவே கன்மத்தை நீக்குவதற்காக பல பிறவிகள் எடுத்து அதன் பின்னர்தான் நிர்வாண நிலையை அடைய முடிகிறது என்று அவர்கள் கூறுகிறார்கள்.

புத்தமதம் தத்துவத் துறையில் பல பெரும் அறிஞர்களை உருவாக்கியுள்ளது. கி.பி.16ஆம் நூற்றாண்டு வரை அது இந்தியாவில் இருந்தது. ஆனால், அதற்கு பின்னர் இந்தியாவில் மறைந்து விட்டது. இப்போது யாராவது நாங்கள் பின்பற்றினோம் என்று சொன்னால், அது ஒரு அடையாள அரசியல் தவிர வேறு எதுவும் இல்லை. வெளிநாடுகளிலுள்ள பௌத்தம் அந்தந்த நாட்டுக்கு ஏற்றபடி பல வடிவங்களைப் பெற்று நவீனமயமாக்கப்பட்டு உள்ளது.

தொடர்புக்கு: **98947 83657**

---



நீ.சு.பெருமாள்

# துக்ளக் அட்டைப் படம் சொல்லும் அரசியல்

அனைத்து சாதியினரும் கோயில் கருவறைக்குள் சென்று அர்ச்சகர் ஆகும் காலம் வருமாயின்.

பிறகு கோவிலுக்குள் இருப்பது கடவுள் இல்லை வெறும் கற்சிலைதான் என்று "அவாள்கள்" சொல்லிக் கொண்டே ஓடி விடுவார்கள் என்று அன்றைக்கே தந்தை பெரியார் சொன்னார்.

அது உண்மைதான் என்பது போல சமீபத்திய துக்ளக் வார இதழின் அட்டைப்படம் நமக்கு உணர்த்துகிறது.

அவாள் குரூப்பிற்கு இனி ஒரு போதும் குடியரசுத் தலைவர் பதவி கிடைக்கப் போவதில்லை என்பதால் அந்த உயர்ந்த பதவியையே கேவலப்படுத்தி துக்ளக் ஆசிரியர் குருமூர்த்தி தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்தி இருக்கிறார்.

வேலை காலி, 80 வயதுக்கு மேல் இருப்பவர் விண்ணப்பிக்கலாம் மாதத்திற்கு ஐந்து லட்சம் ரூபாய் சம்பளம்

உலகம் முழுவதும் ஓசி விமானப் பயணம் செய்யலாம். ஆண்டுக்கு ஒரு முறை குடியரசு நாளன்று மக்கள் மத்தியில் ஆறுதல் மொழியில் பேசலாம்.

எப்பொழுதாவது ஏதாவது ஒரு பைலில் கையெழுத்திட வேண்டியது வரலாம்.

குறிப்பு முற்பட்ட வகுப்பினர் இந்த வேலைக்கு விண்ணப்பிக்க வேண்டாம்.

இது தான் துக்ளக்கின் அட்டைப்படச் செய்தி....

அதாவது என்றைக்குமே முற்பட்ட வகுப்பார் குடியரசுத் தலைவராக இப் பதவிக்கு வந்ததில்லை என்பது போல, இன்றைய தலைமுறைக்கு தவறான வழிகாட்டுதலைத் தருவதே துக்ளக்கின் நோக்கம்..

இந்திய குடியரசுத் தலைவர் என்பவர் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை என்றாலும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தின் உறுப்பினர்களாகிய, மக்களவை மற்றும் மாநிலங்களவை, மாநில சட்டப் பேரவை உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்படுகிறார்.

ஆகவே, ஒட்டு மொத்த இந்திய மக்களால் தான் குடியரசுத் தலைவர் தேர்வாகிறார் எனலாம்.

இதுவரையில் இருந்த 14 குடியரசுத் தலைவர்களில் 8 பேர் முற்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள். அதாவது சரிபாதிக்கும் மேலான ஜனாதிபதிகள்...


நான்கு பேர் இசுலாமியர்கள்... சீக்கியர் ஒருவர், பட்டியலின வகுப்பார் எனப் பார்த்தால் 1997 ல் கே ஆர் நாராயணன் முதலில் வருகிறார். அதாவது இந்தியா விடுதலை பெற்ற அரை நூற்றாண்டுக்குப் பிறகு, தற்போது ராம்நாத் கோவிந்த்.

மீண்டும் இப்போது பாஜக ஒரு பழங்குடி வகுப்பைச் சேர்ந்த திரௌபதி முர்மு அவர்களை வேட்பாளராக அறிவித்துள்ளது.

கனவிலும் இனிமேல் முற்பட்ட வகுப்பார் வர முடியாது என்பதை உணர்ந்த துக்ளக் தற்போது குடியரசுத் தலைவர் பதவியை கேவலப்படுத்துகிறது.

தற்போது ஜனாதிபதி பதவி என்பது வேலை இல்லாத வேலை என்கிறது அவாளின் கூட்டம்...

கி பி... கி மு.... எல்லாம் போக வேண்டாம். கடந்த நூறு




ஆண்டுகளுக்கு முன்பு என்ன நிலைமை எனப் பார்ப்போம்....

1916 நவம்பர் 20 ல் நீதிக்கட்சி தொடக்கம்....

அப்போது நான்கரை கோடிப் பேர்கொண்ட சென்னை மாகாண மக்கள் தொகையில் 15 லட்சம் பேர் பிராமணர்கள். ஆனால் அன்றைய அவர்களின் ஆளுமையைக் கவனிப்போம்.

1885 ல் காங்கிரஸ் கட்சி தொடங்கப்பட்ட போது சென்னையில் இருந்து சென்ற ஆறு பிரதிநிதிகளில் 5 பேர் பிராமணர்கள்

சென்னை பல்கலைக்கழகத்தில் 1910இல் பதிவு செய்யப்பட்ட பட்டதாரிகள் எண்ணிக்கை 650 பேர்.

இதில் பிராமணரல்லாத இந்துக்கள் 12 பேர்கள் மட்டுமே.

பிற மதத்தினர் கிறிஸ்தவர் உள்ளிட்டோர் எண்ணிக்கை 72 பேர்கள் மட்டுமே அதாவது 566 பட்டதாரிகள் பிராமணர்களாகவே இருந்தனர்.

இந்த பட்டதாரிகள் தான் அரசு உயர் நிர்வாகத்திற்கு யார் வர வேண்டும் என்கிற முடிவை செய்கிற வாக்குரிமையை பெற்றவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1907ஆம் ஆண்டில் சென்னை மாகாணத்திற்கு பட்டதாரிகள் சார்பில் 12 பேர் தேர்வாகினர். இதில் ஒரே ஒருவர் மட்டுமே பிராமண ரல்லாதவர்.

1910க்கும் 1919 க்கும் இடையில் அரசு உயர் நிர்வாக குழுவில் இடம்பெற்றிருந்த 9 பேரில் 8 பேர் பிராமணர்கள்.

இதுதான் நீதிக் கட்சி தொடங்கியபோது இருந்த சமுதாய அமைப்பு

இதை எதிர்த்து தான் நீதிக் கட்சி தொடங்கப்பட்டது.

அதன் நீட்சிதான் சமூக நீதி என்கிற இன்றைய இட ஒதுக்கீடு சட்டம்.

இட ஒதுக்கீட்டை எதிர்க்கும் சித்தாந்தம் கொண்ட பாஜக கூட இந்த சமூக நீதிக் கொள்கையை எதிர்க்க முடியவில்லை.

நாங்கள் பட்டியலின வகுப்பைச் சேர்ந்த ஒருவரை மத்திய அமைச்சராக்கினோம். என்று சொல்லும் அளவுக்கு பாஜக வந்துள்ளது.

மதுரையில் புகழ் பெற்ற ஆலய நுழைவுப் போராட்டத்தின் போது பா.ஜ.க. – ஆர்.எஸ்.எஸ்.க்கு முன்னோடி இயக்கமான இந்து மகாசபை. அச்சச்சோ பட்டியலின மக்கள் ஆலயம் வருவதா என அலறியது. எதிர்த்தது.

1939 ஜூலை 8 ஆம் தேதியன்று அமைதியான முறையில் மீனாட்சி அம்மன் கோயிலின் அர்த்த மண்டபத்திற்கு அனைவரையும் அழைத்துச் சென்று வழிபடுவதென முடிவு செய்யப்படுகிறது.

ஆலம்பட்டியைச் சேர்ந்த சுவாமி முருகானந்தம், அரிசன சேவாலய தொண்டர்களான பி.கக்கன், முத்து, மதிச்சியம் வி.எஸ்.சின்னய்யா, வீராட்டிபத்தைச் சேர்ந்த பி.ஆர்.பூவலிங்கம் ஆகிய அரிசன மக்களின் பிரதிநிதிகளுடன் நாடார் வகுப்பைச் சேர்ந்த விருதுநகர் நகராட்சி மன்ற உறுப்பினரான எஸ்.எஸ்.சண்முக நாடார் என ஆறு பேரை கோயிலுக்குள் அழைத்துச் செல்வதென முடிவெடுக்கப்படுகிறது.

தமிழ்நாடு அரிசன சேவா சங்கத் தலைவர் வைத்தியநாத அய்யர், செயலாளர் எல்.என்.கோபால்சாமி ஆகியோர் முன்னிலையில் பல்வேறு எதிர்ப்புகளை மீறி ஆலய நுழைவுப் போராட்டம் வெற்றி பெறுகிறது.

ஆலயப் பிரவேசத்துக்குப் பிறகும் சனாதனிகள் அமைதியாக இருந்துவிடவில்லை.

அரிசனங்கள் கோயிலுக்குள் நுழைந்ததால் ஆலயம் தீட்டுப்பட்டுவிட்டது என்றும், ஆலயத்தைவிட்டு அம்மன் போய்விட்டதாகவும் பிரச்சாரம் செய்தார்கள். இந்த சனாதனிகளுக்கு தலைமை தாங்கிய நடேச அய்யர் இல்லத்தில் சிறிய அளவிலான மீனாட்சி அம்மன் விக்கிரகத்தை வைத்து வழிபடலாயினர்.

அத்துடன் நின்றுவிடாமல் ஆகம விதிகளையெல்லாம் காற்றில் பறக்க விட்டனர்.

மீனாட்சி அம்மன் ஆலயத்தில் இருந்த அர்ச்சகர்களை கடத்திச் சென்று கோயில் கதவுகளை பூட்டி சாவிகளையும் சனாதனிகள் கொண்டு சென்றனர்.

இதனை அறிந்த கோயில் நிர்வாக அதிகாரியும் பார் அட்லா பட்டம் பெற்றவருமான ஆர்.எஸ்.நாயுடு பூட்டுக்களை உடைத்து கதவுகளை திறந்துவிடுகிறார்.

வழக்கமாக அர்ச்சனை செய்திடும் அர்ச்சகர்களை எங்கு மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று தெரியாத நிலையில் தீவிர முயற்சிகள் செய்து வெளியூர்களிலிருந்து அர்ச்சகர்களை வைத்திய நாதய்யர் வரவழைத்து பூசைகள் தொடர்ந்து நடைபெறுவதற்கு அரும்பாடுபட்டார். என்பதும் வரலாறாகும்.

**அர்ச்சகர்கள் இல்லாத ஆலயமாக மீனாட்சி அம்மன் ஆலயம் இருக்க வேண்டும் என்கிற திட்டத்தை வைத்தியநாதய்யர் தகர்த்தெறிந்தார் என்பதற்காகவே வைத்தியநாதய்யர் இறந்த பிறகு இறுதிச் சடங்கு செய்ய பிராமணர்கள் மறுத்தனர் என்பதும் வரலாறாகும்.**

இந்தச் சூழலில்தான் குடியரசுத் தலைவர் தேர்தலைப் பார்க்க வேண்டும்.அவாள்கள் பதவியில் இருந்தால் அந்தப் பதவி கண்ணியமானது. உயர்வானது. நாட்டுப் பற்று மிக்கது. அவாளுக்கு இல்லை எனில். அந்தப் பதவியே தேவையில்லாத ஒன்று.

அரசமைப்புச் சட்டத்தின்படி இந்திய ஜனநாயகத்தில் மிக முக்கியப் பதவி நாட்டின் தலைவர் அவர். பெயரளவிலே ஒப்பந்தங்கள், ஆணைகள் வெளியிடப்படும். அப்படிப்பட்ட கண்ணியமிக்க பதவியை இவர்கள் இழிவுபடுத்துவது சரியா?

திருவிளையாடல் திரைப்படத்தில் வரும் புலவர் தருமியின் (நாகேஷ்) புலம்பல் நினைவுக்கு வருகிறது.

குடியரசுத் தலைவர் பதவி இனி நமக்கில்லை.... நமக்கு இல்லவே இல்லை.

தொடர்புக்கு: **9442678721**

# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இடைக்கமிட்டி மாநாடுகள்






**திருத்துறைப்பூண்டி:** திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டியில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திருத்துறைப்பூண்டி ஒன்றிய 25 வது மாநாடு வரம்பியம் ஊராட்சி மடப்புரம் அங்கை மஹாலில் பி.வி.ரத்தினசாமி மற்றும் அ.தங்கராசு நினைவரங்கத்தில் நடைபெற்றது. ஜி.சுப்பிரமணியன், ஜெ.கணேஷ், ஆர்.சுபிதா ஆகியோர் தலைமை ஏற்று நடத்தினர்.

மாநாட்டு கொடியினை வை.சிவபுண்ணியம் ஏற்றிவைத்தார். மறைந்த நமது கட்சியின் முன்னணி தலைவர்கள் ப.மாணிக்கம், தா.பாண்டியன், டாக்டர் வே.துரைமாணிக்கம், ஆர்.சுசீலா, டி.ஆனந்தன், பி.வி.ரத்தினசாமி, அ.தங்கராசு ஆகியோரின் படங்கள் திறக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாநாட்டு வரவேற்பு குழுவின் தலைவர் கோ.ஜெயபால் அனைவரையும் வரவேற்று பேசினார். கோ.சரவணன் கட்சியின் உறுதிமொழியை வாசித்தார். முன்னதாக மாநாட்டு பிரதிநிதிகள் அனைவரும் திருத்துறைப்பூண்டி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள பி.எஸ்.ஆர்.மணிமண்டபம் அருகிலிருந்து சட்டமன்ற உறுப்பினர் க.மாரிமுத்து, ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் அ.பாஸ்கர் ஆகியோர் தலைமையில் ஊர்வலமாக புறப்பட்டு மாநாட்டு அரங்கை வந்தடைந்தனர்.

ரூபாய் 6 இலட்சத்தில் தொகுப்பு வீடுகள் கட்டி தர வேண்டும், நகருக்கு இரயில்வே மேம்பாலம் அமைத்திட வேண்டும், அரசு பணியில் குடும்பத்தில் முதல் பட்டதாரி இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும், குடிமனை பட்டா இல்லாதவருக்கு பட்டா வழங்கிட வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன் மாநாட்டில் கலந்துகொண்டு வாழ்த்துரை வழங்கினார். கோ.பழனிச்சாமி மு. எம்.எல்.ஏ., தேசியக்குழு உறுப்பினர், வை.சிவபுண்ணியம் மு.எம்.எல்.எ., மாவட்ட செயலாளர், எம்.வையாபுரி, கே. உலகநாதன் மு. எம்.எல்.ஏ., க.மாரிமுத்து சட்டமன்ற உறுப்பினர், இரெ.ஞானமோகன், அ.பாஸ்கர் ஊ.ஒ.பெருந்தலைவர், பி.வி.சந்திரராமன், கே.ஆர்.ஜோசப், கே.ராஜா, ஆர்.சந்திரசேகர ஆசாத், கே.பாலு, டி.பி.சுந்தர் ஆகியோர் மாநாட்டை வாழ்த்தி பேசினர். வி.ஜவஹர் புதிய ஒன்றிய செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

**அலங்காநல்லூர் :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், மதுரை புறநகர் மாவட்டம், அலங்காநல்லூர் 24 வது ஒன்றிய மாநாடு கல்லணை சமுதாய கூடத்தில் நடைபெற்றது. பாலமுருகன், ராமர், அம்சவள்ளி தலைமை வகித்தனர். மூத்த தோழர் பாண்டி கொடியேற்றினார். மாநில செயற்குழு உறுப்பினர் கே.சந்தானம் துவக்கவுரையாற்றினார். மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் நிறைவுரையாற்றினார்.

மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் மூக்கம்மாள், ஏஐடியுசி புறநகர் துணைச் செயலர் பாலகிருஷ்ணன் வாழ்த்துரை வழங்கினர்.

அலங்கை ஒன்றிய செயலாளராக குமரேசன், துணைச் செயலாளர்களாக ராமர், பாலமுருகன், பொருளாளராக மாணிக்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மேலும் அலங்காநல்லூர் வாடிவாசலில் பாரம்பரிய கோயில்காளை வழிபாட்டு நிகழ்ச்சிகளை நடத்து உலகப்புகழ் ஜல்லிக்கட்டு நிகழ்ச்சியை அரசு அறிவித்த இடத்தில் நடத்துக, முல்லை பெரியார் கால்வாய் நீரை சாத்தியார் அணையுடன் இணைத்திடு, தேசிய கூட்டுறவு சர்க்கரை ஆலையை உடனே துவங்கிடவும், முடுவார்பட்டி பகுதியில் பழங்கள் பதப்படுத்தும் தொழிற்சாலை அமைத்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



**சமயநல்லூர்மேற்கு:** மதுரை புறநகர், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின், சமயநல்லூர் மேற்கு ஒன்றிய 24 வது மாநாடு மக்கள் மன்றத்தில் நடைபெற்றது. இதில் பெத்தனசாமி, வாசுகி தலைமை வகித்தனர். மூத்த தோழர் பழனிவேல் கொடியேற்றினார். மதுரை புறநகர் மாவட்டச் செயலாளர் பா.காளிதாஸ் துவக்கவுரையாற்றினார். மேற்கு ஒன்றிய செயலர் மூக்கம்மாள் வேலையறிக்கையினை சமர்ப்பித்தார். மாவட்ட புறநகர் துணைச் செயலர் மெய்யர் நிறைவுரையாற்றினார். ஒன்றிய செயலாளராக கண்ணன், துணைச் செயலாளராக இரவிச்சந்திரன், பொருளாளராக வாசுகி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தமிழக அரசு மற்றும் மாநகராட்சியிடம், சமயநல்லூர் பகுதியில் அரசு, கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திடவும், பரவை துவரிமான் இணைப்பு பாலத்தை மக்கள் பயன்பாட்டிற்கு உடனடியாக திறந்திடவும், ஊமச்சிகுளம் சாஸ்திரி நகர் பொதுமக்களுக்கு பயன்படும் வகையில் சமுதாய கூடம் அமைத்திடவும், சத்திரப்பட்டி சமத்துவபுரம் பகுதிகளுக்கு பேருந்து வசதி செய்து தரக்கோரியும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**இண்டூர் :** தருமபுரி மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் இண்டூர் வட்டார 3வது மாநாடு வட்டார துணை செயலாளர் மாணிக்கம், பழனிசாமி தலைமையில் இண்டூரில் நடைபெற்றது.

மாநாட்டில் மாநிலக்கு உறுப்பினர் எஸ்.சின்னசாயி கட்சி கொடி ஏற்றினார். முன்னாள் இண்டூர் வட்டார செயலாளர் குட்டி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வட்டார நிர்வாகக்குழு உறுப்பினர்.பி.மாது வரவேற்றார். முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் வாழ்த்தி பேசினர். வட்டார பொறுப்பு செயலாளர் எம்.சிவன் வேலை அறிக்கை வைத்து பேசினார். வட்டார பொருளாளர் எம்.மாதையன் வரவு, செலவு கணக்கை சமர்பித்தார்.

மாநாட்டில் இண்டூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை தரம் உயர்த்தியும், சித்தா மருத்துவ பிரிவு தொடங்கி கூடுதல் மருத்துவர்கள் நியமனம் செய்ய தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இண்டூர் பகுதி விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்பட விவசாயம் சார்ந்த தொழிற்சாலைகளை நிறுவ வேண்டும். ஒகேனக்கல் உபரி நீர் திட்டத்தை செயல்படுத்தி அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் நிரப்ப வேண்டும். விளை நிலங்களில் கெயில் நிறுவனம் சார்பில் எரிவாயு குழாய் பதிப்பதை தடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் வலியுறுத்தப்பட்டது.

முன்னதாக மாநாட்டில் மறைந்த தோழர்கள் நினைவாக உருவ படங்களை திறந்து வைத்து மாலை அணிவித்து மரியாதை செய்தனர். மாநாட்டில் இண்டூர் வட்டார செயலாளராக பி.மாது, துணைச் செயலாளர்களாக மணி, மாதையன், பொருளாளராக மாணிக்கம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**அரூர் நகரம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அரூர் நகர 2வது மாநாடு அரூரில் நடைபெற்றது. மாநாட்டிற்கு இரவீந்திரபாரதி தலைமை வகித்தார். நகர பொருளாளர் சுந்தரமூர்த்தி கட்சி கொடியேற்றினார்.

நகரக்குழு உறுப்பினர் சிற்றரசு வரவேற்றார்.நகர துணைச் செயலாளர் ராமமூர்த்தி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டு துவக்க உரை ஆற்றினார். மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கமலாமூர்த்தி ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

நகர செயலாளர் முருகன் வேலை அறிக்கை வைத்து பேசினார்.

அரூர் பேரூராட்சியை நகராட்சியாக தரம் உயர்த்த வேண்டும். அரூர் பேரூராட்சிக்குட்பட்ட தெருக்களில் உயர்மின் கோபுர மின் விளக்குகளை அமைக்க வேண்டும். ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும். தெருவிளக்கு, கழிவுநீர் கால்வாய் மற்றும் குடிநீர் குழாய்களை அமைக்க வேண்டும். அரூரில் புறநகர் பேருந்து நிலையம் புதியதாக ஏற்படுத்திட வேண்டும். அரூர் பஸ் நிலையத்தில் உள்ள புறக்காவல் நிலையத்தை மீண்டும் செயல்படுத்திட வேண்டும். அரூர் கடைவீதி சாலையில் போக்குவரத்து நெரிசலை கட்டுப்படுத்த இச்சாலையை ஒரு வழிப்பாதையாக மாற்ற வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். முருகேசன் நன்றி கூறினார்.

**அரூர் வட்டாரம்:** தருமபுரி மாவட்டம், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரூர் வட்டார 24வது மாநாடு அரூரில் நடைபெற்றது.

மாநாட்டிற்கு அல்லிமுத்து தலைமை வகித்தார்.மாவட்டக் குழு உறுப்பினர் கே.டி.ராஜீ கொடி ஏற்றினார். ஒன்றிய துணை செயலாளர் ஆர்.நடராஜன் வரவேற்றார். வெங்கடாசலம் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை துவக்கி வைத்து சிறப்புரையாற்றினார். மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட செயற்குழு உறுப்பினர் சி.விஸ்வநாதன், இ.தே.மா.ச.மாவட்ட செயலாளர் எஸ்.கமலாமூர்த்தி ஆகியோர் வாழ்த்தி பேசினார். ஒன்றிய செயலாளர் என்.அல்லிமுத்து வேலை அறிக்கை வைத்து பேசினார்.

அனைத்து கிராமங்களிலும் ஒகேனங்கல் கூட்டு குடிநீரை வழங்கு. அரூர் பகுதியில் மரவள்ளி கிழங்கு அதிகம் பயிரிடுவதால், அரசு சேகோ தொழிற்சாலை துவங்கிடு. மாம்பழ தொழிற்சாலை துவங்கிடு. வேலை வாய்ப்பை பெருக்கும் பொருட்டு சிப்காட் தொழிற்பேட்டை துவங்கிட வேண்டும். ஒகேனக்கல் உபரிநீர் கால்வாய் திட்டத்தை நிறைவேற்று. அரூர் ஒன்றியத்தில் வீட்டுமனை இல்லாத அனைவருக்கும் வீட்டுமனை வழங்கிடு. அரூரில் சித்த மருத்துவ கல்லூரி துவங்கிடு என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செயலாளர் எஸ்.தேவராசன் மாநாட்டை நிறைவு செய்து பேசினார். மாநாட்டில் ஒன்றிய செயலாளராக எஸ். சிற்றரசு, துணைச்செயலாளர்களாக கோ.வெங்கடாசலம், சி.பெருமாள், பொருளாளராக பெ. செங்கொடி ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

**பாலக்கோடு:** தருமபுரி மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி பாலக்கோடு வட்டார 5வது மாநாடு பஞ்சப்பள்ளியில் நடைபெற்றது. மாநாட்டிற்கு வட்டார செயலாளர் மகாதேவன் தலைமை வகித்தார். மாதப்பன் வரவேற்றார். பச்சியப்பன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். நாகராஜ் வரவேற்றார்.

மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்குமரன் வட்ட செயலாளர்மகாதேவன் வாழ்த்தி பேசினர். மாவட்ட செயலாளர் தேவராசன் நிறைவு செய்து பேசினார். காவேரி நன்றி கூறினார்.

பாலக்கோடு பகுதியில் தக்காளி மற்றும் மாம்பழ கூழ் தொழிற் சாலை அமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பாலக்கோடு பகுதியில் பூக்கள் மற்றும் புளிக்கு உரிய விலை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தருமபுரிஒசூர் நான்கு வழி சாலை பகுதிகளில் உள்ள ஏரிகளில் அரசு அனுமதியின்றி நொரம்பு மண் எடுப்பதை தடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டில் புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

**நல்லம்பள்ளி:** தருமபுரி மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நல்லம்பள்ளி வட்டார 3வது மாநாடு வட்டாரக்குழு உறுப்பினர் கல்யாணசுந்தரம் தலைமையில் நல்லம்பள்ளியில் நடைபெற்றது.

மாநாட்டில் மாவட்டக்குழு உறுப்பினர் எல்.வி.சின்னசாயி கட்சி கொடி ஏற்றினார். முன்னாள் இண்டூர் வட்டார துணை செயலாளர் பி.பாரதி அஞ்சலி தீர்மானம் வாசித்தார். வட்டார செயலாளர் எல்.ஆர். கிருஷ்ஷ்ணராஜ் வேலை அறிக்கை வைத்து பேசினார். வட்டார பொருளாளர் ஆர்.சங்கர் வரவுசெலவு கணக்கை சமர்பித்தார்.

முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினரும், மாநில செயற்குழு உறுப்பினருமான ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், மாவட்ட துணை செயலாளர் கா.சி.தமிழ்க்குமரன், மாவட்ட பொருளாளர் எம்.மாதேஸ்வரன் வாழ்த்தி பேசினர். மாநாட்டில் உயிர் பலி வாங்கும் ஆன்லைன் சூதாட்டத்தை தமிழ்நாட்டில் தடை செய்ய வேண்டும். இலளிகம்பச்சாகவுண்டர் தெரு சாலையை சீரமைக்கவேண்டும். நல்லம்பள்ளி பொம்மிடி இணைப்பு சாலை திட்டத்தை தொடங்கி விரைவாக போக்குவரத்தை தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒகேனக்கல் குடிநீர் அனைத்து கிராமங்களுக்கும் முறையாக வழங்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். சிப்காட் தொழிற்பேட்டையை செயல்பாட்டுக்கு கொண்டு வர தமிழ்நாடு அரசு விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மாநாட்டில் நல்லம்பள்ளி வட்டார செயலாளராக பி.பிரசாத், துணை செயலாளர்களாக பி.பாரதி, பொன்னியப்பன், பொருளாளராக தெய்வம் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். எஸ்.சித்துராஜ் நன்றி கூறினார்.

**பாப்பாரப்பட்டி:** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பாப்பாரப்பட்டி வட்டார மாநாடு சிங்காரவேலன், பெருமாள் தலைமையில் நடை பெற்றது.சாமிநாதன் வரவேற்றார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் கே.புள்ளாறு கட்சி கொடி ஏற்றினார். வட்டார செயலாளர் பெருமாள் வேலை அறிக்கை வைத்து பேசினார்.மாநில செயற்குழு உறுப்பினர் ந.நஞ்சப்பன் மாநாட்டை தொடங்கி வைத்து பேசினார்.மாவட்டச் செயலாளர் எஸ்.தேவராசன், துணை செயலாளர் எம்.கோபால், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எஸ்.கலைச்செல்வன் வாழ்த்தி பேசினர்.

மாநாட்டில் பாப்பாரப்பட்டி பகுதியில் வேளாண்மை கல்லூரி அமைக்க வேண்டும். சின்னாற்றின் குறுக்கே தொன்னகாது என்ற இடத்தில் தடுப்பணை கட்டி பாலக்கோடு, பாப்பாரப்பட்டி வழியாக தருமபுரி, பென்னாகரம் பகுதி ஏரிகளுக்கு தண்ணீர் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட ஒகேனக்கல் குடிநீர் வழங்க வேண்டும். ரேசன் கடைகளில் அத்தியாவசிய பொருட்கள் தட்டுபாடின்றி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 100 நாள் வேலை திட்டத்தை 200 நாட்களாக உயர்த்தி ரூ 600 தினக்கூலி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

வட்டார செயலாளராக பெருமான், துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, ஜி.முருகன், பொருளாளராக முருகன் தேர்வு செய்யப் பட்டனர்.சிவலிங்கம் நன்றி கூறினார்.

**பெத்தநாயக்கன்பாளையம்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் பெத்தநாயக்கன்பாளையம் நகர 2வது மாநாடு ஜீவா நகர் சமுதாயக் கூடத்தில் நடைபெற்றது. மாவட்டக்குழு உறுப்பினர் எஸ்.நடராஜன் தலைமை வகித்தார். மாநாட்டுக் கொடியினை கே.எஸ்.மாணிக்கம் ஏற்றி வைத்தார். மறைந்த தலைவர்களுக்கும், தோழர்களுக்கும் அஞ்சலி செலுத்தப்பட்டது.

மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் எம்.முனுசாமி மாநாட்டை துவக்கி வைத்து உரையாற்றினார். மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வி.முருகன், என்.எம்.சடையன், மாவட்ட துணைச்செயலாளர் டி.கண்ணன், மாவட்ட பொருளாளர் எம்.ராமன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். எஸ்.முருகன் (செயலாளர்), எம்.அர்ச்சுனன், என்.ராகேஷ் (துணைச்செயலாளர்கள்), கே.எஸ்.மாணிக்கம் (பொருளாளர்) ஆகியோர் நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

அனைத்து பேருந்துகளும் பெத்தநாயக்கன்பாளையம் பஸ் நிறுத்தத்தில் நின்று செல்ல வேண்டும். சேலம்–சென்னை எக்மோர் ரயில் இரு மார்க்கத்திலும் பெத்தநாயக்கன்பாளையம் ரயில்வே ஸ்டேஷனில் நின்று செல்ல வேண்டும். பெத்தநாயக்கன்பாளையம் நூலக கட்டிடம் பழுது அடைந்து விட்டது. எனவே நூலகத்திற்கு புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாவட்ட செயலாளர் ஏ.மோகன் நிறைவுரை ஆற்றினார்.

**தலைவாசல்:** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவாசல்,கெங்கவல்லி, செந்தாரப்பட்டி, தம்மம்பட்டி இணைந்த மாநாடு தலைவாசல் அரிமா சங்க சமுதாயக் கூடத்தில் பி.ராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டு கொடியினை ஏ.ஷாஜகான் ஏற்றி வைத்தார். மறைந்த தலைவர்களுக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. மாவட்ட செயலாளர் ஏ.மோகன் மாநாட்டை துவக்கி வைத்து பேசினார். மூத்த தொழிற்சங்கத் தலைவர் கு.சிதம்பரம், மாவட்டக்குழு உறுப்பினர் பா.தினேஷ், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் எஸ்.தனக்கோட்டி, எம்.கந்தசாமி ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

செயலாளராக பி.ராஜேந்திரன், துணைச்செயலாளர்களாக பி.பாண்டியன், பி.மணிகண்டன், பொருளாளராக ஏ.ஷாஜகான் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். தலைவாசல் வட்டாட்சியர் அலுவலகத்திற்கு புதியதாக கட்டிடம் கட்டித்தர வேண்டும். வடகுமரை ஊராட்சி அலுவலக கட்டிடம் பழுதடைந்து உள்ளது. புதிய கட்டிடம் கட்டித் தர வேண்டும். ஒன்றியம் முழுவதும் சாலைகள் செப்பனிடப்பட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. மாநாட்டை நிறைவு செய்து மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் டி.வி.கருணைதாஸ் பேசினார்.

**பெருந்துறை :** இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பெருந்துறை பேரூராட்சி கிளை மாநாடு பெருந்துறை ஜீவா இல்லத்தில் வி.சி.ராஜகோபால் தலைமையில் நடைபெற்றது.

கட்சியின் ஈரோடு தெற்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர். திருநாவுக்கரசு, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் சி.எம்.துளசிமணி ஆகியோர் அரசியல், அமைப்பு நிலை முடிவுகள் குறித்து விளக்கிப் பேசினர். கிளைச் செயலாளர் வி.சி.சாமிநாதன் வேலையறிக்கை முன்வைத்தார். வி.சி.செந்தில் குமார் செயலாளராகவும், ஓ.எஸ். சென்னியப்பன் துணைச் செயலாளராகவும், வி.சி.குமாரசாமி பொருளாளராகவும் ஏகமனதாகத் தேர்வு செய்யப்பட்டனர்.

இம்மாநாட்டில் ஒன்றியச் செயலாளர் ஓ.எம்.தெய்வசிகாமணி மற்றும் எம்.என்.சண்முக சுந்தரம், சி.பொன்னுசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பெருந்துறை பேரூராட்சி பகுதியில் மூன்று நாட்களுக்கு ஒருமுறை காவிரி குடிநீர் விநியோகம்

>> தொடர்ச்சி 11-ம் பக்கம்



# சங்கே முழங்கு!

## அக்னிபாத் - அக்னி வீர்

- ஞா.சிவகாமி

ஒன்றிய அரசு அண்மையில் அறிவித்த திட்டம். அதாவது, இந்திய நாட்டின் பாதுகாப்பு துறையில் இராணுவ வீரர்களை சேர்ப்பது பற்றியது. இதற்குப் பெயர்தான் அக்னிபாத் – தீப்பாதை அல்லது நெருப்பு பாதை. இந்த இராணுவ வீரர்கள் தீ வீரர்கள். இவர்கள் 17.5 வயதிலிருந்து 23 வயது உடையவர்களாக இருத்தல் வேண்டும். பணிக்காலம் 4 வருடம் மட்டுமே.

அந்த பணிக்காலத்தில் (மிநிழிளிஹி) எனும் திறந்தவெளி பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெறலாமாம் இந்த ராணுவ வீரர்கள். இதில் 50% திறன் மேம்படும் 50% கல்வியும் இந்தப் பட்டதாரி பட்டம் பெறத்தேவை. இந்த 50% படிப்பில் மொழி, பொருளாதாரம், சமூகவியல், கணக்கு, கல்வி, வணிகம், சுற்றுலா, தொழில் கல்வி, விவசாயம், சுற்றுச்சூழல், ஆங்கிலப் பேச்சுத்திறன் மற்றும் சோதிடம் கற்றுத் தரப்படுமாம்! இந்தப் பட்டத்தை யூ.சி.ஜி. மட்டுமல்ல உலகமே அங்கீகரிக்குமாம். இது தேசிய கல்வி கொள்கை 2020ல் வருகிறது.

இதில் சேர்ந்த இராணுவ வீரர்கள் பன்ம விலகல் உண்டு. அதாவது (னீ�்ஹீமீ வீஜீமீ மீஜ்வீ) என்ற வாய்ப்பு. அதாவது முதல் வருடம் நீங்கினால் இளநிலை பட்டதாரி சான்றிதழ், இரண்டாம் ஆண்டு நீங்கினால் இளநிலை பட்டப்படிப்பு சான்றிதழ், மூன்றாமாண்டு படித்து முடிந்தால் இளங்கலை பட்டம் சான்றிதழாக வழங்கப்படுமாம். நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்றால் 25% அக்னி வீரர்களிலிருந்து இராணுவ வீரர்கள் ஆவர். 75% வெளியேற்றப்படுவர். ஏனெனில் இவர்கள் நியமனம் செய்யப்படுவதே ஒப்பந்த அடிப்படையில், தற்காலிக நியமனம். அதாவது காண்ட்ராக்ட் ராணுவ வீரர்கள்.

இந்தியாவைப் பாதுகாக்கும் இராணுவ வீரர்களை ஒப்பந்த அடிப்படையில் எடுப்பதை ஏற்றுக்கொள்ள இயலாது. ஏனெனில் இவ்வீரர்கள் தம் உயிரையும் துச்சமென எண்ணி நாட்டிற்காக, அதன் பாதுகாப்பிற்காக உழைக்க வரும் இளைஞர்கள். இவர்கள் நான்கு வருடம் கழித்து, வேலை இல்லாமல் இருக்க முடியுமா?

23 வயதிற்குப் பின்னரே வாழ்க்கை, குடும்பம், பெற்றோர் என கடமை விரிவடைகிறதே! இத்திட்டம் வேலையில்லா திண்டாட்டத்தை மறைக்க போடப்பட்ட திட்டம். ஏனெனில் இதில் உள்ளது மறைமுக வேலை யின்மை மேலும் இவர்கள் வாங்கிய பட்டப்படிப்பிற்கும் கல்லூரியில் சேர்ந்து படிக்கும் பட்டபடிப்பிற்கும் ஏராளமான வேறுபாடுகள்! வித்தியாசங்கள்!

இந்த விஞ்ஞான காலத்தில் சோதிடம் எதற்கு? இத்திட்டம் வேலை கொடுத்த மாதிரியும், வேலையைவிட்டு எடுத்த மாதிரியும் இருக்கும். தமிழக பழமொழியில் சொல்வதானால் பிள்ளையையும் கிள்ளிவிட்டு, தொட்டிலையும் ஆட்டுவது போன்று!

பின் இவர்களுக்கு வழங்கும் சம்பளத்தில் ஒரு பகுதி பிடித்தம் செய்யப்பட்டு ஐந்து லட்சம் ரூபாய் வழங்கப்படுமாம்! ஓய்வூதியம் கிடையாது. இந்த ராணுவ வீரர்களின் கல்வித்தரம் மட்டும் கேள்விக்குறியானது. வயதும் ஆனதால் மீண்டும் படிக்க இயலாத சூழல்! வேலையில்லா சூழல் ஏற்படும். எனவே வேலையில்லா இளைஞர்களின் எண்ணிக்கை வருடந்தோறும் உயரும். அது நாட்டிற்கு நல்லதல்ல. நாட்டின் வளர்ச்சிக்கு உகந்ததல்ல.

மேலும் இந்த ராணுவ வீரர்கள் முழுமையான, நிறைவான பயிற்சி பெற இயலாத சூழல் உண்டாகும். போர் ஆயுதங்களை கையாளுவதில் மிக நுண்ணிய அறிவுத் திறனும், ஆய்வுத் திறனும் இராணுவ வீரரின் அடிப்படை தகுதிகளாகும். இன்னும் சொல்லப்போனால் நாட்டின் பூகோளம், நாட்டின் எல்லைகள், அண்டை நாடுகள், தட்பவெப்ப நிலைகள் குறித்த அறிவும் அத்தியாவசியமானது.

எனவே, முன்பிருந்த ராணுவ வீரர்களை தெரிவு செய்யும் முறையைப் பின்பற்றி இராணுவ வீரர்களை தேர்வு செய்வது, பணி ஆண்டுகளை நீடிப்பது, ஓய்வூதியம் வழங்குவது, நம் நாடு இராணுவ வீரர்களுக்கு செய்யக் கடமைப்பட்டுள்ளது.

இதில் தளர்வுகள் கூடாது. அறிவியல் பூர்வமான முடிவே நாட்டிற்கும், இராணுவ வீரர்களுக்கும் நல்லது. இங்கே பணமின்மை குறுக்கிடக்கூடாது. இளைஞர்களின் வளமான எதிர்காலம் காலத்தின் கட்டாயம். எனவே இந்தியாவே இனி இளைஞர்களின் கைகளில் தான்! எதிர்காலத்தை நிர்வகிக்க மட்டுமல்ல; நிர்ணயம் செய்வதும் நாட்டின் இளைஞர்களே.

எனவே இந்த அக்னி பாத், அக்னி வீர், நெருப்பு பாதை, நெருப்பு வீரர் திட்டம் ஏற்றுக்கொள்ள இயலாது.

# வாழ்விட உரிமையை உடனே வழங்குக!

## தமிழ்நாடு கோயில் மனைகளில் குடியிருப்போர் வாழ்வுரிமை மாநாடு அறைகூவல்




தமிழ்நாடு கோயில் மனைகளில் குடியிருப்போர் மற்றும் கடைகள் வைத்திருப்போரின் வாழ்வுரிமை கோரிக்கை மாநாடு அண்ணா கலையரங்கத்தில், சிவசக்தி நாட்டியக் குழுவினின் பரதநாட்டியம், ஈகை ராஜ் சிலம்பம் பயிற்சி பள்ளி மாணவர்களின் சிலம்பாட்டம், எஸ் ஈவண்ட் குழுவினின் இன்னிசை போன்ற கலை நிகழ்ச்சிகளுடன் அரங்கம் நிறைந்த மக்களுடன் கோலாகலமாக நடைபெற்றது.

தமிழ்நாடு கோயில்மனை குடியிருப்போர் சங்கத்தின் மாநில பொருளாளர் எஸ்.ஏழுமலை வரவேற்புரையாற்றினார். தலைவர்களுக்கு மாநில தலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன், மாநில பொருளாளர் எஸ்.ஏழுமலை, தமிழக இந்து சமய திருக்கோயில்களின் வாடகைதாரர்கள் சங்க பொது செயலாளர் கே.மணி, தமிழ்நாடு கடை, கட்டிட வாடகைதாரர்கள் நல சங்க பேரமைப்பு தலைவர் ராதாகிருஷ்ணன் சால்வை அணிவித்து மரியாதை செலுத்திய பிறகு, மாநாட்டிற்கு தலைமை தாங்கிய மாநிலதலைவர் வி.அ.பாலசுப்பிரமணியன் தலைமையுரை ஆற்றினார்.

வணிகர் சங்க தலைவர் ஏ.எம். விக்கிரமராஜா, மதிமுக தேர்தல் பணிக்குழு இரா.அந்திரிதாஸ், தமிழக காங்கிரஸ் கட்சி துணைத்தலைவர் பொன்.கிருஷ்ணமூர்த்தி, சிபிஎம் மத்தியக்குழு உறுப்பினர் சண்முகம், சிபிஐ சட்டமன்ற உறுப்பினர்கள் டி.ராமச்சந்திரன், க.மாரிமுத்து, மகளிர் அணி அமைப்பாளர் ஆர்.பூங்கொடி ஆகியோர் குடியிருப்போரின் கோரிக்கைகளை வலியுறுத்திப் பேசினர்.

சங்க செயலாளர் நா.பெரியசாமி மாநாட்டின் தீர்மானங்களை தனக்கே உரிய பாணியில் எடுத்துரைத்தார். சிபிஐ மாநில செயலாளர் இரா. முத்தரசன் பேசும்போது, "1998 க்கு முன்பு குடியிருப்போரிடம் பகுதி முறையில் தொகை வசூலிக்கப்பட்டதையும், பின்பு அது மாற்றப்பட்டு சதுரடி கணக்கில் சந்தை மதிப்பில் வாடகை வசூலிக்கப்படுவதையும் அதனால் கோயில் மனைகளில் குடியிருப்போர், தங்கள் உரிமைகளை இழந்து விட்டனர் என்றும், உரிமைகள் மீட்டெடுக்கப்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

அதிமுக அரசால் புகுத்தப்பட்ட சட்டங்கள் நீக்கப்படவேண்டும், டாக்டர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசாணைகள் 456–298 தொடரவேண்டும்" என்று வலியுறுத்தினார்.

நிறைவாக பேசிய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, ஏழை, எளிய மக்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு தான் கூட்டாக குடியேறியவர்களை வாடகைதாரராக கருதும்படி முதல்வர் உத்தரவிட்டுள்ளார். எனவே, கூட்டாக குடி யேறியவர்கள் அந்தந்த கோயில்களில் தங்களை வாடகை தாரர்களாக பதிவு செய்து கொள்ள வேண்டும். நியாய வாடகை நிர்ணய குழு அடுத்த மாதம் இறுதிக்குள் புதிய வாடகையை நிர்ணயம் செய்து வழங்கும். அதனை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பாக வெளியிடுவார்.

புதிய வாடகை நிர்ணயம் தற்போதைய வாடகையை விட குறைவாக தான் இருக்கும். குடியிருப்போர் அதிகப்படியாக செலுத்தியிருந்தால் அது சரிசெய்யப்படும் என்று கூறினார்.

மாநாட்டின் இறுதியில் பாடி, ஜகதாம்பிகை நகர் செயலாளர் என். பிரபாகரன் நன்றி கூறினார்.

மாநாட்டுத் தீர்மானங்கள் வருமாறு:

**முதலமைச்சருக்கு நன்றி:** தமிழ்நாடு கோவில் மனையில் குடியிருப்போர் சங்கத்தின் கோரிக்கைகளை இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் முதல்வருடன் கலந்து பேசி உரிய தீர்வு காண்பதாக உறுதியளித்தார். இதனைத் தொடர்ந்து முதலமைச்சர் அவர்கள் கோயில் மனைகளில் குடியிருப்போர் பிரச்சனைகள் தொடர்பாக ஆய்வு செய்து அரசுக்கு பரிந்துரை வழங்க உயர் அதிகாரிகள் கொண்ட குழு அமைத்திருப்பதை இந்தக் கோரிக்கை மாநாடு நன்றி பாராட்டி வரவேற்கிறது.

தமிழ்நாடு முழுவதும் கோவில்கள், மடங்கள், தேவாலயங்கள், மசூதிகள் உள்ளிட்ட வழிபாட்டு அமைப்புகளுக்கு சொந்தமான நிலங்களில் ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுகள் கட்டி, வழிவழியாக வாழ்ந்து வருகின்றன. கோயில் நிர்வாகத்திற்கு பகுதி, அல்லது ஆண்டு குத்தகை என்று பலமுறைகளில் கட்டணம் செலுத்தி வருகின்றனர்.

கோயில் நிலங்களின் உரிமைக்கு பாதகமின்றி, கோயில் மனை குடியிருப்போரின் அமைதியான வாழ்வில் இந்துசமய அறநிலையத் துறையின் சட்டங்களும், அரசாணைகளும் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி வருகிறது.

கடந்த 2003 ஆம் ஆண்டில் இந்துசமய அறநிலையங்கள் சட்டத்தில் 34ஏ, பி, சி, டி என பிரிவுகள் புகுத்தப்பட்டன. இச்சட்டப்பிரிவுகள்படி பகுதி அல்லது குத்தகை வசூலிக்கும் முறைக்கு பதிலாக அடிமனையின் சந்தை விலைமதிப்பில், சதுர அடி கணக்கில் வாடகை நிர்ணயிக்கப்பட்டதால் குடியிருப்போர் செலுத்த முடியாத பெருந்தொகை நிலுவையாக குவிந்துள்ளது. புகுத்தப்பட்ட புதிய சட்ட பிரிவுகளை கோவில் மனைகளில் குடியிருந்து வருவோரின் வாழ்வுரிமையை வேரோடு பறிக்கும் ஆயுதங்களாக இந்துசமய அறநிலையத்துறை பயன்படுத்தி வருவதை இம்மாநாடு அரசின் கவனத்திற்கு சுட்டிக்காட்டுகிறது.

2003ஆம் ஆண்டில் புகுத்தப்பட்ட 34ஏ, பி, சி, டி என்ற நான்கு சட்டப் பிரிவுகளையும், முழுமையாக நீக்கம் செய்ய வேண்டும் என்று கோருவதுடன் கோயில்மனைகளில் குடியிருந்து வருவோர்களிடம் 1998 முன்னர் ''பகுதி'', அல்லது ''ஆண்டு குத்தகை'' என்ற முறையில் கட்டணம் வசூலிக்கும் பழைய முறைக்கு திரும்ப வேண்டும் என்றும், முன்னாள் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் அறிவிக்கப்பட்ட அரசாணைகள் 456 மற்றும் 298ஐ நடைமுறைப்படுத்த வேண்டியும் மாநாடு தமிழ்நாடு அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

**வாழ்விட உரிமை வழங்கப்பட வேண்டும்**

கோயில் மனைகளில் வசித்து வர ஒப்பந்தம் பெற்றவர்கள் தங்களது அயராத உழைப்பாலும், சொந்தமாக செலவழித்தும் வீடுகளை கட்டி வாழ்ந்து வருகின்றனர். அடிமனைக்கான கட்டணத்தை கோவில் நிர்வாகத்திற்கு முறையாக செலுத்தி வந்ததுடன், வீடுகள் உட்பட அனைத்துக் கட்டுமானங்களையும் தங்கள் வாரிசு தாரர்களுக்கு மாற்றித் தரவும், மூன்றாவது நபருக்கு உரிமை மாற்றம் செய்யவும் உரிமை பெற்றிருந்தனர். இந்த வசிப்பிட உரிமையை பறித்துக் கொண்ட இந்துசமய அறநிலையத்துறை குடியிருந்து வருவோரின் நில மேம்பாடு, கட்டுமானச் செலவுகளை கருத்தில் கொள்ளாமல் தற்போதுள்ள வசிப்பிடங்களை கோயிலுக்கு ''தானமாக'' எழுதித் தருமாறு நிர்பந்தித்து வருவதை கைவிட வேண்டும். எவ்வித அச்சுறுத்தலும் இல்லாமல் அனுபவித்து வருவதற்கான முறையில் ''உரிமை''யை உறுதி செய்யவும் குடிநீர் இணைப்பு, கழிவுநீர் இணைப்பு, மின் இணைப்பு உள்ளிட்ட அத்தியாவசிய சேவைகளை பெறுவதற்கு இந்துசமய அறநிலையத்துறையிடம் தடையின்மை சான்று பெற வேண்டும் என்ற நிபந்தனையை நீக்க வேண்டும்.

**ஆக்கிரமிப்பு நிலங்களை விடுவித்து பட்டா வழங்குக...**

இனாம் ஒழிப்பு, நில உச்சவரம்பு சட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இந்தச் சட்டங்கள் நடைமுறைக்கு வந்த காலங்களில் கிராமநத்தம், பட்டினநத்தம், குடிக்காணி, சர்க்கார் புறம்போக்கு போன்ற இனங்களில் உள்ள நிலங்களில் வாழ்ந்து வருவோர் அரசிடம் முறையிட்டு நிலப்பட்டா பெறவில்லை. இந்த வகையில் உள்ள நிலங்களை எந்தவித ஆவணங்களும் இல்லாமல் இந்துசமய அறநிலையத்துறை ஆக்கிரமித்து கொண்டிருக்கிறது. அறநிலையத்துறையால் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களில் வசித்து வருவோர்களிடம் கட்டணமும் வசூலித்து வருகிறது. இந்த நியாயமற்ற நடைமுறையை உடனடியாக கைவிட வேண்டும். அவைகளில் வாழ்ந்து வருவோருக்கு மனை நிலத்தை சொந்தமாக்கும் வகையில் மனைப்பட்டா வழங்க வேண்டும் மேலும் 1971ஆம் ஆண்டு கலைஞர் அவர்களால் வழங்கப்பட்ட இணைப் பட்டாக்களை அங்கீகரிக்க வேண்டும் என மாநாடு தமிழ்நாடு அரசை கேட்டுக் கொள்கிறது.

**நீதி பெறும் உரிமை வழங்க வேண்டும்**

கோயில் மனைகளில் குடியிருப்போர்களுக்கும், கோயில் நிர்வாகம் மற்றும் அறநிலையத் துறைக்கும் இடையில் முரண்பாடுகள், தாவாக்கள் எழும்போது, அது தொடர்பாக உரிமையியல் நீதிமன்றங்களுக்கு செல்லும் உரிமை மறுக்கப்பட்டுள்ளது. தவறு செய்பவர்களிடமே நீதி வழங்கும் பொறுப்பை ஒப்படைத்திருப்பது இயற்கை நியதிக்கு மாறானது. இந்துசமய அறநிலையத்துறை நடவடிக்கைகள் தொடர்பாக உரிமையியல் நீதிமன்றங்களில் முறையிட்டு, நியாயம் பெறும் உரிமை வழங்க வேண்டும் என மாநாடு தமிழ்நாடு அரசைக் கேட்டுக் கொள்கிறது.

# நீதிபரிப

## அனைவருக்கும்

## உறுதிப்படுத்



**நீதியரசர்**
**மதன் பீமாராவ் லோகுர்**
உச்சநீதிமன்ற நீதிபதி (பணி ஓய்வு)

**நாட்டில் இரண்டு நீதிமுறைகள் நிலவுகிறதா? உண்மையில் உச்சநீதிமன்றம் சொல்லியது: ‘‘‘ஒன்று, பணக்காரர்கள், வசதி படைத்தோர் மற்றும் அரசியல் அதிகாரத்தையும் செல்வாக்கையும் வளைக்கத் தெரிந்தோருக்கானது; மற்றொன்று, வசதியற்றவர்கள், நீதியைப் பெறும் சக்தியற்றவர்கள் அல்லது அநீதியை எதிர்க்க முடியாதவர்களுக்கானது. இப்படி இணையான இரண்டு நீதி முறைகள் இருக்க முடியாது.” எதார்த்தத்தில் இரண்டு இணையான நீதி முறைகள் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது.**

அதைத்தான் டெல்லி முந்த்கா மெட்ரோ ரயில் நிலையம் அருகில் உள்ள வணிக வளாகத்தில் நிகழ்ந்த துயர்மிகு தீ விபத்தும், புல்டோசர் உதவியுடன் நடத்தப்பட்ட ஜகான்கீர்புரி இடிப்பு நடவடிக்கைகளும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன.

**அகதிகளாக்கும் புல்டோசர்:**

டெல்லி மற்றும் அதைச் சுற்றிலும் எண்ணற்ற சட்டவிரோதக் கட்டுமானங்கள், அது போல நாட்டின் பலபகுதிகளிலும் இருப்பது ஊரறிந்த ரகசியம். டெல்லியைப் பொருத்தவரை 80 சதவீதத்திற்கும் மேற்பட்ட கட்டடங்கள் சட்டவிரோதமானவை மற்றும் பொது இடத்தை ஆக்கிரமித்துக் கட்டப்பட்டவை என முதல்வர் அரவிந்த் கெஜ்ரிவால் கூறியுள்ளதாகத் தகவல். மேலும் சமீபத்திய புல்டோசர் இடிப்பு நடவடிக்கைகள் தொடருமெனில் 63 லட்சம் மக்கள் வீடு இழந்து அகதிகள் ஆவார்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.

வீடு இழந்து நிர்கதியானவர்கள் மிகப் பெரும்பாலும் ஏழைகள், ஏதுமற்றவர்களாகவே இருப்பர் என நான் நம்புகிறேன். ஏனெனில் பணம், ஆள் படை அதிகாரம் அல்லது அரசியல் சக்திமிக்க செல்வாக்கு உடையவரைத் தொட்டுவிடும் துணிச்சல் மாநகராட்சி அதிகாரிகளுக்கு இல்லை. கடந்த காலச் சமீப உதாரணங்கள் சிலவற்றைப் பார்க்கலாம்:

எங்கே கட்டுமானங்கள் கட்டப்படக் கூடாதோ, ஆனால் அங்கெல்லாம் கட்டடம் எழும்பி இருக்கும்; துயர நிகழ்வு நேரும் முன் அவை இடிக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் துரதிருஷ்டவசமாக அங்கெல்லாம் நடவடிக்கை எடுக்கப்பட்டிராது; காரணம், அந்தக் கட்டடங்களோடு தொடர்புடையவர்கள் பணக்காரர்களாக, அல்லது ஆள் படை, அதிகாரம் மிக்கவர்களாக, அல்லது அரசியல் செல்வாக்குடையவர்களாக அல்லது இந்த மூன்றும் உடையவராய் இருக்கலாம்.

**உப்ஹார் சினிமா தியேட்டர் துயர நிகழ்வு**

டெல்லி கீரின் பார்க் பகுதியின் புகழ்பெற்ற உப்ஹார் தியேட்டரில் 1997ல் நடந்த துயர்மிகு தீ விபத்து இன்றும் தொடர்ந்து நம்மைத் துன்பப்படுத்துகிறது. இந்த ஜூன் 13, மறக்க முடியா பேரழிவின் 25வது ஆண்டு. 59 உயிர்களை இழந்த, நூற்றுக்கும் மேற்பட்டோர் தீக்காயங்களின் நெஞ்சைப் பிழியும் சோகம் நினைவில் ஆடுகிறது. அத்துயருக்குக் காரணமான தியேட்டர் உரிமையாளர்கள் மற்றும் விபத்தை அனுமதித்த அதிகாரிகள் தண்டிக்கப்பட்டார்கள் என்பது உண்மையாயினும், அது அவர்களுக்கு என்ன ஆறுதலை அளிக்க முடியும்?

என்னுடைய கேள்வி இதுதான்! முனிசிபல் அதிகாரிகளுக்குத் தெரிந்தே நடந்த இந்தத் துயரினைத் தடுக்க அந்த அதிகாரிகள் என்ன செய்தார்கள்? ஏன் கட்டட விதிகள் அமல்படுத்தவில்லை? அந்தக் குற்றச் செயல் அலட்சியத்திற்கு அவர்கள் தகுந்த முறையில் தண்டிக்கப்பட்டார்களா? யாருக்கும் இதற்கான விடை தெரியாது. ஒருக்கால் எல்லா வகையிலும் அவர்கள் எளிதாகத் தப்பி வெளியே வந்திருக்கலாம். நீதிபரிபாலன முறையில் பொறுப்பு என்பது இல்லை என்பதற்கு உப்ஹார் துயரம் சிறந்ததோர் உதாரணம்.

நீதிபரிபாலனத்தில் பொறுப்பின்மை என்பது நீண்ட காலப் பின்விளைவுகளை உடையது. வருமுன் காக்கும் பாதுகாப்புப் பாடங்கள் கற்கப்படுவதே இல்லை. சில பாடங்கள் கற்றாலும் அதுவும் விரைவில் மறக்கப்பட்டு, தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை. பிரச்சனை சிறிதாக இருக்கும்போது காலத்தில் நடவடிக்கை எடுக்கப்பட்டால் பின்னர் வருந்தத் தேவையில்லை.

**பவானா தொழிலகப் பகுதி பெரும்தீ**

2018 ஜனவரியில் டெல்லிப் புறநகரின் பவானா தொழிலகப் பகுதியில் நடந்த பெரும் தீவிபத்து 17 உயிர்களைப் பலி வாங்கியது, மிகப் பலருக்குக் கடுமையான தீக் காயம். தொழிற்சாலை அதிபர் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலையானார். உப்ஹார் துயரச் சம்பவத்திலிருந்து பாடம் கற்றிருந்தால், தீர்வு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், உப்ஹார் பெரும்தீ மீண்டும் நிகழாது தடுக்கப்பட்டிருக்கும் அல்லவா?

மீண்டும் உயிர்ப்பலி வாங்கும் தீ விபத்துக்கள் நடக்குமென்றால், மாநகராட்சி மற்றும் சட்டரீதியான அதிகாரமுடைய அதிகாரிகள் தங்கள் பணிகளைச் செய்யவில்லை என்பதே பொருள். அவர்கள் கடமையைச் செய்திருந்தால் பவானா துயரம் நடந்திருக்காது. அதிகாரிகளின் மெத்தனம், நடவடிக்கையின்மையே பவானா பெரும் துயருக்குப் பொறுப்பு என அவர்கள் ஏன் பொறுப்பாளி ஆக்கப்படவில்லை?

**ஆர்பிட் பேலஸ், சர்தார் பஜார் அனாஜ் மண்டி தீ விபத்துகள்**

ஓராண்டிற்குப் பிறகு மற்றொரு தீ விபத்து மக்கள் கூட்டம் நிரம்பிய கரோல் பாக் பகுதியின் ஹோட்டல் ஆர்பிட் பேலஸ் இடத்தில் ஏற்பட்டது. 17பேர் பலி, 35 பேர் காயம். மாநகராட்சி அதிகாரிகள் கண்ணை மூடியிருந்து நடவடிக்கை எடுக்காது மெத்தனமாக இருந்ததற்காக அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா? அதே ஆண்டு 2019 டிசம்பரில் டெல்லி, சர்தார் பஜார் பகுதியின் அனாஜ் மண்டியில் பெரும் தீ விபத்து. அதில் 43 பேர் மடிந்து, 67 பேர் கடுமையாகக் காயமடைந்தனர். இறந்து போனவர்கள் பீகார் மற்றும் உ.பி. யிலிருந்து வந்த புலம் பெயர்ந்த தொழிலாளர்கள், இப்போது அவர்கள் வெறும் புள்ளிவிபரமாகச் சுருங்கினர்.

அந்தக் கட்டடத்தில் சட்டவிரோதமான உற்பத்தி அலகுகள் செயல்பட்டுவந்தன. அதற்குத் தீ அணைப்புத்துறையிலிருந்து தடையில்லாச் சான்று இல்லை. அக்கட்டடத்தில் குவிக்கப்பட்டிருந்த எரியக்கூடிய பொருட்கள், ஒரு துயரம் நிகழக் காத்திருந்தது. பரவிய தீ நாக்குகளிலிருந்து அந்தத் தொழிலாளர்களுக்குத் தப்பியோட முடியாதபடி வெளியேறும் வாயில் பொருட்களால் அடைக்கப்பட்டிருந்தது. ஜன்னல்கள் சீல்வைக்கப்பட்டிருந்தால், அபாயகரமான புகை மற்றும் கார்பன் மோனாக்ஸைடு நச்சு வாயு சூழ இறுதியில் பரிதவித்து மூச்சுத் திணறி அவர்கள் மாண்டனர்.

**கட்டட உரிமையாளர்கள் மற்றும் அவர்களது குழாமும் கைது செய்யப்பட்டனர்; அதனால் என்ன, பின்னர் பிணையில் விடுதலையானார்கள். கடமை தவறிய மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் தீ விபத்துத் தடுப்புக்கான தடையில்லா சான்று வழங்கும் அதிகாரிகளுக்கு எதிராக என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அவர்கள் அல்லவா இந்த அத்துமீறல்கள், விதி மீறல்கள் தொடர்வதற்கு அனுமதித்தார்கள்.**




கட்டட உரிமையாளர்களைப் போலவே அவர்களும் அல்லவா அதற்கான பழியை ஏற்க வேண்டும்? அவர்கள் பொறுப்பு இல்லையா? அல்லது அவர்கள் கண்களை மூடிக் கொள்ள தீமைகளைப் பார்க்காதது போல பாவனை செய்ய ஒருக்கால் கையூட்டு அளிக்கப்பட்டிருக்கலாம் என்பதால் அவர்கள் சுலபமாகத் தப்பிச் சென்றுவிட உரிமை படைத்தவர்களா, என்ன?

**கட்டடங்களின் அடிப்படை குறைபாடுகள்**

இது போன்ற பல நிகழ்வுகள். கலெக்டிவ் டெல்லி என்ற மாணவர் இளைஞர் அமைப்பு இந்தத் துயர நிகழ்வுகளை எல்லாம் நன்கு பட்டியலிட்டு ஆவணமாக்கி அதன் ஒரே மாதிரியான புறக்கணிப்பு அலட்சிய குற்றத்தைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளனர். பிரதானமாக, வானுயர்ந்த பிரம்மாண்டமான கட்டடங்கள் எந்தவிதக் கட்டட வரைபடத் திட்ட அனுமதியும் பெறாமல் கட்டி எழுப்பப்பட்டுள்ளன.

இவை யாருமறியாமல் இருளில் கட்டப்பட்டதல்ல, பட்ட பகலில் சில மாதங்களில் நடத்தி முடிக்கப்பட்டவை. அப்படிக் கட்டிக் கொண்டிருந்த காலத்தில் மாநகராட்சி அதிகாரிகள் என்ன செய்து கொண்டிருந்தனர்? இக்கட்டடங்களுக்குத் தீயணைப்புத்

# விந்தன்: ‘ம

**ய. மணிகண்டன்**

**தமிழ் எழுத்துலகில் எழுத்தாளர் விந்தனுக்கு ஒரு தனி இடம் இருப்பதைப் போலவே தமிழ் இதழுலகில் அவர் நடத்திய ‘மனிதன்’ இதழுக்கும் ஒரு தனித்த இடம் உண்டு.**

தமிழ் இதழ்களின் வரலாற்றில் ‘மனிதன்’ இதழ் பன்முக மாட்சிகளோடு குறிப்பிட்ட காலகட்டத்தில் சிறுகதை, புதினம், இலக்கிய மொழிபெயர்ப்பு, கவிதைகள், சமூக அவலங்களைச் சாடும் கட்டுரைகள், புதுமைப் போக்குகளைக் கொண்ட உரையோவியங்கள், குழந்தைகளுக்கான பகுதிகள், இலக்கிய விமர்சனங்கள், திரைப்பட விமர்சனங்கள் முதலிய பல களங்களில் எழுத்தோவியங்களைத் தாங்கித் தமிழுலகில் வலம் வந்துள்ளது.


பிற்காலங்களில் கோவை ஈஸ்வரன் அவர்களால் ‘மனிதன்’ என்னும் பெயரிலும், கவிஞர் இன்குலாப்பால் ‘புதிய மனிதன்’ என்னும் பெயரிலும் தமிழ் இதழுலகில் இதழ்கள் வெளிவந்தன. அவற்றுக்கெல்லாம் முன்னோடியாக மனிதனை மனிதனுக்கு உணர்த்துகின்ற, மனிதத்தை உயர்த்திப் பிடிக்கின்ற, இலக்கிய உணர்வை மேம்படுத்துகின்ற இதழாக வெளிவந்ததே விந்தனின் ‘மனிதன்’ இதழாகும்.

மிக விரிந்த–மிக உயர்ந்த–எண்ணங்களைக் குறிக்கோளாகக் கொண்டு இந்த இதழ் நடத்தப்பட்டது என்பதற்கான அடையாளமாக “யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்னும் கணியன் பூங்குன்றனின் பாடலடிகள் நோக்கப் பாடலடிகளாக இவ்விதழில் இடம்பெற்றிருந்தன.

1954 ஆகஸ்டு 15ஆம் நாள் முதல் இதழ் வெளிவந்தது. புத்தரின் அழகிய உருவப்படம் இடம்பெற்ற வண்ண அட்டை முதல் இதழை அணிசெய்தது.

முதல் இதழின் முதல் பக்கமே எழுத்தாளர் கல்கியின் படத்தையும், அதன் கீழே எழுத்தாளர் விந்தனின் கையெழுத்தில் அமைந்த சமர்ப்பணப் பகுதியையும் கொண்டிருந்தது. அந்தச் சமர்ப்பணப் பகுதி “என்னை மனிதனாக்கிய மனிதன் ஆசிரியர் ‘கல்கி’ அவர்களுக்கு – அன்புடன் விந்தன், 15.8.54” என்னும் குறிப்பைத் தாங்கி அமைந்திருந்தது.

‘ஸ்ரீமான் பொதுஜனம் அவர்களுக்கு’ என்னும் தலைப்பில் முதல் இதழின் தலையங்கத்தை விந்தன் எழுதியிருந்தார். அதில் இதழைப் பற்றி எழுதும்போது பின்வருமாறு எழுதியிருந்தமை.



**சமூக அடிப்படை மாற்றம் என்ற குறிக்கோளை அடைவதற்கு முதலில் பாட்டாளி வர்க்கம் அரசு என்ற அமைப்புரீதியான அரசு அதிகாரத்தை கைப்பற்ற வேண்டும். முதலாளித்துவத்தின் எல்லாவகையான எதிர்ப்புகளையும் முறியடிக்க வேண்டும்.**
**– ஏங்கல்ஸ்**



அவரது இதழ் குறித்த அக்கறையோடு மனிதன் குறித்த அக்கறையையும் ஒருசேர வெளிப்படுத்துவதாக அமைந்திருந்தது:

**செய்கின்றன.**

# ...ாலனம், ...ஓர்நிறை நீதியை ...த வேண்டும்!



துறையிலிருந்து தடையில்லா சான்றிதழ் இல்லை; அதைவிட அதிர்ச்சி, சிலர் அச்சான்றிதழுக்கு மனுகூடச் செய்யவில்லை; விளைவு, இவை உயிருள்ளோருக்கான சுடுகாடானது.

சாதாரணமாக இங்கு தீயை எதிர்த்துப் போரிடும் அடிப்படையான நடவடிக்கைகள் காண முடியாது; தேவையான தீ அணைப்புக் கருவிகளோ, தப்பி ஓடும் அவசரகாலப் படிக்கட்டுகள் போன்ற எவையும் இங்கே இராது; இந்தக் கட்டடங்க்ளில் ஒரே நுழைவாயில் அல்லது வெளியேறும் வழி மட்டுமே இருக்கும் என இவற்றின் போதாமைகளைச் சொல்லிக்கொண்டே போகலாம்.

**முந்த்கா தீ விபத்து**

இத்துயரங்களின் தொடர் நிகழ்வில் சமீபத்திய துயரம் முந்த்கா. நான்கு மாடி கட்டடத்தில் இரண்டு தளங்களில் தொழிற்சாலை உற்பத்தி நடவடிக்கைகள் நடந்து வந்தன. இதற்குத் தீ விபத்துத் தடையில்லாச் சான்றிதழ் இல்லை, தீயணைப்புக் கருவிகள் இல்லை. தொழிலாளர்களின் பெரும்பாலானவர்கள் பெண்கள். தீ சூழ்ந்து அதில் சிக்குண்டபோது குறைந்தபட்சம் 27பேர் மாண்டனர், சிலர் அடையாளம் தெரியாத அளவு கரிக்கட்டையாய் மோசமாக மடிய, அடையாளம் காண டிஎன்ஏ சோதனை மேற்கொள்ள வேண்டி வந்தது.

இக்கட்டடத்தில் ஒரே வழி மட்டும் இருந்ததாகத் தகவல். எப்படி நான்கு மாடி கட்டடம் ஒரே உள்நுழைவு அல்லது வெளியேறும் வழியுடன் மட்டும் மேலெழ அனுமதிக்கப்பட்டது? அப்படிக் கட்டப்பட்டதற்குப் பிறகாவது கட்டட விதிகள் மற்றும் தீவிபத்துப் பாதுகாப்பு விதிகள் பின்பற்றப் பட்டதா என்பது உறுதிபடுத்தப்பட்டதா? இதற்கான பதில் தெரிந்ததுதான்; பணக்கார, சக்திமிக்க மற்றும் ஒருக்கால் அரசியல் செல்வாக்குடைய உரிமையாளர்கள் அல்லது கட்டட ஒப்பந்ததாரர்கள் மீது என்றாவது நடவடிக்கை பாய்ந்ததுண்டா?

'தொழிற்சாலை' உரிமையாளர் கைது செய்யப்பட்டார், ஆனால் மிக விரைவில் அவர்கள் பிணையில் வெளியேவந்து விடுவார்கள் என்பது தெரிந்ததுதானே. கட்டட உரிமையாளர் தப்பி ஓடிவிட்டார், அவர் பிடிபட்டு கைதான பிறகு அவருக்கும் பிணை கிடைக்கும். அதிகாரிகளுக்கு? அவர்களில் சிலர் சஸ்பெண்ட் செய்யப்பட்டனர் அவ்வளவுதான். என்ன நடந்து விட்டது, சமகாலத்து அடிமையாக ஊக்குவிக்கப்பட்டு குறைந்தபட்ச ஊதியத்தில் பாதிக்கும் குறைவாகக் கூலி பெற்றுவந்த 21 பெண்கள் உட்பட 27பேர் இறந்தனர். இப்படிச் சர்வ சாதாரணமாகக் குற்றநடவடிக்கைக்கான பொறுப்பு மேம்போக்காக மென்மையாகக் கையாளப்படுவதே எப்படியும் தண்டனையிலிருந்து தப்பிவிடலாம் என்ற கலாச்சாரத்தை வளர்க்கிறது.நாம் இந்தக் கேலிக்குரிய நாடகத்தின் மௌனச் சாட்சிகளாக இருக்கிறோம். பொறுப்பு என்பது அந்த லட்சணத்தில் இருக்கிறது.

**தீ விபத்துத் துன்பியலும், புல்டோசர் 'நீதி' துன்பியலும்**

ஒரு முரண்பாடான ஒப்பீடு. 'பணக்காரர், எதையும் சமாளிக்கும் ஆள் படை அதிகாரத் திறன் மிக்க'வர்களுக்குச் சொந்தமான சட்டவிரோத மற்றும் அனுமதி பெறாத கட்டுமானங்களுக்கு எதிராக நடவடிக்கை இன்மையால் விளைந்த இந்தத் தீ விபத்துத் துயரங்களை;

**<u>டெல்லி ஜகான்கீர்புரியில் "எதையும் சமாளிக்கும் ஆள் படை அம்பு அதிகாரமற்ற சிறிய மனிதர்களுக்கு' எதிராகப் புல்டோசர்களை ஏவி விரைந்து நடவடிக்கை எடுத்த அதிகாரிகள் இப்போது சட்ட அகராதியில் அறிமுகம் செய்துள்ள புல்டோசர் நீதியுடன் ஒப்பிடலாம்!</u>**

முன்னறிவிப்பு நோட்டீஸ் மற்றும் எச்சரிக்கை ஏதும் அளிக்காமல் புல்டோசர்கள் வந்தன; மேலே குறிப்பிட்ட சிறிய மனிதர்களான ஆண்கள் பெண்களின் வீடுகளை, த்ஹிலா என்னும் தள்ளு வண்டி அல்லது கடை/ஸ்டால் இவற்றை இடித்து நொறுக்கி நசுக்கியது. உங்களை நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள்: "அவர்கள் பணக்காரராக, அதிகாரம் மிக்கவராக அல்லது அரசியல் செல்வாக்குடையவராக இருந்திருந்தால் இத்தகைய செயலூக்கமுள்ள அநீதிக்கு அவர்கள் ஆட்படுத்தப்பட்டிருப்பார்களா?" சட்டங்கள் இரண்டு வகையான இந்தியர்களுக்கு வேறு வேறாக இருக்கிறதா? ஏழையாக இருப்பதுவே ஒரு குற்றம்போலத் தோன்றுகிறது.

**ஜகான்கீர்புரி அட்டூழியமும் அதிகாரிகள் பொறுப்பின்மையும்**

ஜகான்கீர்புரியில் அரச வன்முறையால் பாதிக்கப்பட்ட உதவ யாருமற்றவருக்கு முன்னறிவிப்பு நோட்டீஸ் வழங்கப்படவில்லை. இடிப்பு நடவடிக்கைகள் தான்தோற்றித்தனமான தன்னிச்சையானவை என்பது தெளிவு. ஆனால் உச்ச நீதிமன்றம் தலையிட்டு, இடிப்பு நடவடிக்கைக்கு எதிராகத் தடையாணை வழங்கிய பிறகும், அதிகாரிகள் தங்கள் இதயமற்ற நடவடிக் கைகளைத் தொடர்வார்கள் எனில் அவர்களுக்கு அந்தத் துணிச்சல் எப்படி வந்தது?

சரி, ஆக்கிரமிப்புக் கட்டட இடிப்பு ஒருபக்கம் இருக்கட்டும், சிறு வியாபாரத் தள்ளுவண்டி என்பது இடம் பெயரும் சொத்துதானே, அதை அடித்து நொறுக்கியதை மாநகராட்சி அதிகாரிகள் எப்படி நியாயப்படுத்த முடியும்? தள்ளு வண்டி உரிமையாளரை அதை எடுத்துச் செல்லும்படிச் சுலபமாகச் சொல்லியிருக்க முடியுமே?

ஆனால் 'பணக்கார, ஆள் படை ஆயுதம் அதிகாரம், அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்த முடிந்த' மனிதர்கள்போல அல்லாமல், 'பிரச்சனைகளைச் சமாளிக்க முடியாத, அதற்கான திறன்கள் அற்ற எளிய சிறிய மனிதர்கள்' எதிர்த்துப் போராட மாட்டார்கள் என்பது மாநகராட்சி அதிகாரிகளுக்குத் தெரியும்.

**கவலையில்லா அதிகாரிகள்**

இடித்து நொறுக்கப்பட்ட வீட்டை மீண்டும் முதலிருந்து எடுத்துக் கட்டுவதற்கோ மீண்டும் வாழ்வில் அடியெடுத்து வைப்பதோ எளிய மனிதருக்கு அத்தனை எளிதானதில்லை.

ஆனால் புல்டோசரை இயக்கி புளகாங்கித மகிழ்ச்சி அடையும் அதிகாரிகளுக்கு இவையெல்லாம் ஒரு பொருட்டா, என்ன? என்னதான் பெருமளவிலான தீ விபத்துக்கான கண்ணிவலை பொறிகளாக அனுமதி பெறப்படாத கட்டடங்கள் மீது அவர்கள் நடவடிக்கை எடுக்காமல் அப்படியே இருக்க விட்டுவிட்டாலும், அல்லது சிறிய, அனுமதி பெறாத கட்டடத்தைத் தன்னிச்சையாக இடித்தாலும் அவர்கள் இதற்குப் பொறுப்பாக மாட்டார்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். பிறகு ஏன் கவலைப்பட வேண்டும்?

**சட்டத்தின் ஆட்சி:**

நீதி அனைவருக்கும் சரிசமமாக வழக்கப்படுவதாக இருக்க வேண்டும். ஆனால் நாம் சந்தித்து வரும் நிகழ்வுகளைக் காணும்போது அது சட்டப்படியான ஆட்சிக்கு எந்த நன்மையும் செய்யாது என நான் அச்சப்படுகிறேன். உயிர் இழப்பு ஏற்பட்ட இடத்தும் நடவடிக்கை இன்மை என்பது மன்னிக்கப்படுகிறது, தான்தோற்றித்தனமான நடவடிக்கையால் வாழ்வாதாரம் மற்றும் வாழுமிடம் இழந்தாலும் அந்நடவடிக்கை ஏற்கப்படுகிறது. இது எந்த வகையான சட்டப்படியான ஆட்சி?

**என்னதான் தீர்வு?**

இழப்பீடு மட்டுமே தீர்வு இல்லை அது மிகச் சுலபமான பதில். இதற்கான தீர்வு, அனுமதி பெறாத ஒரு கட்டுமானத்தின் ஒப்பந்தரார் மற்றும் கட்டட உரிமையாளர் போலவே நமது அதிகாரிகளையும் அரசியலமைப்புச் சட்டத்திற்கும் சட்ட விதிகளுக்கும் பொறுப்பாக்குவதேயாகும். அதிகாரிகளின் நடவடிக்கை இன்மை, அலட்சியம் அல்லது குற்ற நடவடிக்கைசார் அலட்சியம் இவற்றிற்காக அவர்களைத் தண்டிக்காத வரை, அகால மரணங்கள் தொடரவே செய்யும் நாமும் ஒவ்வொரு முறையும் அவலங்களைக் காணும்போது திடுக்கிட்டு விழித்துக் கொள்வோம்.

அதிகாரிகள் தண்டிக்கப்படாவிட்டால், தண்டனையிலிருந்து விலக்குப் பெற்றுத் தப்பிவிடும் கலாச்சாரத்தை நாம் ஊக்கப்படுத்தி வளர்ப்பவர்கள் ஆவோம். நமது நீதி வழங்கும் முறையில் நீதிபரிபாலனப் பொறுப்பு என்பது வேர்பிடிக்க வேண்டும்; அப்போதுதான் தண்டனை விலக்குக் கலாச்சாரத்துடன் வளர்ந்த நம் அதிகாரிகள் அமைப்பு என்பது நமது அகராதியிலிருந்து மறையும்.

வளர்ந்தோங்கிக் கவ்விப் பிடிக்கும் தீ நாக்குகள் இவ்வளவு உயிர்களைச் சுட்டுப் பொசுக்கிய பிறகாவது, புல்டோசர் நீதியின் தோற்றத்தால் பெரும் எண்ணிக்கையிலான மக்கள் வீடிழந்த பிறகாவது குறைந்த பட்சம் நாம் இதனைச் செய்ய வேண்டும்!

**இப்படித் திருத்துவோம்:**


நமது பெரும் சட்ட ஒளிவிளக்குகள் மும்முரமாக சட்டங்களை திரும்ப எழுதி வருவதில் ஈடுபட்டிருப்பதால் இப்படித் திருத்தி எழுதுவது ஒரு நல்ல யோசனையாக இருக்கும். ஏழைகள் மற்றும் சமூகத்தின் விளம்புநிலை மக்கள் கைகளில் அதிகாரத்தை அளிப்பதாகச் சட்டங்களைத் திருத்தித் திரும்ப எழுதுங்கள்! வெட்கமற்று துணிந்துவிட்ட அதிகாரிகளை அரசியலமைப்புச் சட்டம் மற்றும் சட்ட விதிகளுக்குப் பொறுப்பாக்கிச் சட்டங் களைத் திருத்தித் திரும்ப எழுதுங்கள்! பணம், ஆள் படை ஆயுதம் அதிகாரம்நிறைந்த, அரசியல் ரீதியில் செல்வாக் குடையவர்களையும் சட்டத்திற்கு உட்படுமாறு சட்டங்களைத் திருத்தித் திரும்ப எழுதுங்கள், அது நல்ல யோசனையாக இருக்கும்.

நன்றி: நியூஏஜ், தமிழில்: நீலகண்டன்,

The Leaflet கட்டுரை

# ...னிதன்' இதழ்

"ஆனால் ஒரு வேண்டுகோள் மனிதனின் பக்கங்களைப் புரட்டும்போது, தயவு செய்து அவற்றின் மொத்த எண்ணிக்கையை விரல் விட்டு எண்ணாதீர்கள்; அந்தப் பக்கங்களில் வெளியாகியுள்ள விஷயங்களின் தராதரத்தை மனம்விட்டு எண்ணிப்பாருங்கள். அவ்வாறு எண்ணிப் பார்த்தால் 'மனித'னின் கனத்தையும், அவனுக்காகச் செலவழித்த நாலணாவின் கனத்தையும் ஒப்பிட்டுப்பார்த்து நீங்கள் கவலைப்பட மாட்டீர்கள்; அதற்குப் பதிலாக உங்களையும், உங்கள் மனிதத்தன்மையையும் ஒப்பிட்டுப்பார்த்துக் கவலைப்பட ஆரம்பித்து விடுவீர்கள்!" தம் இதழின் தரம், தரும் விஷயங்கள் குறித்த விந்தனின் நம்பிக்கையையும் இந்தப் பகுதி அழுத்தமாக உணர்த்துகின்றது.




**<u>முதல் இதழில் மு. வரதராசனார் 'மனிதன்' என்னும் பெயரிலேயே ஓர் உரைநடைப் படைப்பை எழுதியிருந்தார். 'மனிதன்' சிறப்பிதழ்களில் குறிப்பிடத்தக்கவையாக 1954 செப்டம்பரில் வெளிவந்த பாரதி நினைவு இதழும், 1955 ஜனவரியில் வெளிவந்த பொங்கல் மலரும் அமைந்துள்ளன.</u>**

பாரதி நினைவு இதழில் தமிழ்ஒளியின் கவிதை, பாரதியாரின் கவிதை, உரைநடைகள், 'மரணத்தை வென்ற மனிதர்' தொடரில் பாரதியார் குறித்த கட்டுரை, நாரண துரைக்கண்ணன் எழுதிய 'ஓராயிரம் பாரதிகள்' என்னும் கட்டுரை, பாரதியார் குறித்த துணுக்குச் செய்திகள் முதலியன இடம்பெற்று இதழுக்குத் தனிப்பொலிவை அளித்தன. பொங்கல் மலரில் பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார், ஜெயகாந்தன், வையாபுரிப்பிள்ளை, தமிழ் ஒளி, மு.வ., கு.ப. சேது அம்மாள், விந்தன் முதலிய பலரின் படைப்புகள் இடம்பெற்றுள்ளன. வண்ணப் புகைப்படங்களும், புகைப் படங்களுக்கான கவிதைகளும் அணிசெய்துள்ளன. கூடுதலான பக்கங்களோடு மலர் விளங்கியது.


'மனிதன்' இதழ் மற்றுமொரு குறிப்பிடத்தக்க பகுதியைக் கொண்டிருந்தது. பெரும்பாலான இதழ்களில் 'முதல் கதை' என்னும் பகுதியில் அறிமுக எழுத்தாளர்களின் கதைகள் இடம்பெற்றன. அவ்வாறு கதைகள் படைத்தவர்களாகச் சுவர்ணா நாராயணன், கே. துளசி. ஜி. ராமசாமி, அறவாழி முதலியோர் அமைந்தனர். அறிமுக எழுத்தாளர்களின் படங்களும் கதைப் பகுதியில் இடம்பெற்றன.

'மனிதன்' இதழில் கவிஞர் தமிழ் ஒளி, புதுமைப்பித்தன் கவிதைகளுக்கு எழுதிய மிக நீண்ட விமர்சனமாகும். இது 'தேயும் தமிழ்' எனவும் 'இலக்கிய விமர்சனம்' எனவும் குறிப்பிடப்பட்டு 1955 செப்டம்பர் இதழிலும் 1955 அக்டோபர் இதழிலும் தொடர்ந்து தமிழ்ஒளியின் விமர்சனக் கட்டுரை வெளிவந்தது.

சிறுகதை, தொடர்கதை, புதினம், கட்டுரை, திரைத்துறைப் பங்களிப்புகள் எனப் பன்முகம் காட்டிச் சாதனை பல புரிந்த எழுத்தாளர் விந்தன், விரிந்த மானுட நேயத்தோடும் இலக்கிய உணர்வோடும் ஐம்பதுகளில் நடத்திய 'மனிதன்' இதழ் சீரிய இலக்கிய இதழாகவும்,

மானுட மேம்பாட்டுக்குக் குரல் கொடுக்கும் சிறந்த இதழாகவும், முன்னணி அறிஞர்களும், படைப்பாளிகளும், இளம் எழுத்தாளர்களும் ஒருசேர எழுதிய இதழாகவும் விளங்கியதோடு இதழியலின் அனைத்துக் கூறுகளையும் உள்வாங்கிக் கொண்டு பன்முக நலன்களோடு பளிச்சிடும் பாங்கில் திகழ்ந்திருக்கின்றது. விந்தன் ஆற்றல்மிக்க புனைகதைப் படைப்பாளி மட்டுமல்லர்; தேர்ந்த இதழாளரும், தேர்ந்த இதழாசிரியரும் என்பதை "மனிதன்' இதழ் உறுதிசெய்திருக்கின்றது.

நன்றி: விந்தன் எனும் ஓர் ஆளுமை என்ற நூலிலிருந்து...



**முதலாளித்துவத்தின் முன்னேறி தாக்குகின்ற சக்தியை பிடிக்க வேண்டுமானால் நீங்கள் அவற்றின் தற்காப்பு சாதனங்களை கைப்பற்ற வேண்டும். எந்த வகையிலும் கைவிட்டுப் போய்விடக் கூடாது. - மார்க்ஸ்**

### காவிரி ஆணையத் தலைவரின் போக்கு

# இந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்காது

## தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் அறிக்கை

தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் பி.எஸ்.மாசிலாமணி வெளியிட்டுள் அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நடுவர் மன்றம் மற்றும் உச்சநீதிமன்ற தீர்ப்புகளுக்கு மாறாக தன் விருப்பத்திற்கு மேகதாது அணையை கட்டியே தீருவோம் என வலியுறுத்தி வரும் கர்நாடக அரசு மேகதாது அணை கட்டுமானத்திற்காக 1000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்ததுடன் விரிவான திட்ட அறிக்கை ஒன்றையும் ஒன்றிய நிதித் துறை அமைச்சகத்திடம் கொடுத்தது. கர்நாடகத்தை சேர்ந்த ஒன்றிய அமைச்சர்களும் கர்நாடகத்திற்கு ஆதரவாக செயல்பட்டு வருவதால்தான் ஒன்றிய ஜல் சக்தி துறை அமைச்சகம் மேகதாது அணை கட்டுமான திட்ட அறிக்கையை ஆணையக் கூட்டத்தில் விவாதிக்க அனுமதி கொடுத்துள்ளது.

இந்நிலையில் காவிரி மேலாண்மை ஆணையம் 17ஆம் தேதி நடக்க இருந்த கூட்டத்தில் இதை விவாதப் பொருளாக வைத்தது. இதைக் கண்டித்தும், இதை கைவிட வலியுறுத்தி உச்சநீதிமன்றத்தில் தமிழக அரசு முறையிட்ட பின்னும் ஒன்றிய அரசு வாய்மூடி மௌனியாக இருக்கிறது. ஆனால் காவிரி ஆணைய தலைவரோ கூட்டப் பொருளிலிருந்து இதை நீக்க முடியாது என்பதுடன், கூட்டத்தை 23ஆம் தேதிக்கு தள்ளி வைத்துவிட்டு, காவிரி நதிநீர் ஆய்வு என்ற பெயரில் தமிழக கல்லணைக்கு வந்து, மேகதாது அணை கட்டுமானத்திற்கு கர்நாடகம் கொடுத்துள்ள வரைவு அறிக்கையை கூட்டத்தில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று மேலாண்மை ஆணையத்தலைவர் ஹல்தர் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்துள்ளதை தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

தமிழகத்திற்கே நேரில்வந்து, இதை அறிவிக்கவே, இந்த கூட்டத்தை தள்ளி வைத்ததாக நாங்கள் கருதுகிறோம். இந்தப்போக்கு என்பது இந்திய ஒருமைப்பாட்டை பாதுகாக்காது. அரசு, ஆட்சி, ஜனநாயகம் என்பதெல்லாம் நம்பகத்தன்மை இல்லாமல் போய்விடும். இந்த நிலையில் ஒன்றிய அரசு வரும் 23 ஆம் தேதி நடக்க உள்ள கூட்டத்தில், கூட்டப் பொருளிலிருந்து மேகதாது அணை கருத்துருவை நீக்கிட அவசர நடவடிக்கை எடுத்திட வேண்டும் என தமிழ்நாடு விவசாய சங்கம் வலியுறுத்துகிறது.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

# இராமநாதபுரம் மாவட்ட மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட மாநாடு ராமேஸ்வரத்தில் நடைபெற்றது. மாநாட்டிற்கு மாவட்ட துணை செயலாளர் சுப்பிரமணியன், காளிதாஸ், மல்லிகா ஆகியோர் தலைமை வகித்தனர், மாநாட்டு வரவேற்புக் குழு தலைவர் எஸ்.முருகானந்தம் வரவேற்று பேசினார், தியாகிகள் ஜோதியை கட்சியின் மூத்த தலைவர் எஸ்.பி.ராதா பெற்றுக்கொண்டார், மாநாட்டு கொடியினை மூத்த தலைவர் வி.குருநாதன் ஏற்றிவைத்தார்.

மாவட்ட மாநாட்டில் மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் மாநில செயற்குழு உறுப்பினர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.குணசேகரன், மாவட்ட செயலாளர் எஸ்.முருகபூபதி, ஏஐடியூசி மாவட்ட செயலாளர் என்.கே.ராஜன், ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

மாநாட்டு வரவேற்பு குழு செயலாளர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.

மாநாட்டில் மாவட்ட துணை செயலாளர் ஜி.பார்த்திபன், மாவட்ட பொருளாளர், கே.ஜீவா, மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் ஆர்.கருணாநிதி எம்.ஆர்.கலைமணி சி.ஆர்.செந்தில்வேல் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினார். மாநாட்டில் 34 பேர் கொண்ட புதிய மாவட்டக் குழு தேர்வு செய்யப் பட்டது. மாவட்ட செயலாளராக என்.எஸ்.பெருமாள் தேர்வு செய்யப்பட்டார்.

வறட்சி மாவட்டமாக இருக்கும் இராமநாதபுரம் மாவட்டம் முழுவதும் தொழில் வளர்ச்சியை உருவாக்கிட வேண்டும்.

மத்திய, மாநில அரசுகள் வேலைவாய்ப்புகள் வழங்கும் வகையில் தொழிற்சாலைகள் அமைத்திட நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும்.

இராமநாதபுரம் மாவட்டத்தில் விவசாய பயிர் காப்பீடு திட்டம் முழுமையாக செயல் படுத்த வேண்டும்.

100 நாள் வேலைவாய்ப்பு வழங்குவதில் உள்ள குளறுபடிகளை தமிழக அரசு களைய வேண்டும்.

இலங்கை கடற்படை தாக்குதலில் இருந்து தமிழக மீனவர்களை பாதுகாக்க வேண்டும். இலங்கை இந்திய மீனவர்களுக்கு சுமுக பேச்சுவார்த்தையை உடனடியாக துவங்க வேண்டும்.

இந்திய அரசு கச்சத்தீவை திரும்பப் பெற வேண்டும்

மீனவர்களுக்கு வழங்கும் டீசல் மானியத்தை உயர்த்தி வழங்க வேண்டும் கூட்டுறவு சங்கங்களில் மீன்பிடி தடைக்கால நிவாரணம் மாவட்டத்தில் கிடைக்காத அனைத்து கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கும் நிவாரணம் வழங்க வேண்டும்.

ராமேஸ்வரம் வடகாட்டில் வடமாநில இளைஞர்களால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட மீனவப் பெண்ணின் குடும்பத்திற்கு தமிழக அரசு ரூபாய் 25 லட்சம் நிவாரணம் வழங்க வேண்டும்.

ராமேஸ்வரம் தீவுகள் முழுதும் இறால் பண்ணைகளை தடை செய்ய வேண்டும்.

ராமேஸ்வரம் திருக்கோவிலுக்கு தினசரி லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து செல்லும் நிலையில் அவர்களுக்கு கழிப்பறை குடிநீர் உள்ளிட்ட உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும்.

ராமேஸ்வரம் உள்ளிட்ட பல பகுதிகளில் சட்டவிரோதமாக வாடகை பைக்குகள் விடுவதை காவல்துறை தடுத்து நிறுத்தி ஆட்டோ டாக்சி ஓட்டுனர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்திட வேண்டும்.

பாரம்பரியமான கைத்தறி நெசவுத் தொழில் மற்றும் ஜவுளித் துறையை சீரழிக்கும் வகையில் வரலாறு காணாத அளவுக்கு உயர்ந்துள்ள பருத்தி, பட்டு நூல் விலை உயர்வை கட்டுப் படுத்த வேண்டும்.

# மேலாண்மை ஆணையரின் அத்துமீறலை தடுத்திடுக!

## இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை

காவிரி நதிநீர் பங்கீடு தொடர்பான நடுவர் மன்றத்தின் இறுதித் தேர்வு மீதான மேல்முறையீடுகளை விசாரித்து உச்சநீதிமன்றம் 2018 மே 18ஆம் தேதி அளித்த உத்தரவின்படி ஒன்றிய அரசு ஜூன் முதல் தேதி வெளியிட்ட அரசிதழில் ''காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின்'' செயல் எல்லை தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளது. இதன்படி உச்சநீதிமன்றம் நிர்ணயித்த தண்ணீரை தமிழ்நாட்டிற்கு முறையாக வழங்க வேண்டிய கர்நாடகத்தின் பொறுப்பை ''மேலாண்மை'' செய்வது மட்டுமே ஆணையத்தின் கடமை பொறுப்பாகும்.

இந்த நிலையில் ஆணையத் தலைவர், கர்நாடக அரசு காவிரியில் கட்ட முனையும் மேகதாது அணை குறித்து ஆணையக் கூட்டத்தில் விவாதிக்கப்படும் என்று கூறியிருப்பது வரம்பு மீறிய செயலாகும். முந்தைய ஆணையக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் கடுமையான ஆட்சேபணையும், எதிர்ப்பும் பதிவு செய்யப்பட்ட பிறகும் ஆணையத் தலைவர் பிடிவாதமாக மேகதாது அணை பிரச்சினையை விவாதிக்க முனைவது அவர் மீதான ''நம்பகத்தன்மை''யை கேள்விக்குள்ளாக்குகிறது.

மேலும் இப்பிரச்சினை தொடர்பாக தமிழ்நாடு அரசு உச்சநீதிமன்றத்தை அணுகியுள்ளதையும் கருத்தில் கொள்ளாமல், ''உச்சநீதிமன்றத்தின் அதிகாரத்துக்கும்'' மேலாக தன்னை கருதிக் கொண்டு கருத்து தெரிவிக்கும் சார்பு நிலை கருத்தை உருவாக்குகிறாரோ என்ற ஆழமான சந்தேகத்தை ஏற்படுத்துகிறது.

கடந்த ஜூலை 12ஆம் தேதி தமிழ்நாடு முதலமைச்சர் தலைமையில் நடந்த அனைத்து கட்சி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ஒன்றிய அரசின் நீர்வள ஆற்றல்துறை அமைச்சரின் கவனத்திற்கு அரசியல் கட்சிப் பிரதிநிதிகள் நேரில் தெரிவித்த போது ''தமிழ்நாடு அரசின் ஒப்புதல் இல்லாமல் கர்நாடகம் மேற்கொள்ளும் எந்த நடவடிக்கைக்கும் நீர்வள ஆற்றல் துறை ஒப்புதல் அளிக்காது'' என்று உறுதியளித்தார். இதன்படி ஆணையத் தலைவரின் வரம்புமீறலை கட்டுப்படுத்த வேண்டும் என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

இவ்வாறு மாநில செயற்குழு சார்பில் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### தருமபுரி வட்டாச்சியர் அலுவலகம் முன்

# தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் ஆர்ப்பாட்டம்

விவசாய தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளான மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு சட்டத்தின் கீழ் 2022–2023 நிதி ஆண்டிற்கான வேலை அட்டை இதுவரை அதகபாடி, கொண்டகரஅள்ளி, கோடுஅள்ளி கிராம ஊராட்சி எல்லையில் வழங் கப்படவில்லை அதேபோல் ஒன் றியம் முழுவதும் வேலையும் வழங் கப்படவில் அதனால் உடனே வேலை அட்டை வழங்கி வேலை வழங்கப்பட வேண்டும், தினசம்பளம் ரூ 281 என்பதை முழுமையாக வழங்க வேண்டும்,

வீட்டு மனை பட்டா, விவசாய சாகுபடி நிலங்களுக்கு நிலஉரிமை பட்டா வழங்க வேண்டும்,

வத்தல்மலைக்கு மினி பேருந்து சோதனை ஒட்டம் நடத்தி இரண்டு மாதங்கள் கடந்தும் பேருந்து இயக் கவில்லை உடனே இயக்க வேண்டும்,




தருமபுரி நகரை ஒட்டி தமிழ் நாடு நகரபுற மேம்பாட்டு வாரியம் மூலம் அடுக்கு மாடி குடியிருப்புகள் கட்டி விண்ணபித்த அனைவருக்கும் அடுக்கு மாடி குடியிருப்புகள் ஒதுக்க வேண்டும்,

வத்தல்மலையில் நிலஅளவீடு செய்ய புரோகர்கள் மூலம் ரூ 10,000 முதல் 30,000 வரை கையூட்டு பெறு வது மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மற்றும் பல் வேறு கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க தருமபுரி ஒன்றியகுழுசார்பில் தருமபுரி வட் டாச்சியர் அலுவலகம் முன் சங்க ஒன்றிய தலைவர் ஜி ராஜகோபால் தலைமையில், சங்க ஒன்றிய செய லாளர் ஜி.பச்சாகவுன்டர், ஒன்றிய பொருளாளர் எம் முண்ணு, ஆகியோர் முன்னிலையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது

இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார் மற்றும் சங்க மாவட்ட தலைவர் ஜி.மாதையன்,

மாவட்ட துணை தலைவர் என்.முருகேசன், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் வெ.பை. மாதையன்,

எல்.சி.கிருஷ்ணன் ஆகி யோர் பேசினார்கள் இறுதில் கோரிக்கைகள் அடங்கிய மனுவை வட்டாச்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்,

ஆகியோர்களிடம் சமர்ப்பிக்கப் பட்டது.

>>6-ம் பக்கத் தொடர்ச்சி

செய்யப்பட்டு வந்தது. ஆனால் தற்போது ஏழு, எட்டு நாட்களுக்கு ஒருமுறை மட்டுமே காவிரி குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதனால் பேரூராட்சி பகுதி மக்கள் குடிநீருக்கு மிகுந்த சிரமப்பட்டு வருகின்றனர். எனவே, குடிநீர் விநியோகத்தை சீர்படுத்த பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**ஆரல்வாய்மொழி :** இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கன்னியாகுமரி மாவட்டம், ஆரல்வாய்மொழி, 15ஆவது கிளை மாநாடு பகத்சிங் இல்லத்தில் சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்றது.

என்.பகவதி மாவட்ட துணைத் தலைவர் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றம் கிளை மாநாட்டை துவக்கி வைத்து பேசினார்.




கிளைச் செயலாளராக அருள் குமார், துணைச் செயலாளர்களாக தங்கவேல் முருகன் குருசாமி, பொருளாளராக சி.வாசு ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

எஸ்.கே.கங்கா மாநில துணைத் தலைவர் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம், எஸ்.இசக்கிமுத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, சுபாஷ் சந்திர போஸ் மாவட்ட பொருளாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, ஆர்.கே. ஸ்ரீகுமார் மாவட்ட துணை செயலாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, அண்ணாத்துரை தோவாளை தாலுகா செயலாளர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, நாராயணசாமி கிளைச் செயலாளர் பூதப்பாண்டி, கல்யாணசுந்தரம் செண்பகராமன் புதூர் கிளைச் செயலாளர் ஆகியோர் இந்த மாநாட்டை வாழ்த்தி பேசினர். குருசாமி ஏஐடியுசி நன்றியுரை கூறினார்.

ஆரல்வாய்மொழி பேரூராட்சிக்கு உட்பட்ட அழகிய நகர் பேசன் நகர் பெருமாள்புரம் பொய்கை கால்வாய் பகுதியில் பல வருடங்களாக தூர் வாராமல் துர்நாற்றம் வீசும் ஓடைகளை தூர்வாரிடுக. ஆரல்வாய்மொழியில் அனைத்து ரயில்களும் நின்று செல்ல வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

## மாநில மாநாட்டிற்கு நிதி வசூல்

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை நகரில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டிற்கு நிதி வசூல் இயக்கம் தொடங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் மாநில நிர்வாக குழு உறுப்பினர் எம்.ரவி, திருப்பூர் புறநகர் மாவட்ட துணை செயலாளர் ஜி.ரவி, மாவட்ட பொருளாளர் வி.பி.பழனிசாமி, தாலுகா செயலாளர் வி.சௌந்தரராஜன், மாவட்டகுழுஉறுப்பினர் ரணதேவ் மற்றும் தாலுகா கமிட்டி உறுப்பினர்கள் சுப்பிரமணியம், சித்ரா, மகேஸ்வரன், முத்துக்குமார், ராகுல்.அலுவலகப் பொறுப்பாளர் தங்கவேல் உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## நல்லம்பள்ளியில் வி.தொ.ச. ஆர்ப்பாட்டம்

தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க நல்லம்பள்ளி ஒன்றியகுழு சார்பில் நல்லம்பள்ளி வட்டாச்சியர் அலுவலகம் முன் விவசாய தொழிலாளர்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டி சங்க ஒன்றிய தலைவர் எல்.சி.கிருஷ்ணன் தலைமையில், சங்க மாவட்ட துணை தலைவர் என்.முருகேசன் மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ பை.மாதையன் ஒன்றிய பொருளாளர் ஆர்.மல்லையன் ஆகியோர் முன்னிலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன் கோரிக்கைகளை விளக்கி சிறப்புரையாற்றினார். மாவட்ட தலைவர் ஜி.மாதையன், மாவட்ட துணை செயலாளர் ஜி.பச்சாகவுன்டர், மாவட்ட துணை தலைவர் ஜி.ராஜகோபால், மற்றும் சங்க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமான விவசாய தொழிலாளர்கள் கலந்துக் கொண்டனர்.

ஆர்ப்பாட்ட இறுதியில் சங்க நிர்வாகிகள் நல்லம்பள்ளி வட்டாச்சியர், நல்லம்பள்ளி துணை வட்டார வளர்ச்சி அலுவலரை சந்தித்து கோரிக்கைகள் அடங்கிய மனு சமர்ப்பிக்கப்பட்டது.

## வாசகர் டுவிட்



**ஆசிரியர் ஜனசக்தி,**

மாநிலம் முழுவதிலும் இருந்து லட்சத் திற்கும் மேற்பட்ட கட்சித் தொண்டர்கள் தங்கள் குடும்பத்துடன் பங்கேற்கும் செஞ் சட்டை பேரணி திருப்பூரில் ஆகஸ்ட் 9ஆம் தேதி நடைபெறுகிறது பங்கேற்போம்!

கொடி பிடிப்போம்! முழக்கமிடுவோம்!

– **ஆறுமுகம்**, கீழவாசல், எட்டயபுரம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

தமிழகத்தின் கவனம் முழுவதும் அண்ணா திமுக வின் பொதுக்குழுவை நோக்கி திரும்பியிருக்கிறது. அதிமுகவில் என்ன நடக்கிறது?

அதில் பாஜகவின் தலையீடு என்ன? என்பது பற்றி ஜனசக்தியில் கட்டுரை வரவில்லையே? பொதுக்குழு முடிந்த பின்பாவது வருமா?

– **குமரகுரு**, வாழப்பாடி, சேலம்.

**ஆசிரியர் ஜனசக்தி,**

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவோம் என்ற முழக்கத் தோடு ஆட்சியைப் பிடித்தது பாஜக. ஆனால் ஏற்படும் காலியிடங்களை கூட நிரப்பவில்லை என்பதை, எங்கே? 2 கோடி வேலை என்ற லெனின் கட்டுரை படம் பிடித்துக் காட்டுகிறது.

–**முருகவேள்**, தங்கச்சிமடம், ராம்நாடு.

**ஆசிரியர் ஜனசக்தி,**

அக்னிபாத் திட்டத்தின் நோக்கம். அதை எதிர்த்து நடைபெறுகின்ற போராட்ட வீச்சு! தமிழ்நாட்டில் ஏன் சூடு பிடிக்கவில்லை? என்ற விபரங்களும், குடியரசுத் தலைவர் தேர்தலின் பின்னணி அரசியல் குறித்த விவரங்களும் ஜனசக்தியில் வெளிவர வேண்டும்.

– **ஞானசேகரன்**, மடிப்பாக்கம், சென்னை

## புலம்பெயர் தொழிலாளர்களை பதிவு செய்க!

### ஏஐடியுசி ஈரோடு மாவட்டக் குழு கோரிக்கை

ஏஐடியுசி ஈரோடு மாவட்டக்குழு கூட்டம் ஈரோட்டில் மாவட்ட அலுவலகத்தில் மாவட்டத் துணைத் தலைவர் டி.ஏ.செல்வம் தலைமையில் நடைபெற்றது.

ஏஐடியுசிமாநிலச்செயலாளர் எஸ்.சின்னசாமி ஏஐடியுசி தேசிய, மாநில முடிவுகளை விளக்கிப் பேசினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஈரோடு தெற்கு மாவட்ட துணைச் செயலாளர் வி.செல்வராஜன், ஈரோடு தெற்கு மாவட்டப் பொருளாளர் எஸ்.டி.பிரபாகரன் ஆகியோர் அரசியல் விளக்கவுரை ஆற்றினார். ஏஐடியுசி மாவட்டச் செயலாளர் எம்.குணசேகரன் நன்றி கூறினார்.

ஈரோடு மாவட்டத்தில் உள்ள புலம் பெயர்ந்த தொழிலாளர்களை முறையாகப் பதிவு செய்து அவர்களுக்கு புலம்பெயர்ந்த தொழிலாளர் சட்டம் உள்ளிட்ட தொழிலாளர் சட்டங்களை அமலாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; அக்னிபாத் திட்டத்தை மத்திய அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்; கட்டுமானம் மற்றும் அமைப்புசாரா தொழிலாளர் நலவாரியங்களில் பதிவு செய்து 60 வயது நிறைவடைந்த தொழிலாளர்களுக்கு மாதம் 1000 ரூபாய் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. இத்தொகையை ரூ. 6 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும்; உள்ளாட்சி, மருத்துவம், வேளாண் பண்ணை உள்ளிட்ட அரசுத்துறை நிறுவனங்களில் பணியாற்றும் தினக்கூலித் தொழிலாளர்களுக்கு ஆண்டுதோறும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் நிர்ணயிக்கும் குறைந்த பட்ச ஊதியம் வழங்கப்படுவது வழக்கமாகும். அதன்படி 20222023 ஆம் ஆண்டுக்கான குறைந்தபட்ச ஊதியத்தை உடனடியாக நிர்ண யித்து அறிவிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




## புதுக்கோட்டை மாவட்ட மாநாடு

**நாள்: ஜூன் 27, 28, - 2022**

**இடம்: தோழர் பி.அப்புக்குட்டி நினைவரங்கம், மெஹா மஹால், அறந்தாங்கி**

**ஜூலை 27 மாலை 4.00 மணிக்கு பேரணி தொடங்குமிடம், செக்போஸ்ட், அறந்தாங்கி**

**பொதுக்கூட்டம் தோழர் பி.அப்புக்குட்டி நினைவுத் திடல் சந்தைப்பேட்டை, அறந்தாங்கி**

தலைமை: தோழர் **மு.மாதவன்,** மாவட்டச் செயலாளர்

முன்னிலை: தோழர் **ஏ.ராஜேந்திரன்,** மாவட்ட துணைச் செயலாளர்

தோழர் **ஏ.பெரியசாமி,** மாவட்ட துணைச் செயலாளர், ஏஐடியூசி

வரவேற்புரை: **கே.இராஜேந்திரன்,** நகரச் செயலாளர்

சிறப்புரை:

தோழர் **இரா.முத்தரசன்,** மாநிலச் செயலாளர்

தோழர் **ஜி.ஆர்.ரவீந்திரநாத்,**

மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்

மற்றும் மாவட்ட, ஒன்றிய நிர்வாகிகள்

நன்றியுரை:

தோழர் **ஆர்.ராதாகிருஷ்ணன்,** ஒன்றியச் செயலாளர்

தோழர் **கோ.சௌரிராஜலு** எழுதிய அறந்தாங்கி இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரலாறு மறு பதிப்பு வெளியீடு

**திருச்சி பாரதி & அறந்தை பாவா குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்**

## தோழர் சி.எஸ்.கட்டிட நிதி வழங்கியோர்

| | | | |
|---|---|---|---|
| பட்டீஸ்வரம் எல்.கே.ரங்கராஜன் தனது 90–வது பிறந்தநாளன்று | – ரூ.5000 | வத்திராயிருப்பு லோடு மேன் சங்கம் | – ரூ.500 |
| தஞ்சாவூர் விஜயலட்சுமி இல்லத் திருமணத்தில் | – ரூ.4000 | தஞ்சை வீரமோகன் மகள் திருமணத்தில் | – ரூ.5000 |
| திருநெல்வேலி மாவட்டக்குழு | – ரூ. 20,000 | திருத்துறைப்பூண்டி அம்பிகாபதி மகள் திருமணத்தில் | – ரூ. 5000 |
| திருச்சி பெல் ஜீவா மன்றம் | – ரூ. 2000 | திருத்துறைப்பூண்டி ராமலிங்கம் | – ரூ.1000 |
| தோழர் நாகூர் கனி திருவெறும்பூர் | – ரூ.1000 | திருத்துறைப்பூண்டி சுந்தரர் | – ரூ.1000 |
| தோழர் முருகேசன் (திருத்துறைப்பூண்டி) வீடு திறப்பு விழாவின்போது | – ரூ.3000 | தஞ்சை தோழர் | – ரூ.500 |

## வேலூர் நந்தியின் தாயார் அங்கம்மாள் மறைவு

திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், கோல்கானூர் கிராமத்தைச் சேர்ந்த மலையகவுண்டர் மனைவியும், ராஜா, லட்சுமணன், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட துணை செயலாளர் எம்.நந்தி ஆகியோரின் தாயாருமான அங்கம்மாள் காலமானார்.

அவருக்கு திமுக சார்பில் மாவட்ட ஊராட்சி குழு தலைவரும், முன்னாள் எம்.எல்.ஏ.வுமான சூரியகுமார், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் ராஜேந்திரன், அன்பு, கந்திலி ஒன்றிய குழு துணைத் தலைவர் மோகன், உறுப்பினர் வெங்கடேஷ், பரதேசி பட்டி தலைவர் மகேந்திரன், துணைத்தலைவர் செந்தில், அதிமுக சார்பில்

### தலைவர்கள் அஞ்சலி

சிங்காரம், முன்னாள் தலைவர் ராமன், ஊராட்சி மன்ற தலைவர் வேலு, உறுப்பினர் ராஜா ஆகியோர் அஞ்சலி செலுத்தினர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் மாநில செயலாளர் இரா. முத்தரசன், மாவட்ட செயலாளர் ஏ.சி.சாமிகண்ணு, முன்னாள் எம்.எல்.ஏ.லதா, ஆசிரியர் மணி, வேலூர் மாநகர செயலாளர் ஏழுமலை, மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்கள் சுந்தரேசன், முல்லை, கே.பி.மணி மற்றும் திரளான தோழர்கள் மலர் அஞ்சலி செலுத்தினர்.




# இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட மாநாடு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மதுரை மாநகர் மாவட்ட மாநாடு துவக்க நிகழ்ச்சியாக இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் செங்கொடியை மாநாடு பிரதிநிதிகள் விண்ணதிர வாழ்த்து கோஷங்களுடன், மதுரை மாநகர் மாவட்ட இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் முன்னாள் செயலாளரும், இஸ்கப் மாவட்ட செயலாளராக உள்ள இரா.ஜெயராமன் ஏற்றி வைத்தார்.

தலைமை குழுவாக தோழர்கள் கிருஷ்ணமூர்த்தி, ராஜலெட்சுமி , ஜெயராமன் இருந்து வழிநடத்தினர்.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் துவக்கவுரையாற்றினார்.

மாநாட்டின் நிறைவாக புதிய மாவட்ட குழு தேர்வானது, அதில் மாவட்ட செயலாளராக எம்.எஸ்.முருகன் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பகுதி செயலாளர்கள் ஜனசக்தி என்.ஜீவா, இஸ்கப் பா.சுமதி, இருளாண்டி, ரவிச்சந்திரன், மற்றும் ஜெயந்திநந்தாசிங் மாநாட்டில் பங்கேற்க, இளைஞர் பெருமன்றத்தின் மாவட்ட செயலாளர் பழனி முருகன் தலைமையிலான தோழர்கள் மாநாட்டின் தொண்டர்படையாக இருந்து மாநாட்டிற்கான வேலைகளுக்கு உதவினர்.



### பொதுஉடைமை போராளி

# சேகுவேராவின் 95-வது பிறந்த நாள் கொண்டாட்டம்

அர்ஜென்டினா நாட்டில் பிறந்து கியூபாவின் விடுதலைக்கு போராடி அந்த நாட்டின் அமைச்சராக பணிபுரிந்து பல்வேறு நாடுகளின் விடுதலைப்போரில் பங்குகொண்டு, இறுதியில் அமெரிக்க இராணுவத்தால் சுடப்பட்டு வீரமரணம் அடைந்த சேகுவேராவின் 95வது பிறந்த நாள் திருவாரூர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் கொண்டாடப்பட்டது.

கட்சியின் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் பி.எஸ்.மாசிலாமணி மலர் வளையம் வைத்து அவரது தியாக வாழ்வை நினைவு கூர்ந்தார். மாவட்டக்குழு உறுப்பினர் புலிகேலி, எஸ்.இ.செல்வமணி, நீடாமங்கலம் கட்சி ஒன்றிய செயலர் பாலசுப்ரமணியன், திருவாரூர் நகரச்செயலர் செல்வம், மாவட்டக்குழு உறுப்பினர், எம்.ஏ.மாரியப்பன் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

நகரதுணைச்செயலாளர் வீ.தர்மதாஸ் சேகுவேராவின் போராட்ட வாழ்வு குறித்து உரையாற்றினார். நகர கட்சி செயற்குழு உறுப்பினர் கே.பாலதண்டாயுதம், மற்றும் மகாலிங்கம் ஆனந்த் பங்குபெற்றார்.

# கட்சி ஒழுங்கு நடவடிக்கை

● இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி அறிவிப்பு

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் நெல்லை மாவட்டச் செயலாளர் எஸ்.காசிவிஸ்வநாதன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

கட்சியின் நெல்லை மாவட்டக்குழுவில் 'நெல்லை மாநகரக் குழு' என்ற அமைப்பு ஏதுமில்லை. அரசு வரையறுத்துள்ள வருவாய் மாவட்ட அளவில் செயல்படும் ஒரு மாவட்டக்குழு மட்டுமே இயங்கி வருகிறது.

திருநெல்வேலி மாவட்டக்குழுவின் கீழ் மாநகரில் மண்டல வாரியாக இடைக்குழுக்கள் செயல்படுகின்றன. இவைகளுக்கான நிர்வாகிகளும் செயல்பட்டு வருகின்றனர். இந்த மண்டலக்குழுக்களின் மாநாடுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இதற்கிடையில் கட்சியின் விதிமுறையையும், நெறிமுறைகளையும் புறக்கணித்துச் செயல்படும் சிலரின் மீது கட்சி விதிமுறைகள்படி ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்கு ஆளாகியுள்ள சிலர், கட்சியில் குழப்பம் ஏற்படுத்தி, கட்டுப்பாடுகளை சீர்குலைக்கும் செயலில் ஈடுபட்டு, 'மாநகரக் குழு' மாநாடு நடைபெற்றதாக செய்தி வெளியிட்டுள்ளனர். இதன் உண்மைத் தன்மை அறியாமல் சில ஏடுகள் செய்தியைப் பிரசுரித்துள்ளன. ஒழுங்கு நடவடிக்கையில் உள்ளவர்கள், வெளியிட்ட செய்திக்கும், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வாறு அறிக்கையில் கூறியுள்ளார்.

### விருதுநகர் மாவட்டத்தை முதன்மை மாவட்டமாக்கிட செயல்திட்டம் உருவாக்கிட வலியுறுத்தி

# இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாதயாத்திரை




விருதுநகர் மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்,பில், மாவட்ட மக்களின் வாழ்வுரிமை பாதுகாப்பு வளர்ச்சி அடிப்படையில் முதன்மை மாவட்டமாக உருவாக்க, இதற்கான செயல் திட்டத்தை பொது மக்களிடம் விளக்கி மூன்று முனைகளில் இருந்து பாதயாத்திரை தொடங்கியது.

வத்திராயிருப்பு பாதயாத்திரையை மாநில செயலாளர் இரா.முத்தரசன் தொடங்கி வைத்தார். மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ தலைமை வகித்தார். வி.அழகிரிசாமி எக்ஸ்.எம்.பி, பொன்னுபாண்டியன் எக்ஸ் எம்.எல்.ஏ., வட்ட செயலாளர் கோவிந்தன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

சொக்கநாதன்புத்தூர் பாதயாத்திரையை தேசிய நிர்வாககுழு உறுப்பினர் சி.மகேந்திரன் தொடங்கி வைத்தார். மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ்.எம்.பி. தலைமை வகித்தார். மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், இளைஞர் மன்ற மாவட்ட செயலாளர் கணேசமூர்த்தி, ஏஐடியுசி மாவட்ட செயலாளர் முத்துமாரி, ஏஐடியுசி மாவட்ட தலைவர் சமுத்திரம், இடைக்கமிட்டி செயலாளர்கள் இராமச்சந்திரன், நடராஜன் ,விஜயன், தவிதொச மாவட்ட செயலாளர் வரதராஜன், வழக்கறிஞர் பகத்சிங், மாவட்ட நிர்வாககுழு உறுப்பினர் வி.இரவி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பரளச்சி பாதயாத்திரையை தவிச மாநில தலைவர் எஸ்.குணசேகரன் எக்ஸ் எம்எல்ஏ தொடக்கி வைத்தார். மாநில குழு உறுப்பினர் எஸ்.செந்தில்குமார் தலைமை வகித்தார்.திருச்சுழி வட்ட செயலாளர் செல்வம், அருப்புக்கோட்டை வட்ட செயலாளர் முனியசாமி, சாத்தூர் வட்ட செயலாளர் சாமிநாதன் மாவட்ட குழு உறுப்பினர் இளங்கோ உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த பாதயாத்திரை மூன்று குழுவினரும் ஒரு வார காலம் மாவட்டம் முழுவதும் மக்களை சந்தித்து மக்களின் தேவைகளை, அடிப்படை பிரச்சினைகளை கேட்டறிந்தும் பிரச்சாரம் செய்தார்கள்.

**மாவட்ட ஆட்சியரிடம் செயல் திட்டம் அளிப்பு**

7 நாட்கள் மாவட்டம் முழுவதும் நடந்து சென்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து சேர்ந்தனர்.

இந்தக் குழுவினர் மாவட்ட ஆட்சியர் மேகநாதரெட்டி யிடம், மக்களின் வாழ்வுரிமை பாதுகாப்பு வளர்ச்சி என்ற அடிப்படையில் முதன்மை மாவட்டமாக மாற்றுவதற்கான செயல் திட்டத்தின் அறிக்கையினை வழங்கினர். குழுவின் தலைவர்கள் மாநில நிர்வாககுழு உறுப்பினர் தி.இராமசாமி எக்ஸ் எம்எல்ஏ, மாவட்ட செயலாளர் பி.லிங்கம் எக்ஸ் எம்பி, மாநில குழு உறுப்பினர் எஸ்.செந்தில்குமார், மாவட்ட துணை செயலாளர் எஸ்.பழனிக்குமார், பொன்னுபாண்டியன் எக்ஸ்.எம்.எல்.ஏ. ஆகியோர் மாவட்ட ஆட்சியரிடம் விளக்கி கூறினர்.

# ஏஐடியூசி போக்குவரத்து தொழிலாளர்கள் ஆர்பாட்டம்

தருமபுரி மாவட்ட ஏஐடியூசி அரசு போக்குவரத்து கழக தொழிலாளர் சங்கத்தின் சார்பில், பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி பாரதி புரம் போக்குவரத்து மண்டல அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடைபெற்றது.

ஆர்பாட்டத்திற்கு மண்டல தலை வர் ரவி தலைமை வகித் தார். உள்ளாட்சி பணியாளர் சங்கத்தின் மாநில செயலாளர் எம்.ராதா கிருஷ்ணன்,ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் கே.மணி,மாவட்டத் தலைவர் மாதேஸ் வரன்,கட்டுமான சங்க மாவட்டச் செயலாளர் ஆர்.சுதர்சனன், போக்கு வரத்து கழக மண்டல பொது செயலாளர் நாகராஜ், ஆகியோர் கோரிக்கைகளை வலியுறுத்தி பேசினார்கள்.

ஆர்பாட்டத்தில் 14வது ஊதிய ஒப் பந்தத்தை கால தாமதம் செய் யாமல் பேசி முடிக்க வேண்டும். இலவச பயணத்திற்கான தினசரி இன்சென்டிவ் வழங்க வேண்டும். ஒய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு ஒய்வு கால பணப்பலன்களை வழங்க வேண்டும்.80 மாத நிலுவை அகவிலைப்படி உயர்வு ஒப்பந்தப்படி ஒய்வு பெற்ற தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.காலிப் பணி யிடங்களை நிரப்ப வேண்டும். கல்வி தகுதிக்கேற்ப வாரிசு பணி வழங்க வேண்டும் ஒசூர் நகர கிளை மேலாளர் அவசர காலக்கட்டங்களில் கூட தொழிலாளர்களுக்கு விடுமுறை வழங்குவதில்லை.எனவே விடுமுறை மறுக்கும் மேலாளர் மீது உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். ஒசூர் நகர கிளையில் பணியாற்றும் கட்டுப்பாட்டாளர் பணம் வாங்கி கொண்டு பணி போடுவதை வழக்கமாக கொண்டுள்ள அவர் மீது போக்குவரத்து துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கமிட்டனர்.

# திண்டுக்கல் மாவட்ட மாநாடு




இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் திண்டுக்கல் மாவட்ட 12வது மாநாடு வடமதுரையில் கொடியேற்றத்துடன் தொடங்கியது. இம்மாநாட்டை மாநில துணைச் செயலாளர் மு.வீரபாண்டியன் துவங்கி வைத்தார். மாநில செயற்குழு உறுப்பினர் க.சந்தானம் வாழ்த்துரை வழங்கினார். மாவட்டக்குழு செயலாளராக ஏ.பி.மணிகண்டன் ஒருமனதாக தேர்வு செய்யப்பட்டார்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள பஞ்சமி நிலங்களை போர்க்கால அடிப்படையில் மீட்டு தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வழங்க வழிவகை செய்ய வேண்டும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள கனிம வளங்களை பாதுகாக்க வேண்டும்.

பழனியில் சித்த மருத்துவ கல்லூரி அமைத்திட வேண்டும்.

நத்தத்தில் அரசு கலைக்கல்லூரி அமைத்திட வேண்டும்.

சித்தையன் கோட்டை பகுதியில் சிறுபான்மை இனமக்களுக்கு தானமாக கொடுத்த வக்பு சொத்துக்களை, வக்பு வாரியம் சீர்படுத்தி, சிறுபான்மை மக்களுக்கு அளித்திட வேண்டும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

### கோவை மாநகரில்

# தலைவிரித்தாடும் தண்ணீர் பஞ்சம்

## நடவடிக்கை எடுக்க இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்தல்

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் தண்ணீர் தட்டுப் பாட்டைப் போக்க மாநகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தனது அறிக்கையில் கூறி உள்ளார்.

கோவை மாநகராட்சிக்கு உட்பட்ட நகரின் பிரதான பகுதிகளில் குடிநீர் 15 நாட்களுக்கு ஒருமுறைதான் விநியோகம் செய்யப்படுகிறது. சிறுவாணி அணைமூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்ட பகுதிகளிலும், பில்லூர் கூட்டுக் குடிநீர் திட்டத்துடன் இணைக்கப்பட்ட சில பகுதிகளிலும், குடிநீர் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

15 நாட்களுக்கு ஒரு முறை 3 முதல் 4 மணி நேரம் மட்டுமே குடிநீர் விநியோகிக்கப்படுகிறது. அதுவும் மிக மிக குறைவான அழுத்தத்துடன் வழங்கப்படுவதால், பொதுமக்கள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகிறார்கள்.

கோவை மாநகராட்சியில் குடிநீர் வழங்கும் உரிமையை சூயஸ் நிறுவனத்திற்கு வழங்கியதிலிருந்தே இந்த நிலை தொடர்கிறது.

தண்ணீர் வரத்தும் அழுத்தமும் குறைவாக இருப்பதாலேயே விநியோகம் செய்வதில் சிரமம் உள்ளதாக விநியோகிப்பாளர்கள் தெரிவிக்கிறார்கள்.

கோவை மாநகராட்சி மேயரும், ஆணையரும் குடிநீர் வழங்குவதில் ஏற்பட்டுள்ள சிக்கலுக்குரிய காரணத்தை மக்களுக்கு தெரிவிக்க வேண்டும்.

24 மணி நேரமும் குடிநீர் வழங்கப்படும் என்ற வாக்குறுதியின் அடிப்படையில் அன்னிய நிறுவனத்திற்கு குடிநீர்விநியோக உரிமை வழங்கப்பட்டது.

குடிநீர் வடிகால் வாரியம் – மாநகராட்சி நிர்வாகம் உறவுநிலை நல்ல நிலையில் இல்லை, போதுமான அளவிற்கு மழை இருந்தும், நிலத்தடி நீர் உயர்ந்தும், கோவை நகரில் தண்ணீர் பஞ்சம் தலை விரித்தாடுவதற்கான காரணம் சூயஸ் நிறுவனத்திற்கு ஆதரவான போக்கை மாநகராட்சி அதிகாரிகள் கடைப்பிடித்து வருவதே.

தண்ணீரை விலை கொடுத்து வாங்க வேண்டிய சூழலை உருவாக்கி, மக்களை அதற்கு பழக்கப்படுத்தி, மக்களே சூயஸ் நிறுவனத்திடம் இருந்து தண்ணீரை விலை கொடுத்து வாங்கிக் கொள்ளலாம் என்ற மனோநிலைக்கு கொண்டுவருவதற்கான போக்கை மாநகராட்சி அதிகாரிகள் கடைப் பிடிக்கிறார்கள்.

எனவே, மாநகராட்சி நிர்வாகம் குடிநீர் தட்டுப்பாட்டை போக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். தவறும் நிலையில் கம்யூனிஸ்ட் கட்சி மக்களைத் திரட்டி போராடும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் வி.எஸ்.சுந்தரம் தெரிவித்தார்.

### நுகர்பொருள் வாணிபக் கழக தொழிலாளர் சங்க

# மயிலாடுதுறை மாவட்டப் பேரவை

ஏஐடியூசி நுகர்பொருள் வாணிபக் கழக சுமைதூக்கும் தொழிலாளர் சங்க மயிலாடுதுறை மாவட்ட 36 ஆண்டு பேரவை மாநில இணைப் பொதுச் செயலாளர் கே.ராஜ்மோகன் தலைமையில் நடைபெற்றது.

இறந்த சுமை தூக்கும் தொழிலாளர்கள் வடகரை கணேசன் சுரைக்காயூர் செல்வராஜ் குடும்பங்களுக்கு ரூ10,000 க்கான காசோலையை மாவட்ட செயலாளர் ஏ.சீனிவாசன், விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் இரெ. இடும்பையன் ஆகியோர் வழங்கினர். ஏஐடியூசி மாவட்ட செயலாளர் க.ராமன் கொடி ஏற்றி வைத்தார். பேரவையில் மாநில பொதுச் செயலாளர் சி.சந்திரகுமார், மாநில பொருளாளர் தி. கோவிந்தராஜன், மாநில செயலாளர்கள் எம் எஸ் கிருஷ்ணன், கே. ராஜேந்திரன், டி. சிவகுருநாதன் ஜி.ரமேஷ் ராஜா, டி.சம்பத் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

டிஎன்சிஎஸ்சி நிர்வாகத்தை தனியார் மயப்படுத்தும் நடவடிக்கையை கைவிட வேண்டும். திறந்த வெளி சேமிப்பு நிலையம், கிடங்குகளில் பணிபுரியும் சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு கூலி உயர்வு வழங்கவேண்டும் சுமைதூக்கும் பணியை டெண்டர் விடுவதை கைவிட வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

### கள்ளக்குறிச்சி ஆட்சியர் அலுவலகம் முன்பு

# ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கம் ஆர்ப்பாட்டம்

திருக்கோவிலூர் டி.மண்டபம் கிராமத்தில் பழங்குடியினரை 2011 ல் திருட்டு வழக்கு எனக் கூறி விசாரணைக்கு ஒரு கர்ப்பிணி பெண், 17 வயது சிறுமி ஒருவர் உள்பட நான்கு பெண்களை ஆய்வாளர் சீனிவாசன் தலைமையில் 5 போலிஸ்காரர்கள் அழைத்து சென்று, காட்டுபகுதியில் பாலியல் வன்கொடுமையில் ஈடுபட்ட வழக்கில், தற்போது ஆய்வாளர் சீனிவாசன் முன் ஜாமின் பெற நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனு ரத்து செய்யப்பட்டது. இதனையடுத்து ஆய்வாளர் தப்பி ஓடிவிட்டார். இவரை கைது செய்யவும், கண்டுபிடித்திட விளம்பரம் செய்திடக் கோரியும், 11 ஆண்டுகாலமாக குற்றபத்திரிக்கை தாக்கல் செய்யாத அதிகாரிகள் மீது எஸ்.சி/எஸ்.டி. வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்வேண்டும் எனவும்,



உளுந்தூர்பேட்டை வட்டம் மடப்பட்டு கிராமத்தில் முடி திருத்தும் தொழிலாளர், சலவை தெழிலாளர் ஆகிய 34 பயனாளிகளுக்கு 64/11, 12, 15, 4 சர்வே எண் 0.03 செண்ட் அரசு வீட்டு மனை ஒப்படை வழங்கியதை ஆதிக்க சக்திகள் திட்டமிட்டு அபகரிக்கும் நோக்கத்தில், போலி ஆவணங்களை ஜோடித்து வி.ஏ.ஓ., ஊராட்சி எழுத்தர் துணையோடு செயல்படுவதை தடுத்து பயனாளிகளுக்கு மீண்டும் பட்டா வகை மாற்றம் செய்து தர வேண்டும் எனவும், நாச்சியாரபேட்டை ஊராட்சி தலித் பெண் தலைவரின் நிர்வாகத்தை திட்டமிட்டு முடக்கும் செயலில் ஈடுபடும் சாதி ஆதிக்க சக்திகளுக்கு ஆதரவாக ஊராட்சி மன்ற துணை தலைவர் தேர்தலை நடத்தாமல், திருநாவலூர் பி.டி.ஓ. நிர்வாகம் கைகட்டி நிற்கும் நிலையில், மாவட்ட உள்ளாட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், கல்வராயன்மலை பகுதியில் 250 க்கு மேற்பட்ட பழங்குடியினர் மீது போடப்பட்ட பொய் வழக்கில் பல மாதங்கள் சிறையில் இருந்து விடுதலையானவர்களுக்கு வாழ்வாதாரம் நிலைக்க அரசு நிவாரணத் தொகை வழங்கிட வேண்டும்என்பன உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மா. வெங்கடேசன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் சிபிஐ மாவட்டச் செயலாளர் கே.எஸ்.அப்பாவு கண்டன உரையாற்றினார். டி.கோவிந்தராஜ், சு.தாமோதரன், இரா.நந்தகோபாலகிருஷ்ணன், இரா. கஜேந்திரன், பெ.ரீத்தா, கருணாநிதி, க.மஞ்சப்பன் மற்றும் த.வி.ச.மாவட்ட, வட்டார நிர்வாகிகள் 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

### நெசவாளர் சங்க தொழிலாளர்களுக்கு 6 மாத கூலி பாக்கி வழங்கக் கோரி

# கைத்தறி சங்க உதவி இயக்குநரிடம் முறையீடு

சக்கம்பட்டிக்கு வருகை தந்த உதவி இயக்குனர் (கைத்தறி சங்கம் ), அவர்களிடம் கைத்தறி நெசவாளர் சங்க தொழிலாளர்களுக்கு 6 மாத காலமாக தரவேண்டிய கூலி பாக்கி சம்மந்தமாக

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆண்டிபட்டி ஒன்றிய செயலாளர் பிச்சை, நகர செயலாளர் முனீஸ்வரன், மாவட்டக்குழு உறுப்பினர் ஜனசக்தி பிரபாகரன் ஆகியோர் சந்தித்து வலியுறுத்தப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாநில நிர்வாகக்குழு உறுப்பினர் ஏ.வி.அழகிரிசாமி தொலைபேசி வாயிலாக உதவி இயக்குனரிடம் பேசினார்.

தற்போதைய நிலையை கேட்டறிந்து துறை அமைச்சரிடம் பேசுவதாக உறுதி அளித்தார்கள். இன்னும் 1 வாரத்தில் பிரச்சனைக்கு தீர்வு ஏற்படும் என்று உதவி இயக்குனர் உறுதி அளித்துள்ளனர்.

நெசவாளர்களுக்கு கூலிப்பட்டுவாடா நடக்கும்வரை தொடர்ந்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முயலும் போராடும்.



# திருமண விழாவில் மாநில மாநாட்டு நிதி ரூ.10,000

திருப்பூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை தாலூகா அனைத்திந்திய இளைஞர் பெருமன்றத்தின் தலைவர் பா.முத்துக்குமார் – வே.கீர்த்தனா ஆகியோரின் திருமணத்தின்போது மணமக்களின் சார்பாக இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில மாநாட்டு நிதியாக ரூ.10,000 ரூபாயை மாநில துணைச் செயலாளர் கே.சுப்பராயன் எம்.பி. அவர்களிடம் வழங்கப்பட்டது.

# கட்சி கிளை துவக்கம் – கொடியேற்று விழா

திருவண்ணாமலை தாலுகா, தச்சம்பட்டு கிராமத்தில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி கிளை துவக்கி கொடியேற்று விழா நடைபெற்றது. கிளை செயலாளர் கே.வெங்கடேசன் தலைமையில் நடைபெற்றது. மாநில செயலாளர் இரா.முத்தரசன் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு கட்சியின் கொடியை ஏற்றி சிறப்புரை ஆற்றினார். மாவட்ட செயலாளர் வே.முத்தையன், மாவட்ட துணை செயலாளர் இரா. தங்கராஜ், மு. மாவட்ட செயலாளர் கு.ஜோதி, மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர்கள் த.ராசேந்திரன், ஆ.கி.அரசு, மாவட்டக்குழு உறுப்பினர் சு.கிருஷ்ணராஜ், தேவனூர் ஆர். ராமமூர்த்தி, எம். ஞானவேல், கு. பாலாஜி நகர செயலாளர் வாழ்த்துரை வழங்கினர். பல்வேறு கிளைகளிலிருந்து தோழர்கள் திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை தச்சம்பட்டு கிளை தோழர்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# பெயர் சூட்டும் விழா

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சேலம் மாவட்ட செயலாளர் தோழர் ஏ.மோகன் – எம்.லட்சுமி அவர்களின் இளைய மகன் எம்.சோசலிசம் – எஸ்.மம்தாபானர்ஜி ஆகியோரின் குழந்தைக்கு இந்தியக் கம்யூனிஸட் கட்சியின் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன், எம்.எஸ். ஏங்கெலிசம் என பெயர் சூட்டினார். இதில் மாவட்ட பொருளாளர் எம்.ராமன், ஒன்றிய செயலாளர் எம்.பாலன், மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர் எஸ்.பாலன், மாவட்ட குழு உறுப்பினர்கள் எஸ்.ராஜி, பா.தினேஷ், கிளைச் செயலாளர்கள் எம்.பாரதி, ஆர்.பகத்சிங், இளைஞர் பெருமன்றத்தின் ஒன்றிய தலைவர் எம்.லெனினிசம், எல்.கௌசல்யா, பி.சரவணன், பி.வினோத்குமார் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

# தருமபுரியில் வி.தொ.ச. பிரச்சார இயக்கம்

தருமபுரி மாவட்ட விவசாய தொழிலாளர்களின் அடிப்படை பிரச்சினைகளை தீர்க்க வேண்டி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கம் தருமபுரி மாவட்டக்குழு கடந்த ஜீன் ஒன்றாம் தேதி முதல் பதினைந்து தினங்கள் மாவட்டம் முழுவதும் பிரசாரம் செய்து துண்டு அறிக்கை வினியோகம் செய்தனர்.

தருமபுரி நகரத்தில் சங்க மாவட்ட செயலாளர் ஜெ.பிரதாபன், மாவட்ட தலைவர் ஜி.மாதையன், ஒன்றிய செயலாளர் ஜி.பச்சாகவுண்டர், மாவட்ட நிர்வாகக்குழு உறுப்பினர் வெ.பை.மாதையன், சங்க நிர்வாகிகள் ஜி.சம்பத், முனுசாமி ஆகியோர் நான்முனை சாலை, நகர பேரூந்து நிலையம், புறநகர பேரூந்து நிலையம், வட்டாச்சியர் அலுவலகம் வளாகத்தில் துண்டு அறிக்கை வினியோகம் செய்தனர். இந்த பிரச்சார இயக்கத்தினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தருமபுரி மாவட்டக்குழு உறுப்பினர் ஏ. பொன்மாரி முடித்து வைத்தார்.

# தியாகி விஸ்வநாததாஸ் பிறந்தநாள் கொண்டாட்டம்

தமிழ்நாடு மருத்துவர் நலச்சங்கம் திருவாரூர் மாவட்ட அமைப்பின் சார்பாக சுதந்திரப் போராட்ட தியாகி விஸ்வநாததாஸ் அவர்களின் 137வது பிறந்த நாள் சிறப்பாக கொண்டாடப்பட்டது. நகரத் தலைவர் மதியழகன் தலைமை ஏற்றார். மாவட்ட தலைவர் த.ராமன், மாவட்ட பொருளாளர் த.ரமேஷ், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற திருவாரூர் செயலர் வீர.தர்மதாஸ் சிறப்புரையாற்றினார்.

## நவீன தமிழகம் மொழி, மதம், அடையாளம்

இன்றைய தமிழ் சமூகத்தின் நவீன மொழி, மத, அடையாளங்கள் குறித்து பல்வேறு அறிஞர்களின் கருத்துக்களின் தொகுப்பே இந்நூல். இந்நூலை ரவி வைத்தீஸ்வரன், ரா. ஸ்தனிஸ்லாஸ் இருவரும் தொகுத்துள்ளனர்.

நவீன தமிழ் கலாச்சார பண்பாட்டு இயக்கங்களை புரிந்துகொள்வதற்கு நாம் 16ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் நமது நாட்டுக்கு வருகை புரிந்த மேலை நாடுகளின் குறிப்பாக, ஆங்கிலேய ஆட்சியால் ஏற்பட்ட மாற்றங்களைக் கணக்கில் எடுப்பது அவசியமாகும். இந்த மாற்றங்களில் அரசியல்,நிர்வாகம், சுகாதாரம் ஆகிய துறைகள் மட்டும் அடங்காமல் தமிழ் சமூகத்தின் அறிவியல், சமயம், மொழி, பண்பாடு போன்ற அகவய கூறுகளிலும் பெரும் மாற்றத்தையும் ஏற்படுத்தியது. அதிகபடியான ஆய்வாளர்கள் காலனி ஆட்சியில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார மாற்றங்களில் தங்கள் கவனத்தை குவித்தனர். காலனி ஆட்சியால் வந்த அகவய மாற்றங்கள் குறிப்பாக அறிவியல், சமயம்,மொழி, இனம் போன்ற மாற்றங்களை தெளிவாக அடையாளப்படுத்தவோ, கணக்கில் எடுக்கவோ இயலாமல் பின்தங்கியவர்களாகவே இருக்கிறார்கள். தேசிய உணர்வு, மதம், கலாச்சாரம், மொழி பற்று, இனம் போன்ற அம்சங்கள் எப்போதுமே இருந்த மாறாத விடயங்கள் என்ற பொதுப்புத்தி நியாயத்தையே ஏற்றுக்கொள்ள செய்தார்கள்.




இவ்வகையான அறிவியல் பண்பாட்டு கலாச்சார மாற்றங்களை முதன்மைப்படுத்தும் அணுகுமுறைகள் 1970களின் இறுதி கட்டத்தில்தான் சமூகவியல், வரலாறு,இலக்கியம் போன்ற துறைகளில் மேலோங்க தொடங்கின என நூலாசிரியர் ரவி வைதீஸ்வரன் தனது முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார்.

இந்திய கலாச்சார மறுமலர்ச்சி மற்றும் சீர்திருத்த முன்னோடிகள் தமது நவீன தேசிய கலாசார இயக்கங்களை தோற்றுவித்தனர். இதனூடே இவர்கள் நவீன இந்திய தமிழ் கலாச்சார அடையாள அரசியலுக்கு அடித்தளம் இட்டனர். இவர்கள் ராஜாராம் மோகன்ராய்,தயானந்த சரஸ்வதி, மறைமலையடிகள், அயோத்திதாசர் ஆகியோர் கட்டமைத்த இயக்கங்களான பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், திராவிட தனித்தமிழ் இயக்கம், ஆதிதிராவிடர், நவீன பௌத்த பொது இயக்கங்கள் ஆகியவை இத்தகைய காலனிய காலத்தில் வழிவந்த கீழைத்தேய ஆராய்ச்சிகளில் இந்திய குறித்து கட்டமைத்த தமது கருத்தியல் உருவாக்கத்தை முன்னெடுத்தனர். இவர்கள் நவீன கால இந்திய தமிழ் கலாச்சார இயக்கங்களுக்கும், அசைவுகளுக்கும் வரலாற்றுத் தடங்களுக்கு அடித்தளமிட்டனர் என்று கூறுவது மிகையாகாது என குறிப்பிடுகிறார். இந்நூல் பல்வேறு விவாதங்களுக்கும், ஆய்வுக்குரிய நூலாகவும் உள்ளது. இந்நூல் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறோம் – **சமரன்**

**ஆசிரியர் : ரவி வைத்தீஸ்வரன், ரா ஸ்தானிஸ்லாஸ்**
**வெளியீடு : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், 41–பி, சிட்கோ இன்டஸ்ட்ரியல் எஸ்டேட்,அம்பத்தூர், சென்னை 50**
**பக்கங்கள் : 270 விலை: ரூ.270**

# நூல் நயம்

## வலி தாங்கும் மூங்கில்

வலி தாங்கும் மூங்கில் என்னும் இந்நூல் ஒரு தன்னம்பிக்கை நூல் ஆகும். இந்நூலை ஞா. சந்திரன் சிறப்பாக எழுதியுள்ளார்.

பல்வேறு சிந்தனை மாற்றங்கள் சமூகத்தில் நிகழ்ந்திருக்கின்றன. வர்க்க ரீதியான போராட்டத்திற்கும், தர்க்கரீதியான போராட்டத்திற்கும் தீர்வாக அமைவது சிந்தனை மாற்றமே.

நாம் முழுமையான அர்ப்பணிப்புடன் பணியாற்றினால். பணியில் அவ்வப்போது தோல்வி வந்தாலும் சோர்ந்து போகாமல், இறுதியில் வெற்றி காணும் மனவுறுதியை எளிதாக எட்டிவிட முடியும் என நூலாசிரியர் ஞா.சந்திரன் குறிப்பிடுகிறார்.

தன்னால் எதுவும் முடியாது என்ற தாழ்வு குணம் எத்தனையோ இளைஞர்களை எதற்கும் உதவாமல் செய்திருக்கிறது. என்னால் எதுவும் முடியும் என்ற நம்பிக்கை எண்ணத்தை எப்போதுமே வளர்த்துக் கொள்ள வேண்டும். நமது இன்றைய எண்ணங்கள்தான் எதிர்காலத்தை சிறப்பாக அமைக்க உதவும்.




எதை வேண்டுமானாலும் கற்றுக் கொள்வது என்பதை விட, வாழ்க்கைக்கு தேவையானதை தேர்ந்தெடுத்து கற்பது தான் சிறந்த கலை. அதுவே சிறந்த கல்வி. கல்வி ஒருவனுக்கு முழு வளர்ச்சியை தரவேண்டும். நல்ல கல்வி நல்ல குணத்தையும், ஒழுக்கத்தையும் தரவேண்டும் அப்பொழுதுதான் வாழ்க்கை நம் வசமாகும்

துன்பங்கள் தாம் நம்முடைய ஆற்றல்களை நெறிப்படுத்தி ஆக்கபூர்வமாக செயல்பட உதவுகின்றன. எனவே துன்பத்தை கண்டு நாம் கலங்க வேண்டியதில்லை. மனதைரியத்தோடு நாம் அனைத்தையும் எதிர்கொண்டால் வெற்றி நம் வசமே. அவமானங்கள் நம்மை முறுக்கேற்றுவதற்கே, முடக்குவதற்கு அல்ல என்ற உறுதியோடு செயல்பட வேண்டும். பொறுமை என்கிற பொக்கிஷம் நம்மிடம் உள்ள போது மற்ற எல்லா செல்வங்களும் நம்மை தேடி வரும்.

அன்பும் அமைதியும் மனதில் குடிகொள்ளும் போது மனநிறைவும், மனமகிழ்ச்சியும் அங்கே ஆட்சி நடத்துகின்றன.

அப்பொழுது துன்பம் நம்மை சூழாது விலகி ஓடும். எனவே வலி தாங்கும் மூங்கில் தான் புல்லாங்குழல் ஆகிறது என்கிற மன உறுதியோடு வாழ்க்கையை வாழ வலியுறுத்துவது இந்நூல். இன் நூலை அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டுகிறேம்

– **இன்சுவை பாரதி**

**நூலாசிரியர் : ஞா. சந்திரன்**
**வெளியீடு : பாவை பப்ளிகேஷன்ஸ்,142 ஜானி ஜான் கான் சாலை, ராயப்பேட்டை, சென்னை – 14**
**பக்கங்கள் : 90 விலை: ரூ.80**

**வாரம் தோறும் வெளிவரும்**
**ஜனசக்தி - நூல் நயம்**
புத்தக விமர்சன பகுதிக்கு அனைத்துப் பதிப்பகங்களின் புத்தகங்களும் வரவேற்கப்படுகின்றன. புத்தகங்களை அனுப்புவோர் 2 பிரதிகள் அனுப்ப வேண்டும்.
தொடர்புக்கு : 8220468816

அனுப்பவேண்டிய முகவரி:
**ஜனசக்தி**
பாவை பிரிண்டர்ஸ் மாடி
142/16 ஜானி ஜான்கான் ரோடு, இராயப்பேடடை,
சென்னை - 600014

செய்தித்தொகுப்பு: அருண் அசோகன்

சுழலும் உலகம்

## கொலம்பியா அதிபர் தேர்தல்:

# இடதுசாரி தலைவர் குஸ்தவோ பெட்ரோ வெற்றி!



போகோடா நகரின் முன்னாள் மேயரும் இடதுசாரி தலைவருமான குஸ்தவோ பெட்ரோ கொலம்பியா அதிபர் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார். அவரை எதிர்த்து போட்டியிட்ட ரோடோல்ஃபோ ஹெர்னாண்டஸை விட 7,16,890 வாக்குகள் அதிகம் பெற்று குஸ்தவோ சாதனை படைத்துள்ளார்.

“இன்று நாம் எழுதிக் கொண்டிருக்கும் அத்தியாயம், கொலம்பியா, இலத்தீன் அமெரிக்கா மற்றும் உலகத்திற்கான ஒரு புதிய அத்தியாயம்.” என்று வெற்றி பெற்றுள்ள குஸ்தவோ பெட்ரோ கருத்து தெரிவித்துள்ளார்.

கொலம்பியா நாட்டின் வரலாற்றில் முதன்முதலாக இடதுசாரி, ஜனாதிபதியாக குஸ்தவோ பெட்ரோ தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். கொரில்லா இயக்கத்தின் முன்னாள் உறுப்பினரான, பொருளாதார நிபுணர் குஸ்தவோ பெட்ரோ, ஆழ்ந்த சமூக மற்றும் பொருளாதார மாற்றத்திற்கு உறுதியளித்துள்ளார்.

இலவச பல்கலைக்கழகக் கல்வி, ஓய்வூதிய சீர்திருத்தங்கள் போன்றவற்றை அமல்படுத்தப் போவதாக பெட்ரோ கூறி உள்ளார். மேலும், உற்பத்தி செய்யாத நிலத்தின் மீது அதிக வரிகள், சமத்துவமின்மை ஆகியவற்றை எதிர்த்துப் போராடவும் உறுதியளித்துள்ளார்.

பெட்ரோவின் முன்மொழிவுகள் குறிப்பாக புதிய எண்ணெய் திட்டங்களுக்கான தடை – சில முதலீட்டாளர்களைத் திடுக்கிட வைத்துள்ளது. இருப்பினும், தற்போதைய ஒப்பந்தங்களை மதிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

அவர் ஒரு நல்ல ஜனாதிபதியாக இருப்பார் என்றும், வசதி குறைந்தவர்களுக்கு அவர் உதவுவார் என்றும் நாடு நன்றாக மாறப்போகிறது என்றும் அரசியல் நோக்கர்கள் கருத்து கூறி வருகின்றனர்.

இது பெட்ரோவின் மூன்றாவது ஜனாதிபதி முயற்சியாகும். மேலும், அவரது இந்த வெற்றியானது சமீபத்திய ஆண்டுகளில் முற்போக்கு வேட்பாளர்களைத் தேர்ந்தெடுத்த இலத்தீன் அமெரிக்க நாடுகளின் பட்டியலில் சேர்கிறது.

62 வயதான பெட்ரோ, கொரில்லாக்களுடன் ஈடுபாடு கொண்டதற்காகத் தான் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டிருந்தபோது, இராணுவத்தால் சித்திரவதை செய்யப்பட்டதாகக் கூறி உள்ளார். பெட்ரோவுடன், ஃபிரான்சியா மார்கஸ், ( முன்னாள் வீட்டுப் பணிப்பெண்) நாட்டின் முதல் ஆப்ரோ கொலம்பிய பெண் துணை அதிபராக இருப்பார்.

பெட்ரோ கிளர்ச்சியாளர்களுடனான 2016 அமைதி ஒப்பந்தத்தை முழுமையாக செயல்படுத்தவும், இயங்கிக் கொண்டிருக்கும் கொரில்லாக்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தப் போவதாகவும் கூறி உள்ளார்.

வாழ்த்துக்கள் பெட்ரோ! உங்கள் கனவு மட்டுமல்ல, மக்கள் கனவும் மெய்ப்படும்!!

## கருத்தொற்றுமையின் அடிப்படையில்

# உலக வர்த்தக அமைப்பு சீரமைக்கப்பட வேண்டும்!

### உலக வர்த்தக அமைப்பு மாநாட்டில் கியூபா வலியுறுத்தல்

உலக வர்த்தக அமைப்பின் அமைச்சர்கள் மட்டத்திலான 12வது மாநாடு ஜெனிவா நகரில் ஜூன் 12 முதல் 15 வரை நடைபெற்றது. இம்மநாட்டில் கியூபா நாட்டின் வர்த்தகம் மற்றும் முதலீட்டுத்துறை அமைச்சர் சமர்ப்பித்த தொடக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளதன் சுருக்கம் பின்வருமாறு:

12வது அமைச்சர்கள் மாநாட்டினை சிறப்பாக ஏற்பாடு செய்தமைக்காக, குறிப்பாக, கஜகஸ்தான் நாட்டிற்கு கியூப நாட்டின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கோவிட் 19 பெருந்தொற்று ஏற்படுத்திய கடும் விளைவுகளுடன் உலக மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இந்த விளைவுகள் பல பரிமாணங்கள் கொண்ட நெருக்கடியையும், வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை மேலும் தீவிரமடையச் செய்துள்ளது.

நவீன தாராளமய உலகமயமாக்கம் மற்றும் ஏற்றத்தாழ்வு கொண்ட சர்வதேச பொருளாதார அமைப்பு முறை ஆகியவை வளர்ச்சி மற்றும் மேம்பாட்டை வென்றெடுப்பதற்கான காத்திரமான வழியன்று என்பது நிரூபணமாகி உள்ளது. உலக வளர்ச்சிப் போக்கில் இருந்து எண்ணற்ற நாடுகள் புறம்தள்ளப்பட்டுள்ளன.

கோவிட் 19 பெரும்தொற்று தாக்கத்திற்கு முன்பே, தோகா பேச்சுவார்த்தையில் ஏற்பட்ட சுணக்கம், மேல் முறையீட்டு ஆணையத்திற்கான புதிய உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் முறையில் உள்ள இடையூறுகள், அதிகரிக்கும் எதேச்சதிகார நடவடிக்கைகள் மற்றும் மிகவும் பலவந்தமாக அத்தகைய நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது உள்ளிட்ட பல்வேறு தீவிர பிரச்சினைகளை உலக வர்த்தக அமைப்பு எதிர்கொண்டு வந்திருக்கிறது.

மேற்சொன்ன பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கான அரசியல் உறுதிப்பாடற்ற வளர்ந்த நாடுகள் உலக வர்த்தக அமைப்பின் செயல்பாட்டை முடக்கி உள்ளன. சில உறுப்பு நாடுகள் உலக வர்த்தக அமைப்பில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று முன்மொழிந்துள்ளன. தோகா செயல் திட்டத்தின் முடிவுகளும், அவற்றின் அடிப்படையில் ஏற்கப்பட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. கருத்தொற்றுமை, வெளிப்படைத்தன்மை மற்றும் அனைத்து உறுப்பு நாடுகளின் சீரிய பங்கேற்பின் அடிப்படையில் உலக வர்த்தக அமைப்பு சீரமைக்கப்பட வேண்டும். ஏற்றத்தாழ்வுகளை மேலும் ஆழப்படுத்தும் புதிய முன்மொழிவுகள் சீர்திருத்தங்கள் ஆகாது. சமத்துவமின்மையை முன்னெடுக்கும் நடவடிக்கைகளை உலக வர்த்தக அமைப்புக்கான சீர்திருத்தம் என்று கருதிவிட முடியாது.

உலக வர்த்தகத்தில் கியூபாவின் மிகக்குறைந்த அளவிலான பங்கேற்பு காரணமாகவோ, வளர்ந்து வரும் ஒரு சிறிய தீவு தேசம் என்பதாலோ மட்டுமின்றி, 60 ஆண்டு காலமாக அமெரிக்க அரசாங்கம் விதித்து வரும் பொருளாதார, வணிக, மற்றும் நிதி தடைகளின் தீவிர விளைவுகள் காரணமாகவும், குறிப்பாக பெருந்தொற்று காலத்தில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு அமெரிக்க தடைகளின் விளைவுகள் தீவிரமடைந்த காரணத்தால் கியூப பொருளாதாரம் பலவீனம் அடைந்துள்ளது.

அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள பொருளாதார மற்றும் வணிகத் தடைகள் பலதரப்பு வர்த்தக அமைப்பின் விதிமுறைகள் மற்றும் கோட்டுப்பாடுகளை மீறுவதாக உள்ளன. உலக நாடுகளுடனான கியூபாவின் நியாயமான வர்த்தக உறவுகளின் இயல்பான மேம்பாட்டிற்கு எதிரான ஒரு மாபெரும் தடையாக அமெரிக்க அரசாங்கம் விதித்துள்ள பொருளாதாரத் தடைகள் உள்ளன. அமைதியை விரும்பும் யுகத்தில், அமெரிக்கா விதித்துள்ள தடைகள் ஒரு பொருளாதார போர் நடவடிக்கை ஆகும்.

தற்போதுள்ள நாணய மதிப்பின்படி, அமெரிக்கா கடைபிடித்து வரும் கியூப எதிர்ப்பு பொருளாதாரக் கொள்கை காரணமாக கியூபாவிற்கு ஏற்பட்டுள்ள மொத்த இழப்புகளின் மதிப்பு சுமார் 1,50,410 மில்லியன் அமெரிக்க டாலர் ஆகும். 2021ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கி ஜூலை மாதம் வரையில் கியூபாவின் வர்த்தக பாதிப்பு 923 மில்லியன் அமெரிக்க டாலர் என்ற நிலையைக் கடந்தது.

கியூபாவுக்கு எதிரான அமெரிக்காவின் தடைகள் உலக வர்த்தக அமைப்பின் நோக்கங்கள் மற்றும் கோட்பாடுகளுக்கு எதிரானவை ஆகும். இந்தப் பொருளாதாரத் தடைகள் வளர்ச்சி மற்றும் மேம்பாட்டிற்கான மக்கள் உரிமைக்கு எதிரானதாகும்.

மக்கள் நலனை அடிப்படையாகக் கொண்ட சுதந்திரமான வர்த்தக செயல்பாடுகளை முடக்குவதால், அமெரிக்கா விதித்துள்ள பொருளாதாரத் தடைகளை நிராகரித்திட வேண்டும்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# ‘வாய்தா’ திரைப்படக் குழுவினருக்கு பாராட்டு விழா




தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றம் மற்றும் அனைத்திந்திய முற்போக்குப் பேரவை இணைந்து ‘வாய்தா’ திரைப்படக் குழுவினருக்கு பாராட்டுவிழா மற்றும் கவிதை நூல்கள் வெளியீட்டு நிகழ்ச்சியை சென்னை எழும்பூர், பாந்தியன் சாலையில் உள்ள இக்சா மையத்தில் ஜூன் 16 அன்று மாலை நடத்தின.

இயக்குநர் மகிவர்மன் இயக்கிய, புதுமுக கதாநாயகர் புகழ் மகேந்திரன் நடித்த திரைப்படம் ‘வாய்தா’ நீதித்துறையில் நிலவும் அவலங்களையும், நீதியை பெறுவதற்கு சாமானிய மக்கள் படும் துன்ப துயரங்களையும் இப்படம், படம் பிடித்து காட்டியுள்ளது. கிராமப்புறங்களில் நிலவும் சாதீய பாகுபாடுகளையும், தீண்டாமையையும் மனக்கண் முன் கொண்டுவருகிறது.

இதில் நடித்துள்ள கலைஞர்கள் தங்களின் திறமையை அற்புதமாக வெளிப்படுத்தியுள்ளனர். எனவே, அவர்களை கொண்டாடும் வகையில் , ‘வாய்தா’ திரைப்படக் குழுவிற்கு பாராட்டுவிழாவை, தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றமும், அனைத்திந்திய முற்போக்குப் பேரவையும் இணைந்து நடத்தின. அதே போல், அந்நிகழ்வின் பொழுது கவிதை நூல்களும் வெளியிடப்பட்டன.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் வழிகாட்டுக் குழு உறுப்பினர் ஜீவா மணி குமார் இவ்விழாவிற்கு தலைமை தாங்கினார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்ற சென்னை மாவட்டச் செயலாளர் பேராசிரியர் கணபதி இளங்கோ முன்னிலை வகித்தார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் சி.இராமலிங்கம் வரவேற்புரையாற்றினார். தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்றத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் த. அறம் துவக்கவுரையாற்றினார்.

இயக்குனர் சி.எஸ்.மகிவர்மன், கதாநாயகர் புகழ் மகேந்திரன், கதாநாயகி ஜெசிகா, நடிகர் திருநாவுக்கரசு, பாடகர் அறந்தை பாவா உள்ளிட்டோரை பாராட்டி, தமிழ்நாடு ஏஐடியூசி பொதுச் செயலாளர் டி.எம்.மூர்த்தி சிறப்புரையாற்றினார்.

கவிஞர். ராஜ பாரதி எழுதிய ‘ஆழ்முகி’ கவிதை நூலை டாக்டர் ஏ.ஆர். சாந்தி (தேசிய நிர்வாகக் குழு உறுப்பினர், அனைத்திந்திய முற்போக்குப் பேரவை) வெளியிட்டார். ஒடுக்கப்பட்டோர் வாழ்வுரிமை இயக்கத்தின் மாநிலச் செயலாளர் கீ.சு.குமார் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

கவிஞர்.யாழினி முனுசாமி எழுதிய ‘காற்றில் அலையும் சொற்கள்’ கவிதை நூலை தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் டி.எஸ்.நடராஜன் வெளியிட்டார். தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் காஞ்சிபுரம் மாவட்டப் பொருளாளர் எஸ்.சங்கர நாராயணன் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.

கதாநாயகன் புகழ் மகேந்திரன், இயக்குநர் மகிவர்மன், நடிகர் திருநாவுக்கரசு மற்றும் நூலாசிரியர்கள் கவிஞர்கள் ராஜபாரதி, யாழினி, முனுசாமி ஆகியோர் ஏற்புரை வழங்கினர்.

அனைத்திந்திய முற்போக்கு பேரவையின் மாநில பொதுச் செயலாளர், டாக்டர் ஜி.ஆர். இரவீந்திரநாத் நிறைவுரையாற்றினார். கவிஞர் அறந்தை பாவா மற்றும் பாவை சேது லெட்சுமி ஆகியோர் பாடல்களைப் பாடினர்.

தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சென்னை மாவட்ட துணைச் செயலாளர், செ.புஷ்பராஜ் நன்றி நவின்றார். இதில் ஏராளமான கலை இலக்கிய படைப்பாளிகள் கலந்து கொண்டனர்.

# அக்னி பாத் திட்டத்தை எதிர்த்து ... இளைஞர் பெருமன்றம் போராட்டம் ...

ஒன்றிய அரசு அக்னிபாத் என்ற பெயரால் காண்ட்ராக்ட் முறையில், இந்திய இராணுவத்திற்கு ஆளெடுக்கும் புதிய ஆட்சேர்ப்பு திட்டத்தை வெளியிட்டுள்ளது. 17.5 வயதிலிருந்து 21 வயதுக்குட்பட்ட இளைஞர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும். ஒவ்வொரு ஆண்டும் சுமார் 46,000 இளைஞர்கள் பணியாற்றும் வாய்ப்பைப் பெறலாம்.சிலமாத பயிற்சி மட்டுமே கொடுத்துவிட்டு நாட்டை பாதுகாக்கும் வேலை வழங்குகிறார்கள். இத்திட்டத்தில் குறைந்த சம்பளம், 4 ஆண்டு ஒப்பந்தம், பென்சன் கிடையாது.

மேலும், அக்னிபாத் திட்டம் பல அபாயங் களைக் கொண்டுள்ளது, ஆயுதப் படைகளின் நீண்டகால மரபுகள் மற்றும் நெறிமுறைகளைத் தகர்க்கிறது மற்றும் இந்தத் திட்டத்தின் கீழ் பணியமர்த்தப்பட்ட வீரர்கள் நாட்டைப் பாதுகாக்க சிறந்த பயிற்சியும், ஊக்கமும் எப்படிப் பெறுவார்கள் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லை.

கார்ப்பரேட் முதலாளித்துவ துறை கூட 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஆயுதப் படையில் இருந்து விலகிய, வழக்கமான ராணுவ வீரர்களை தங்களுடைய நிறுவனங்களில் எவ்விதத்திலும் பணியமர்த்துவதில்லை. எனவே, அக்னிபாத் திட்டத்தின் கீழ் ஓய்வு பெறும் வீரர்களுக்கு எதிர்கால வாய்ப்புகள் எதுவுமே இருக்காது,ஆகவே இந்த அக்னிபாத் திட்டத்தை எதிர்த்து வட இந்தியா முழுவதும் இளைஞர்கள் போராடிவருகிறார்கள்.

போராடும் இளைஞர்கள் மீது தாக்குதல் மற்றும் துப்பாக்கிசூடுகள் நடத்தப்படுகின்றன. இதனைக்கண்டித்தும் அக்னிபாத் திட்டத்தை ரத்து செய்யக்கோரியும், அனைத்திந்திய இளைஞர் பெருமன்றம் சார்பில் தமிழ்நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்திய இளைஞர்கள் அனைவருக்கும் நிரந்தர மற்றும் நிலையான, கண்ணியமான வேலைவாய்ப்பை உறுதி செய்!

இராணுவத்தில் ஒப்பந்த அடிப்படையில் வேலைக்கு வீரர்களை எடுக்கும் அக்னிபாதை திட்டத்தை ரத்து செய்!

ஆண்டுக்கு 2 கோடி பேருக்கு வேலை தருவேன் என்ற வாக்குறுதியை நிறைவேற்று! படித்த இளைஞர்களுக்கு நிரந்தர வேலைவாய்ப்புகளை வழங்கு!

பல்வேறு அரசு நிறுவனங்களில் உள்ள காலிப் பணியிடங்களை உடனே நிரப்பு!

வேலைவாய்ப்பின் மீதான பாசிச ஆட்சி யின் தாக்குதலை எதிர்ப்போம்!

என்றகோரிக்கை முழக்கங்களுடன் சேலம், கோவை, வடசென்னை, திருச்சிமாநகர், திருப்பூர், நெல்லை, தென்காசி, ஈரோடு வடக்கு, ஈரோடு தெற்கு, நாகை, கடலூர், தேனி, நாமக்கல், திருச்சி புறநகர், மதுரை மாநகர் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்ற ஆர்ப்பாட்டங்களில் ஏராளமான இளைஞர்கள் கலந்து கொண்டு தேசவிரோத அக்னிபாத் திட்டத்துக்கு எதிராக முழக்கங்கள் எழுப் பினர்...

மேலும் தமிழ்நாடு முழுவதும் போராட் டங்கள் நடைபெற்று வருகிறது.

# ஞாயிறு கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்திடுக!




தமிழ் மாநில விவசாயத் தொழிலாளர் சங்கம் சார்பில், திருவள்ளூர் மாவட்டம், சோழவரம் ஒன்றியம், ஞாயிறு ஊராட்சி ஞாயிறு கிராமத்தில், அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்க கோரி பொன்னேரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் ம.சித்ரா அவர்களை சந்தித்து கோரிக்கை மனு அளிக்கப்பட்டது.

ஞாயிறு, மாபுஸ்கான் பேட்டை, அருமந்தை, வழதிகைமேடு, பெரிய முல்லைவாயல், திருநிரை, சீமாவரம், நெற்குன்றம் ஆகிய ஊராட்சிகளைச் சேர்ந்த 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்த மக்களுக்கு தேவையான மருத்துவ வசதி இந்த வட்டாரத்தில் இல்லை. கடந்த ஆட்சி காலத்தில் ஞாயிறு கிராமத்தில் இயங்கி வந்த அரசு மருந்தக கட்டிட மருத்துவமனை அரசின் கொள்கை முடிவு காரணமாக மூடப்பட்டுவிட்டது.

பின்னர் கடந்த ஆட்சியில் ஞாயிறு கிராமத்தில் தொடங்கப்பட்ட அம்மா மினி கிளினிக் மூடப்பட்டுவிட்டது. இந்நிலையில் மேற்கண்ட கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் மருத்துவ வசதி இன்றி அவதிப்படுகின்றனர். எனவே இந்த மக்கள் பயன்படுத்தும் வகையில் ஞாயிறு கிராமத்தில் அரசு ஆரம்ப சுகாதார நிலையம் அமைத்து தர வேண்டும் என்பதை வலியுறுத்தி தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்கத்தின் சார்பாக பொன்னேரி வருவாய் கோட்டாட்சியரிடம் மனு அளிக்கப்பட்டது.

இதில் தமிழ் மாநில விவசாய தொழிலாளர் சங்க மாவட்ட செயலாளர் என்.எஸ்.பிரதாப் சந்திரன், சி.பி.ஐ. புழல் ஒன்றிய செயலாளர் ஆர்.சீனிவாசன், ஞாயிறு கிராம பெரியவர் ஆர்.வேணுகோபால், ஆர்.லோகேஸ்வரராவ் ஆகியோர் பங்கேற்றனர்.












**JANASAKTHI** Tamil Weekly Phone: 044 - 28480201
Day of Publication: Every Thursday
Regd. No. TN / CH (C) / 551 / 2021-2023
WPP No: TN / PMG (CCR) /WPP/596/ 2021-2023
**Posted on 25.06.2022 at Egmore RMS 1 / Patrika Channel.**
Registered with Registarar of Newspapers for India, Under Regd No: 1222/57

## உள்ளாட்சி தொழிலாளர்களின் கோரிக்கைகள் நிறைவேற

# துணை நிற்போம்

>>1-ம் பக்கத் தொடர்ச்சி

தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க செயலாளர் ஆர்.மணியன், வழக்குரைஞர் எம்.எஸ். கிருஷ்ணகுமார், சிபிஐ வட்ட துணைச் செயலாளர் பி.அப்புசாமி உள்ளிட்டோர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் 75க்கும் மேற்பட்ட தூய்மைக் காவலர்கள் கலந்து கொண்டனர்.

நெல்லை மாவட்டம் வள்ளியூரில் காமராஜர் சிலை முன்பு மணியன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.சேதுராலிங்கம், கலைமுருகன், வேம்பு சுப்பையா, பன்னீர்செல்வம் ஆகியோர் கோரிக்கையை முன்வைத்து உரையாற்றினர்.

மதுரை மாநகராட்சி முன்பு நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் எம்.நந்தாசிங் உள்ளிட்டோர் பேசினர். சேலம் மாவட்டம் ஆத்தூரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட தலைவர் பெரியசாமி உள்ளிட்டோர் பேசினர். நீலகிரி மாவட்டம், ஊட்டி ஏ.டி.சி. திடலில் என்.தொரை தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் பி.போஜராஜ், சங்க பொதுச் செயலாளர் ஆர்.ரகுநாதன் ஆகியோர் ஆர்ப்பாட்டத்தை வாழ்த்திப் பேசினர். ஆர்ப்பாட்டத்தில் 90 பேர் கலந்து கொண்டனர். குண்டன் நன்றி கூறினார்.

மணப்பாறை நகராட்சி அலுவலகம் முன்பு சங்க கௌரவ தலைவர் முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் சௌக்கத்அலி தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. சங்க மாவட்ட செயலாளர் சுப்ரமணியன், மணப்பாறை கிளை துணைச் செயலாளர் ஜனசக்தி உசேன் ஆகியோர் உரை நிகழ்தினர். சங்க நிர்வாகிகள் பிச்சை, லீலா, ராஜேஷ், காளியப்பன் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டு கோரிக்கை முழக்கமிட்டனர்.
















# ‘அக்னிப் பாதை’ திட்டத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்

## தேசிய செயற்குழு அறிக்கை

இந்திய இராணுவப் பணிகளில் ஆட்கள் சேர்ப்புக்கான செயல்முறை, பணிச் சூழல் மற்றும் அது குறித்த விதிமுறைகளைச் சீரழிக்கும் மோடி அரசாங்கத்தின் நடவடிக்கையைக் கண்டித்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பது பின்வருமாறு:

இந்திய இராணுவத்தில் இளைஞர்களைச் சேர்த்து, இராணுவத்தைப் பலப்படுத்த உள்ளதாகக் கூறி ‘அக்னிப் பாதை’ எனும் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும் மோடி அரசாங்கத்தின் நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயற்குழு நிராகரிக்கிறது.

இராணுவத்தில் பணியாற்றும் வீரர்களின் பணிச் சூழல் மற்றும் அது தொடர்பான விதிமுறைகளை நீர்த்து போகச் செய்தால், நாட்டின் பாதுகாப்பு மற்றும் இறையாண்மைக்கு அச்சுறுத்தல் ஏற்படும் என்று கட்சி கருதுகிறது.

குறுகிய கால வேலைவாய்ப்பு அடிப்படையில் பணிக்குத் தேர்வு செய்யப்பட்டு, அரசாங்கக் கருவூலத்தின் நிதியைக் கொண்டு அவர்களுக்கு முழு அளவிலான பயிற்சி அளிப்பது மற்றும் ஒப்பந்த முறையில் பணிக்கு நியமனம் செய்வது ஆகியவை இராணுவச் சேவைகளின் தரத்தைக் குறைப்பதோடு மட்டுமின்றி முழு அளவில் பயிற்றுவிக்கப்பட்ட பணியாளர்களுக்கு தகுந்த வேலை கிடைக்காத சூழலில் அவர்களது வருங்காலமும் பாதிப்புக்கு உள்ளாகும்.

இந்திய இராணுவத்தில் பணி நியமனம், பதவி உயர்வு மற்றும் இன்ன பிறவற்றுக்கு தற்போது நடைமுறையில் உள்ள செயல்முறைகளை அரசாங்கம் சீரழிப்பதைக் கட்சி கண்டிக்கிறது.

‘அக்னிப் பாதை’ திட்டத்தை அரசாங்கம் உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும் என்றும் காலிப் பணியிடங்களை நிரப்பிட தற்போது நடைமுறையில் உள்ள விதிமுறைகளையே பின்பற்றிட வேண்டும் என்றும் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வலியுறுத்துகிறது.

சிதம்பரம் நடராஜர் ஆலயத்தை
அவசர சட்டம் மூலம் அரசு ஏற்றிட...
வீராணம் ஏரியை சுற்றுலா மையமாக்க...
பெண்ணையாறு - கெடிலம் & மணிமுத்தாறு -
வெள்ளாறுகளில் தடுப்பணை அமைத்து -
கீழ் ஊற்று வளம் காத்திட...
பண்ருட்டியில் பெண்கள் கலைக்கல்லூரி
அமைத்திட...

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின்
கடலூர் மாவட்ட 23-வது மாநாடு

நாள்: 24.06.2022 வெள்ளிக்கிழமை (மாலை 5.00 மணி)
பேரணி புறப்பாடு: ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில்,
திருவதிகை பண்ருட்டி (மாலை 3.30 மணி)
பொதுக்கூட்டம்: அன்னை இந்திராகாந்தி சாலை
(பேருந்து நிலையம் அருகில்) பண்ருட்டி

தலைமை:
தோழர் **பி.துரை,** மாவட்டச் செயலாளர்
முன்னிலை தோழர்கள்: **ஆர்.சக்திவேல்** (பண்ருட்டி நகரச் செயலாளர்),
**ஆர்.மதியழகன்** (பண்ருட்டி தெற்கு ஒ.செயலாளர்),
**கே.ஞானசேகர்** (பண்ருட்டி வடக்கு ஒ.செயலாளர்),
**ஜி.மோகன்** (அண்ணாகிராம ஒ.செயலாளர்)

சிறப்பரை தோழர்கள்:
**இரா.முத்தரசன்,** மாநிலச் செயலாளர்
**கே.சுப்பராயன்** எம்.பி. மாநில துணைச் செயலாளர்
**டி.எம்.மூர்த்தி,** மாநில செயற்குழு உறுப்பினர்
**என்.பெரியசாமி,** எக்ஸ்.எம்.எல்.ஏ. மாநில செயற்குழு உறுப்பினர்
**டி.மணிவாசகம்,** மாநில நிர்வாகக்குழு உறுப்பினர்
**வி.குளோப்,** மாநிலக்குழு உறுப்பினர்

**இவண்:**
**மாநாட்டு வரவேற்புக்குழு**

Janasakthi Tamil Weekly Published by **R. Mutharasan** and Owned by on behalf of Janasakthi Trust and Published from 43, Chevaliye Sivaji Ganesan Salai, Thiyagaraya Nagar, Chennai - 17. Editor: **K.Subbarayan .,** Editorial Phone: 044-28480201, Editorial E-mail: janasakthieditor@gmail.com, Advt Email: info.janasakthi@gmail.com Printed by **A.Sivakumar** at Pavai Printers (P) Ltd., 142/16 Jani Jan khan Road, Royapettah, Chennai - 14.